செயித்தரசன் என்னும்

# சயிந்தவ நாடகம்



B. இரத்தின நாயகர் சன்ஸ்,

நெ. 57, வெங்கட்ராமய்யர் தெரு,

விலை] சென்னை-1. [ரூ. 1·25

103024

உ

ஸ்ரீராமஜெயம்

# செயித்தரசன் என்னும்

# சயிந்தவ நாடகம்

விநாயகர் - காப்பு

விருத்தம்

சீரணிகமலக்கண்ணன் திருவடிசிரமேற்கொண்டு
தாரணியாளுகின்ற சயிந்தவன்கதையைப்பாட
நீரணிச்சடையோனென்னு நிமலனூர்மகிழ்ந்தளித்த
வாரணமுகவன்செய்ய மலரடிக்காப்புதானே.

பரமசிவ வணக்கம்

விருத்தம்

கார்தவழ்திரைசூழ்வையக் காவலர்தங்களுக்குண்
பார்புகழ்சயிந்தவன்றன் பண்பைநாடகமாயோத
வேர்திகழ்கைலைவாழு மெழிலுறுபாமன்கற்றை
வார்சடைப்பெம்மான்செய்ய மலரடிசென்னிசேர்ப்போம்.

உமையவள் வணக்கம்

விருத்தம்

அரவகேதனன்றன்சொற்படியோங்கு மைவருக்கினியளானவளைக்
கரவுசெய்திடவேகருத்ததுகொண்டோன் கதையைநாடகமாயோத
விரைசெறிவரைகள்வேந்தனுயோங்கு மேதகுபருவதன்றந்த [வாம்,
பரையெனுமுமையின்பாதபத்மங்கள் பண்புடன்சென்னிமேற்கொள்

சுப்பிரமணியர் வணக்கம்

விருத்தம்

தண்ணுளாருசிந்துசூழ்ந்த தாரணிவேந்தருக்குண்
மண்புகழ்சயிந்தவன்றன் வண்மைநாடகமாயோதப்
பண்ணிநேர்மொழியாளும் பரிவுறும்பாலனைக்குஞ்
சண்முகனுடையபொற்றுள் சந்ததம்பணிகுவாமால்.

## திருமால் வணக்கம்

### விருத்தம்

காதல்சேருலகையாண்ட காவலன்சயிந்தவன்றன்
மேதகுசரிதைதன்னை வியன்கொணாடகமாய்ச்செப்ப
பூதலத்தோர்களாதி பொன்னுலகோர்களேத்துஞ்
சீதரனென்னுமாயன் சேவடிசென்னிற்சேற்பாம்

## இலக்குமி வணக்கம்

### விருத்தம்

அங்கண்மாஞாலந்தன்னை யாண்டவர்தங்களுக்குண்
திங்களார்க்குலத்திலுற்ற செயித்தரசன்றன்கீர்த்தித்
துங்கநாடகமாயோதத் தூயவைகுண்டத்தோங்குஞ்
செங்கண்மாற்கினியளாகுந் திருமகள்பதங்கொள்வாமால்.

## கலைமகள் வணக்கம்

### விருத்தம்

தலைபலசமயத்தோருஞ் சாற்றொணாப்பொருளாலுற்ற
வலைசெறிவையந்தன்னை யாண்டமன்னவர்களுக்குண்
நிலைபிரிந்தோட்டமுற்றோ ணீதிநாடகமாயோதக்
கலைமகளென்னும்வாணி கழலிணைபணிகுவாமால்.

## அவையடக்கம்

### விருத்தம்

சேற்றினிலெழுந்ததென்றச் செங்கமலத்தைநீக்கா
தேற்றுகொள்பவர்கள்போல வெழிற்புவியுள்ளோரெல்லாம்
போற்றொணாச்சயிந்தவன்றன் புகழிருத்தலினாற்குற்றஞ்
சாற்றிடாதென்புன்சொல்லைத் தக்கவர்கொள்வரின்றே.

## தோடையம்

### கண்ணிகள்

அத்தினாபுரியாண்டதுரிய னறைந்தவாய்மையைக்கொண்டுதன்
சித்தத்துணிபுடனவர்தேவியைச் சிறைபிடித்திடவந்தவன் ஜெய

வெற்றிசேருஞ்சயிந்தவன்புகழ் விளம்பும்நாடகமாய்ச்சொல
கற்றைவார்சடைக்கடவுளீன்ற கஜானனன்கழல்பணிகுவாம் ஜெய

திருதராட்டிரன்மகனுரைப்படி சிந்துதேசமதாண்டிடும்
விருதுகொண்டசயிந்தவன்சீர் விளம்பும்நாடகமாய்ச்சொல ஜெய

ஒருதனிப்பொருளாய்விளங்கியே யும்பரியாவருமறியொணு
நிருவிகற்பசமாதியாயொளிர் நிமலனர்கழல்பணிகுவாய் ஜெய

மங்கைதிரௌபதையம்மையாரை மயக்கவந்தசயிந்தவன்
துங்கமற்றசிறப்பையானுந் துலங்குநாடகமாய்ச்சொல ஜெய

கங்கைவேணியனர்மகிழ்ந்திடு காதலிச்சொலும்பூதய
இங்கிதச்சிவகாமசுந்தரி யிணையடித்தொழுதேத்துவாம் ஜெய

அரவகேதனன்வாய்மைகொண்டொளி ரைவருக்கிடருன்னியே
தரையினோர்சொலுநாணமிற்ற தராதிபன்கதைகூறவே ஜெய

திரைசொரிக்கடலுலகைநொடிதனில் செய்யமாங்கனிகொள்ளவே
விரைகொண்மயின்மிசையேறிவருஞ்செய்தவேலவன்கழல்பணிகுவாம்

மெய்வருந்தியுலைந்துவோடலை விண்ணினோருடன்மண்ணினே
கைதவப்பயனேவெனச்சொலி கண்டுகெக்கலிகொட்டவே ஜெய

செய்துவிட்டகதாயுதன்புகழ் தேசமெங்கணுஞ்செப்பவே
ஐவர்கட்குசகாயனர்கழ லன்புடன்பணிந்தேத்துவாம் ஜெய

தூரியன்மைத்துனனென்றுவந்துழல் தோன்றலின்புகழ்கூறவே
விரைசெறிப்புகழ்திருவினோடும் விளம்பும்வாணியின்பதமதும் ஜெய

தரைபணிந்திடுவேதவாயினராதி தண்டமிழ்நாவலர்
நறைகமழ்ந்திடுநளினபொற்பத நாடியேகளிகூடுவாம் ஜெய

## மங்களம்

இராகம்-சுருட்டி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்

துன்னும்பரமனருள் தும்பிமாமுகனுக்கு மங்களம் ஜெயமங்களம்
மன்னுங்கைலையில்வாழ் மதிசூடியோனுக்குமங்களம் ஜெயமங்களம்

பன்னற்கரும்பர்வதராஜகுமாரிக்கு மங்களம் ஜெயமங்களம்
கன்னியரிருவர்கள் களிக்குங் காங்கேயற்கு மங்களம் ஜெயமங்களம்

மாதவர்கள்பணியும் வைகுந்தவாசற்கு மங்களம் ஜெயமங்களம்
சீதமதிவதனத்திருமாளாருக்கு மங்களம் ஜெயமங்களம்

ஓதுங்கலைவாணிக்குமோங்கு மறையவர்க்கு மங்களம் ஜெயமங்களம்
பூதலந்தனிலுறும்புகலும் வாணருக்கு மங்களம் ஜெயமங்களம்.

பாயிரம் முற்றுப்பெற்றது.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

# சயிந்தவ நாடகம்

## விநாயகர் வருகிற பொது விருத்தம்

இராகம்-துஜாவந்தி.

தற்பராபரனுமை யீன்றபாலன்
தந்திமுகமிந்துவடி வைந்துகையும்
முப்புரிநூலோங்க வைரசரந்துலங்க
மூஷிகவாகனமேறிக் கணங்கள்சூழக்
கற்பகமாவலர்மாரிச் சொரிந்துபோற்றக்
கவிவாணர் துதிபேசச் சபைதழைக்க
இப்புவியில்விஸ்வநகர் தன்னில்மேவும்
யெழிற்கொள்குரு கணநாதர்வருகின்றாரே.

பொது வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் ஸ்ரீ கைலாசபதியாகிய உமாமயேசனது கெற்பசுதாகர மூர்த்தியென்னும் விநாயகக் கடவுள் சபைக்கு வருகிற விதங்காண்க.

தரு, இராகம்-துஜாவந்தி, தாளம்-ஆதி.

பல்லவி

கணநாதரிதோவந்தார் ஸ்ரீகுரு
கணநாதரிதோவந்தார்

அநுபல்லவி

கணநாதரிதோவந்தார் கதைக்கருள்புரிந்திட
மணமேவியொளிர்விஸ்வ மாநகரந்தன்னில்மேவும் கண

சரணங்கள்

அங்குசபாசமுஞ் செங்கையிலேந்தி
சங்கரனருள் வெங்கையமுகமுள்ள கண

மூஷிகவாகன மீதினிலேறியே
பாஷகவல்லபை பாகன்மூர்த்திகணேசன் கண

வேதமுழங்கிட விண்ணவர் துதித்திட
ஆதிபராபர வகண்டபரிபூரண கண

### பொது விருத்தம்

பூதலமெல்லாம்போற்றிப் புகழ்விஸ்வாகரிலோங்கும்
வோதுதற்கரியவையருசி மஞ்சநீராடிக்
காதலாய்ஜெபமுடித்துங் கருதும்வெள்ளிக்கடத்திற்
சீதமென்பொருள்களோடுந் திறமுடன்வருகின்றாரே.

### பொது வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் கொடிய கடல்சூழ்ந்த உலகமனைத்தும் போற்றிப் புகழுதற்கரிதாகிய விஸ்வமாநகரமென்னுந் தலத்திற் றிருக்கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ குருகணாதரை பூஜிக்கும்படியாய் மஞ்சனமாடிச் செபதபங்களை முடித்து பயபக்தி வினயத்தோடும் வெள்ளிக்கடத்தில் மஞ்சநீரோடிக் கந்தபுட்ப பரிமளாதி வஸ்துக்களும் நிவேதனமுங்கொண்டு குருக்கள் வரும் விதங்காண்க.

தரு-இராகம்-பைரவி, தாளம்-ஆதி

### பல்லவி

சிவவேதியர்வந்தார் பூசனைபுரி
சிவவேதியர்வந்தார்

### அநுபல்லவி

தவமார்முனிவரவர்கள் புகழும்விஸ்வமாநகர்
தன்னிலுறையுங்கணாதற்குப்பணிசெய்ச் — சிவ

### சரணங்கள்

அங்கமெங்குந்திருநீறுந் துலங்கவே
அணிகொள்முப்புரிநூல் மார்பிலிலங்கவே — சிவ

திகழும்வெள்ளிக்கடத்திற் றிருமஞ்சனமுங்கொண்டு
தெய்வமணங்கமழும் சீரடியதைக்கண்டு — சிவ

கந்தபுட்பதாம்பூலங் களிப்புடனேயெடுத்து
கருதருங்கணாதன் கழலிணையையடுத்து — சிவ

முப்பழமவற்பொரி மோதகமுமெடுத்தே
மூஷிகவாகனன்மேல் முதியகாதல்தொடுத்தே — சிவ

### பொது விருத்தம்-தோடி

வேதியர்தாமுமந்த வேழமாமுகவனுக்கு
மோதுமஞ்சனநீராட்டி யுருத்திரசங்களூட்டி
சீதமென்மலரைச்சூட்டிச் செப்பருந்தூபங்காட்டி
மோதகமுதலாயெல்லா முன்வைத்துப்பூசிப்பாரே.

### வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் கணேசருக்குப் பூசை செய்யவந்த வேதியர் உருத்திராசமென்னும் நமக்கத்தால் மஞ்சன மாட்டி மலர்களைச் சூட்டி நிவேதனங்கள் வைத்து அர்ச்சிக்கும் விதங்காண்க.

### விநாயகர் மந்திரம்

ஓம் சுமுகாயநமா: ஓம் தூமகேதாயநமா:
ஓம் ஏகதந்தாயநமா: ஓம் கணாதியக்ஷாயநமா:
ஓம் கபிலாயநமா: ஓம் பாலசந்திராயநமா:
ஓம் கஜகர்ணிகாயநமா: ஓம் மகாகணாதிபதேயநமா:
ஓம் லம்போதராயநமா: ஓம் வக்ரதுண்டாயநம
ஓம் விகடாயநமா: ஓம் சூற்பகர்ணபகமா:
ஓம் விக்னராஜாயநமா: ஓம் ஹேரம்பாயநமா:
ஓம் கணாதிபதேயநமா: ஓம் ஸ்கந்தபூர்வஜயநமா:

## விநாயகர் தோத்திரம்

### தேவாரப்பண்-காம்போதி

அத்திமாமுகனேபோற்றி யரிதிருமருகாபோற்றி
சித்தனேயென்னையாளுந் தேவர்கள்முதல்வாபோற்றி
பக்தன்மேற்கிருபைகூர்ந்திப் படிமிசைபாடியாடக்
கர்த்தனேகண்களிப்பாய் கழலிணைபோற்றிபோற்றி

### வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் விநாயகக்கடவுளைச் சில வேதியர் பூசைசெய்து சென்றபின் அச்சபைக்கு கட்டியன் வருகிற விதங்காண்க.

### கட்டியன் வருகிற பொது விருத்தம்-தோடி

ஜெகதலம்புகழும்வெற்றிச் சேவகதீரனை
அகிமகிழ்துரைகள்செய்யு மாபரணங்கள்பூண்டு
மகிபனாந்துரியனென்னு மாயவன்வாசற்காக்க
சொகுசுளகட்டியன்றான் துரிதமாய்வருகின்றானே.

### வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் கடல்சூழ்ந்த உலக மனைத்தும் வேறொரு மன்னனுக்கில்லாததானே ஏகசக்ராதிபதியாக வும் அரவகேதனாகவும் வயங்கும் இராஜாதிராஜனாகிய துரியோதன மகாராஜன் ஆசாரவாயற்காக்கும் அதிவீரபராக்கிரமனாகிய கட்டி யன் வருகிற விதங்காண்க.

தரு-இராகம்-சவுராஷ்டிரம், தாளம்-ஆதி

பல்லவி

தீரன் துரியோதனன் வாயற்காவற்செய்யுஞ்
சூரன்கட்டியன் வந்தானே — தீரன்

சரணங்கள்

ஆரவாரமுடன் காருபாருகள்செய்யும்
வீரனென்றேமிகவும் பாரினிற்புகழ்பெய்யும்
விசையில்முறுக்கும் நடந்திட
வசையிலெவர்க்கும்
வெகுவிதமாகவொரு சொகுசுடன்மேவிய
அகமகிழ்ந்தாடிவரும் நவமணியாகிய — தீரன்

சிரத்திற்பாகைதுலங்க கரத்திற்செங்கோலிலங்க
சிரித்தநகையுடனே வுறத்துவிசையுடனே
தீரனுமாகி யதிவித
காரனுமாகி
திரண்டவயிர்குலுங்க வறண்டபார்வையுடனே
வுருண்டபணிசரமும் பிரண்டபதக்கமுடன் — தீரன்

மீசைமுருக்கிக்கொண்டு பேசுமகந்தைகண்டு
ஆசாபாசங்களாக வாசாகோசரமாக
அருகினில்வரவும் மாதர்கள்
உருவுகள் தடவும்
அகடவிகடஞ்செய்து நகையுடன்பேசவும்
தகையிலாநடைகண்டே ககனர்கூசவும் — தீரன்

தாண்டிக்குதிக்கும்நடை வேண்டிக்குலுங்கும்நடை
நீண்டகைகளைவீசித் தாண்டிவிகடம்பேசி
நேசங்களாக மன்னன்வரைக்கும்
வாசங்களாக
நெறித்தமார்புடனே கொழுத்தகைகளைநீட்டி
சிறித்துச்சிறித்துக்கொண்டு விரித்தகச்சையுங்கட்டி — தீரன்

வசனம்

அகோதெப்படியென்றால் அஸ்தினாபுரி பட்டணத்தை அரசாட்சி செய்துவாநின்ற இராஜாதிராஜனுகிய துரியோதன மகாராஜன் தனது தம்பிமார்களும் மந்திரி பிரதானிகள் முதலிய ராஜகூட்டங்கள் புடைசூழும்படியாய் கொலுவுக்கு வருகிறபடியாக இங்கு யாவரும் பேசாதீர்கள் சத் சத்.

துரியோதனமகாராஜன்-கொலுவுக்கு-வருகிற

பொது விருத்தம்

உலகமெலாந்துதிபெருகுந் தீரன்றூனு
முயர்ந்தநவமணிமகுடஞ் சிரசிற்பூண்டு
பலமுடையகெதைவாள்வேல் வில்லுமேந்திப்
பரிவுடனே தம்பியர்கள் வணங்கிநிற்க
இலகுமுடிக்கதிர்மைந்தன் சகுனிசல்லியன்
ஏதமிலாவீஷ்மருடன் துரோணர்சூழக்
கலகலெனவீரகெண்டா மணியொலிக்கக்
கனசபைக்குத்துரியனிதோ வருகின்றூனே.

பொது வசனம்

அகோ தெப்படியென்றால், இந்தப்பிரகாரம் இராஜாதிராஜமார்த்தாண்ட ராஜகெம்பீர ராஜவுத்தண்டகோலாகல துரியோதன மகாராஜன் கர்னன் சகுனி சல்லியன் முதலிய தம்பிமார்கள் சூழும்படியாய்க் கொலுமண்டபத்திற்கு வருகிற விதங்காண்க.

துரியோதன மகாராஜன்-கொலுவுக்கு வருகிற-தரு

இராகம்-காம்போதி, அடதாளம்

பல்லவி

தேசத்தவர்புகழும் ராஜர்க்கதிபனூன
துரியோதனராஜன் வந்தான்

அநுபல்லவி

வீசும்மாணிக்கப்பிரகாசம் பளபளபளென்ன
வெற்றிபொருந்திய மன்னர்நடுங்கிட
சத்துராதியர்கள் கண்டுவொடுங்கிட தேச

சரணங்கள்

சந்திரகுலம்விளங்க வந்துதித்தவுல்லாசன்
தம்பிமார்புடை சூழவே குருபெரியோர்
தம்பிமார்புடைசூழவே
அந்தணர்வேத நாதகீதமுழங்கிட
ஆரகேயூர கடகமிலங்கிட
வீரர்சூரர்கள் வந்துவணங்கிட தேச

சொர்னக்கவசங்கள் துலங்குமாபாணங்கள்
சோதிபளபளபளென்னவே நவமணியின்

சோதிபளபளென்னவே
கர்னன்சகுனிசல்லியன் கதிர்மகுடநெருங்க
காலைசூரிய னென்னமதிமுக
மேலுமாலைக ளாடத்துதிபெற — தேச

டமரங்கிடுகிடென்னக் குமரிச்சல்லரிபாட
டக்கைவிருதுடனே டவுல்முரசு
டக்கைவிருதுடனே
அமரருலகை நெடியவர்கொடிகள்பறக்க
அந்தரதுந்துமி வீணைமுழங்கிட
சந்த்ரமுகவதன மாதர்நடனமிது — தேச

கட்டியன் சொல்-பராக்கு

| | |
|---|---|
| வேலைசூழுலகின்வேந்தே | பராக்கு |
| சீலமதிகுலதீரா | பராக்கு |
| மாலையணிந்தோளிர்மார்பா | பராக்கு |
| கோலாகலவுத்தண்டா | பராக்கு |

மந்திரிசொல் போற்றி

சிந்துசூழுலகையாளுந் தீரனேபோற்றிபோற்றி
எந்தனையாளவோங்கு மிறைவனேபோற்றிபோற்றி
விந்தைசேர்வில்வேல்தாங்கும் வீரனேபோற்றிபோற்றி
பந்தமற்றவர்களோதும் பார்த்திபாபோற்றிபோற்றி.

இராஜன்சொல்-வாழிவிருத்தம்

பெருமைபாயடிபணிந்த பிரதிகாமியனேவாழி
குறைவிலாவென்சபைக்குக் கொலுவாகவந்தமர்ந்தோர்
அரியகாட்டகத்திற்சென்ற வைவர்கணலத்தைக்காண
துரிதமாய்ச்சென்றேநீயுந் தூதரையழைத்துவாராய்.

வசனம்

ஆஹா கேளாய் பிரதிகாமியனே! கைதவ நெஞ்சத்தாற் கானகத்திற் சென்றுழலும் ஐவர்களென்னும் பாண்டவர்கள் எந்த யிடத்தில் வாசஞ் செய்கிறார்களோ அதை நாமறிய வேண்டுமாதலால் காற்றினுங் கடுவேகமுள்ள தூதர்களை யழைப்பியுமப்பா.

பிரதிகாமியன் சொல் வசனம்

ஆஹா மகாபாக்கியம்! அப்படியே வருவிக்கின்றேன் கோவே.

### தூதர்கள் வருகிற தரு

இராகம்-தர்பார், அடதாளம்

பல்லவி

தூதர்வந்தாரே சபைதனில்
தூதர்வந்தாரே

அநுபல்லவி

தூதர்வந்தார் துரைகளழைத்திடுஞ்
சேதியறிந்திடச் சீக்கிரமாகவே — தூதர்

சரணங்கள்

பறந்தபாகை சிரத்திலிலங்கவே
அறிந்தசேதியை யங்கியாகக்கொண்டே — தூதர்

சோடாவுடன்கத்தி கேடயமேந்தியே
வாடாமனத்துடன் வல்லமைபேசியே — தூதர்

வெள்ளித்தடியும் விருதுகளும்பூண்டு
துள்ளித்துள்ளியே துரைகளைக்காணவே — தூதர்

வசனம்

சரணம் சரணம் சந்திரகுலசேகரா! தேவரீர் இந்த ஏழைகளை வருவித்த காரணம் யாதோ அதனைத் திருவாய்மலர்ந்தருள வேண்டும் மகாராஜனே.

துரியோதனன் சொல் விருத்தம்

சூரதூதுவரேகேளீர் சொன்னிமைகொட்டுமுன்னே
ஆரணியத்தைநாடி அடைவுடன்சென்றுநீங்கள்
சாரியாய்பாண்டுபுத்ரர் சஞ்சரிப்பதுமில்லாத
காரியமறிந்துசேதிக் கடுகிவந்துரைசெய்வீரே.

வசனம்

கேளுங்கள் தூதுவர்களே! நீங்கள் அதிவேகமாக ஆரண்யத்திற்குச் சென்று அவ்விடத்தில் பஞ்சபாண்டவர்கள் எவ்விடம் வாசஞ்செய்கின்றார்களோ அதைக் கண்டறிந்து சீக்கிரமாய் வந்து பதில் சொல்லவேண்டும் தூதர்களே.

பொது வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் இராஜாதிராஜனாகிய துரியோதன மகாராஜன் உரைத்த மொழியைக் கேட்ட தூதர்கள் அதிவேகமாய் அஸ்தினாபுரியைக் கடந்து காடு, மலை, வனம் வனாந்

திரங்களெங்குந் தேடிப் பாண்டவர்களிருக்கும் இடத்தையறிந்து சந்தோஷங்கொண்டு அவனின்றுமீண்டு தமது வேந்தனைக் கண்டு பணிந்து கூற அதைக்கேட்ட மன்னன் தனது சேர்வைக்காரனை நோக்கிக் கூறுகின்ற விதங்காண்க.

இராஜன் சேர்வைக்காரனுக்குச் சொல் விருத்தம்

பேதமொன்றில்லாதோங்கும் பிரதிகாமியனேகேளாய்
கோதிலாப்பெரியோர்சூழுங் கொலுவினிலிருந்துநாமுந்
தீதரவொருவிளக்கஞ் செய்திடவதற்கிப்போது
தாதவிழ்மாலைமார்பன் சயிந்தவன்றனையழைப்பாய்.

கேளாய் பிரதிகாமியனே! பெரியோர்களும் வேந்தர்களுஞ் சூழ்ந்திருக்கும்படியாகிய எனது சபாமண்டபத்தில் ஒரு ஆலோசனை செய்யவேண்டி யிருப்பதால் சிந்துதேசாதிபதியாகிய எனது மைத்துனன் சயிந்தவராஜனை அதிசீக்கிரமாய் அழைத்து வாருமப்பா.

சேர்வைக்காரன் சொல் வசனம்

ஆஹா மகா பாக்கியம்! தேவரீர் ஆஞ்ஞையின்படி ஓர் நிமைப் போதில் அப்படியே அழைத்து வருகின்றேன் மகாராஜனே.

சயிந்தவன் வருகின்ற பொது விருத்தம்

அண்டர்முதன்மாமுனிவ ரெவரும்மெச்ச
மழழகுபெருமன் மதமு மிவனேயென்னக்
கண்டவர்திடுக்கிடச் சிங்காணிவில்லுங்
கரமதனிற்கத்தியுங் கேடயமுமேந்தி
மண்டலமும்விண்டலமு மதிக்குந்திவ்ய
மணிமகுடம்பளபளென பணிகள்துன்ன
சண்டப்ரசண்டனெனும் வீரசூரன்
சயிந்தவனென்னும் வேந்தன்வருகின்றானே.

## சயிந்தவ வேந்தன் வருகிற தரு

இராகம்-தோடி, அடதாளம்

பல்லவி

சந்திரவதனமுக சிந்துபதியளித்த
சயிந்தவராஜன்வந்தான் பராக்கிரமசாலி

அநுபல்லவி

கந்தன்றனையளித்த இந்துவேணியன்பாதம்
கருதித்துதிசெய்யும் பிரபலதீரன்
பிரியமைத்துனன் துரியனேக்காண

சரணங்கள்

நீண்டமணிமகுடம் ஜிகஜிகவெனமின்ன
நீதிப்ரதாபன்வாரான் உல்லாசகுண
நீதிப்ரதாபன்வாரான்
தாண்டிவீரர்வீரன் தனிமிகவலுபெற்ற
சாரிப்புரவிக்கஞ்சி வீரர்களொதுங்கிட
பாரினிலனைவரு மாரனேவிவனென்ன சங்

கரமதிற்சிலைகளுங் கடகம்பளபளென்ன
களபகஸ்தூரிவீசவே மணங்கமழுங்
களபகஸ்தூரிவீசவே
சரிகமபதவென சரசமாதர்நடக்க
தாகுரு ஜெகுரு ஜெம்தரி
நாகரீகவைபோகமதாகவே சங்

பூரிகைபேரிகை வீரமுரசுடங்கா
பொங்குங்கடல்போலொலிக்க வெகுவிதவாத்யம்
பொங்குங்கடல்போலொலிக்க
பாருங்கிடுகிடென்னப் படைமன்னர்நெருங்க
பக்தியுடனிதோ சுத்தவீரருடன்
சித்தமகிழ்ந்தொளி ரத்தினபுரி சங்

## சயிந்தவனுக்கும் துரியோதனனுக்குஞ் சந்திப்பு

விஞவிடைக் கவி

சித்திரவதனு ஜெகமெலாந்துதிக்கும்
அத்தினபுரியா ளரசனேசரணம்
சத்தியவதனு சத்குணவுலாசா
மைத்துனவாரும் வாரும்மைத்துனரே.

வசனம்

வாரும் வாரும் மைத்துன! இதோ இந்த நவமணிச் சிங்காதனத்தில் உட்காரும். ஆஹா! நீர் எனதாருயிர்துணைபோன்ற மைத்துனராதலால் ஒரு ஆலோசனை சொல்லுகின்றேன் அதற்கு பதிலுத்தரஞ் சொல்லும் மைத்துன.

## துரியோதனன் சொல் தரு

கண்ணிகள்

இந்த்ரப்ரஸ்தமாண்டார் ஐவர்
எங்குமே புகழ்மாண்டார்

ஏதுக்கொருவித வாதைப்படமிலம்
பாதியும்பெற்றேமே மேயவர்பெலம் இங்

நாணிகமக்கடிமைபட்டார் ஐவர்
ராஜவீரியங்கெட்டுவிட்டார்
நாடிப்பாஞ்சாலிவாடிப்பதறிட
நீடித்துகிலினைக் கோடியுரிந்தோம் இங்

அனைத்துஞ்சினத்தினாலேகண்டார் ஐவர்
அடிமைத்தொழிலைமீட்டுக்கொண்டார்
ஆண்டுயீராண்டுநீங்கியபாண்டவர்
மூண்டினியிந்திரமாண்டிடும்போது இங்

ஏதுக்குமவர்தப்பித்துக்கொண்டார் ஐவரை
எதிர்த்துசெயிக்கவீரருண்டோ
யென்னிடராஜ்ஜியர்தன்னிலேபாதியும்
மன்னவராளவுகன் நயமோசொல் இங்

இதவுமது விருத்தம்

அருமைபெருஞ்சகுனிகர்ணசபையிலுள்ளோர்
அந்நாளில்யிந்நாளிவரைக்கொல்ல
துரைதனிலேவசிநாட்டி நஞ்சையூட்டிச்
சூரவீமனைப்பிடித்து மடுவில்வீட்டி
எரியரக்குமாளிகையிற் றீயையிட்டும்
யின்புறுதுரோபதை யவளைப்பங்கஞ்செய்தும்
ஒருவிதத்திலாவதுயிர் போகாதைவர்
வுயிர்போகவுபாயமென்று வுரைசெய்வீரே.

வசனம்

கேளுங்கள் சபையிலுள்ள பெரியோர்களே சகுனிமாமா அண்ணவாகிய கர்னமகாராஜனே மைத்துனா! நீங்களனைவரும் கேளுங்கள். யாதெனில், நாமும் பாண்டவரும் வித்யாரம்பஞ்செய்த அந்நாள் முதல் இந்நாள்வரையில் நமது ராச்சியம் பிரிவுபடாமலிருக்க அதனால் பாண்டவர்களைக் கொல்ல நினைத்து தடாகத்தில் வசியை நாட்டியும், பொசிக்குமன்னத்தில் விஷத்தை யூட்டியும், அதையுண்டு விஷமீறிய வீமனை மணிக்கயிற்றாலிருக்கிக் கட்டி தடாகத்திற் றள்ளியும், அரக்குமாளிகையி லிருக்கச்செய்து உறக்கத்தில் தீயிட்டும், எனது சபையில் அவர்கள் தேவியாகிய பாஞ்சாலியை துகிலுரிந்தும் இன்னுமனேகவித கற்பனைசெய்தும் யாதொன்றினாலும் இறவாத பாண்டவர்களை பற்றறுக்கும்படியான ஓர் சூட்சஞ் சொல்லுங்கோளெனக்கேட்ட துரியனை நோக்கிக் கர்னமகாராஜன் கூறுகின்றவிதங் காண்க.

## கர்னமகாராஜனுக்கும் சகுனிக்கும் தர்க்கம்

### தரு. வினவிடைக் கண்ணிகள்

திறமுள்ளசந்திரகுலமகிபாலா ஐவர்
சேவகனானறிவேன் குணசீலா
பிரியமாய்விடைதந்தாலரும் வனந்தனிலேகிப்
பிதுர்படைவைவரை வதஞ்செய்துவருகிறேன் திற

சகுனி விடை

வருகிறதேதடாநீகர்ண மெத்த
வகையுள்ளசகுனியும் நான்சொன்னேன்
அரிவைக்காகவில்லாலடிப்பட்டதறியாயோ
அர்ச்சுனன்சவுரியமங்கு கண்டறிந்தாயே வரு

கர்னன் வினா

அறிந்தவன்போற் பேசவந்தாயே சகுனி
அந்தவில்லினல்மெத்த நொந்தாயோ
குறுகாநாரிபைப்பற்றிக் குனித்தவனனல்லோ
திறமறியாமலேசின்னம் பேசுவதேது அறி

சகுனி விடை

ஏதடாசவுரியம் நீவெல்லக்கர்ண
யிந்தச்சபையிலுந்தனை வலுசொல்ல
சாதகவைவர்முன்னே சண்டைசெய்தவருண்டோ
சற்றுகிலுமதிப்புவைத்துப் பேசாயுனக்கு ஏத

கர்னன் வினா

உனக்குத்தானேவைவர் பெலங்தெரியும்அந்த
உரிமையானதேவியைத் துகிலுரிய
தனக்குத்தானேவெட்கிச் சவுரியமிழந்தாரே
தாடாண்மையுள்ளவர்க்கு ஈடல்லவென்றுரைத்தாய் உனக்

சகுனி விடை

உரைத்தேனென்றுகையை வீசாதேகர்ண
உன்னிடமைநீ பேசாதே
திறத்திலதிபனென்றே செகமெங்குஞ்சொல்லுவார்கள்
தீரனென்றுவீரம் பேசாதேபோம்போம் உரை

சர்னன் வினா

போம்போமென்று வீரியங்காட்டாதே என்னை
போருக்கெளியனென்று நீட்டாதே

ஆமோவுன்கையினலெவரைநீவெல்ல
அதிகபலவானீயேபதருதே போம்

சகுனி விடை

பாதியில்நீமதங்கொள்ளாதே ஐவர்
பலத்தைபறியாமலே தள்ளாதே
சூதுக்குநான்கெட்டித் தோர்கடித்தேனவரை
மாதுடனலையவே வனத்துக்கனுப்பிவைத்தேன் பாதி

துரியோதனன் சொல் விருத்தம்

கர்ணுவென்சகுனிமாமா கடிந்திடநீங்களிப்போ
வர்ணமாயுலகையாளு மன்னருக்கெளிதேயாகும்
சொர்னமாங்கிள்ளையான துரோபதைமீதுவஞ்சம்
என்னிடவகத்திலுள்ள தியம்புவேன்தெரிந்திடீரே.

வசனம்

கேளுங்கள் சகுனிமாமா! அண்ணு கர்னமகாராஜனே! நீங்களிருவரும் இவ்விதமாகிய வாதுபுரிந்தால் உலகின்கண் உள்ளவர்கள் ஏளனஞ்செய்வார்கள். அப்படி வராமல் நிறுத்துங்கள் நிறுத்துங்கள் அன்றியும், என் மனதில் குடிகொண்டிருக்கும் வைராக்கியத்தைக் கேளுங்கள்; யாதெனில்: பண்டோர் காலத்தில் தருமராஜன் செய்த இராஜசூய யாகத்திற்கு நான் போயிருந்தபோது மாயவன் செய்த சூதினல் அவ்வரண்மனையின் வாயற்கதவாகிய மோகன வைடூரியக் கல்லினல் எனது மணிமகுடமானது இடிபட அதைக் கண்ட துரோபதை என்னை எனது தாதையைப்போல அந்தகனென்று நினைத்து நகைசெய்ய அன்றுமுதல் என் மனவருத்தத்தைச் சொல்லுகின்றேன் கேளுங்கள் சபையிலுள்ளோரே.

துரியோதனன் சொல் தரு

கண்ணிகள்

நகைத்ததுரோபதைமீது பகைத்துமனதாகினேன்
நானினிவிடுவேனே பங்கஞ்செய்யாமல்நானினி நகை

ஜெகத்தரசர்கள்காண நகைத்தாளந்தனைக்கண்டு
தகத்துமறிந்தமென் தைரியமிழந்தேனே நகை

நெடுமுடிமன்னர்சூழ நடுசபையினில்வைத்து
புடவையையுரிந்திட முடியாமற்போச்சுதே நகை

என்னகாரியஞ்செய்துஞ் சின்னப்படவுமில்லை
இனிமேல்யோசனையொன்று மனதுடன்கேளுங்கள் நகை

எரியனலுக்கொப்பான துரோபதையைக்கொணர்ந்து
சிறையிலடைப்பவர்க்குத் தருவேனைகாம் நகை

## இதுவுமது விருத்தம்

பெரியவருங்குருபுதல்வர் சகுனிகர்னன்
  பேசரும்மைத்துனர்முதலாய்க் கொலுவிலுள்ளோர்
அறியவந்ததுரோபதையைப் பிடித்துவந்தே
  யருஞ்சிறையிலடைத்திட்டா லவர்மாள்வார்
திறமையுடனிப்படிக்குச் செய்தவர்க்குச்
  செங்கோலும்நிதிபலவுந் தருவேனன்பும்
பிரியமுடன்செய்யவல்ல வீரர்தாமும்
  பிடியுங்கள்தாம்பூலந் தருகுவேனே.

### வசனம்

கேளுங்கள் சபையிலுள்ளவர்களே! கௌரவராகிய பாண்டவர்களைச் சுருக்கில் வெல்லவேண்டுமாயின் ஓர் உபாயமிருக்கின்றது. அவை யாதெனில்; துரோபதையைத் தனித்திருக்கும்போது உபாய தந்திரங்களினாலே பிடித்துவந்து நமது கோட்டைக்குள் சிறைபிட்டுப் பதனஞ் செய்வோமாகில் அப்போது கானகத்திற் சஞ்சரிக்கும் பாண்டவர்கள் நீதியை மறந்து ராஜ்ஜியத்தில் அடிவையாமல் அங்ஙனே உயிரிழந்துவிடுவார்கள். அதனால் நமது பகையுந்துலையும். ஆதலால் அத்தேவியை கொண்டுவரப்பட்ட வல்லவர்களுக்கு நான் என்னைப்போல் இராஜரீகஞ் செய்யவும் செய்துவைப்பேன்; இதற்கு மனமுடையவர்கள் எழுந்து தாம்பூலம் ஏற்றுக்கொள்ளுங்கள் சபையிலுள்ளோர்களே.

## ஜெயித்தரசன் சொல் தரு

### பல்லவி

மாசில்லாத்திவ்விய ராஜகெம்பீரனே
மனதுக்கிசைந் தெழுந்தேனே    பிடித்திட
மனதுக்கிசைந் தெழுந்தேனே

### அநுபல்லவி

மாசிலாபிரகாசனே    நேசனே
நேசமானசபை    யோர்களுமறிய    மாசி

### சரணங்கள்

சிங்கம்கரடிபுலியாளி    வாழும்வனத்தைச்
சேர்ந்தவரைத்தேடி    மிகுப்ரதாபா
சேர்ந்தவரைத்    தேடியே
சிதளம்பொருந்தியமாது    துரோபதையை
சூதுசெய்துக்கொண்    டோடியேவருகுவேன் மாசி

ஏந்தன்பலத்தினுலே எதிர்த்தபேர்களைவென்று
இக்கணம்வருவேன் வெற்றியுடனே அதிபலதீரா
இக்கணம்வருவேன் வெற்றியுடனே
இந்திரர்முனிவரர் விந்தையுடையயாரும்
எந்தனைமெச்சவே வந்திடுவேனிதோ மாசி

கொஞ்சும்பாஞ்சாலிதன்னைக் கொண்டுவராமற்போனல்
குவலயமன்னனு மாவேனே அதிவுதாரா
குவலயமன்னனு மாவேனே
குற்றமகன்றுஉந்தன் சித்தமகிழ்ந்திட
வெற்றியுடனேவுன்முன் வீரனுன்வருகுவேன் மாசி

இதுவுமது திபதை

மதிகுலத்தரசேயிந்த வாக்கியந்தவறிடாமல்
துதிபெறுமைவர்க்குற்ற துரோபதைதனைப்பிடித்தே
அதிபனுன்வராவிட்டா லருஞ்சபையோர்கள்காண
வதனமார்சிந்துதேச மன்னவனுகுவேனே.

வசனம்

கேளும் மைத்துன! இந்தட்சணமே நான் கானகத்திற்கேகி பாண்டவர்கள் எங்கிருந்தபோதிலும் அறிந்து அவாளுக்கு வேண்டிய தந்திரங்களைச் செய்து அப் பாஞ்சாலியை பிடித்து வந்து சிறையில் அடைப்பேன்; அவ்வாறு நான் செய்யாவிடில் இச்சபையிலுள்ளோர்களறிய நான் சிந்துபதி குமாரனை ஜெயித்தரசனல்ல தாம்பூலம் தாரும் மைத்துன.

துரியன் சொல் வசனம்

ஆஹா எனதாருயிர்த்துணைவனுகிய மைத்துன! இப்போதல்லவோ என் மனத்துள் வஞ்சம் நீக்கிச் சந்தோஷமடைந்தேன்; இச்சகாயம் உன்னையன்றி யார் செய்வார்கள்; அப்படியானல் இந்தாருந் தாம்பூலம் மைத்துன.

பொது விருத்தம்

பாக்கதுபெற்றுக்கொண்ட பராக்ரமசிந்துபூபன்
சீக்கிரமாய்ப்படைகளோடுஞ் சேனைகாவலர்கள்சூழ
நோக்கியேதமதுதேசம் நொடியினில்வந்தபோது
பாக்கியவதியாள்தாங்கும் பஞ்சணைவருகின்றனே

வசனம்

அகோதெப்படியென்றல் இந்தப்பிரகாரம் ஜெயித்தரசன் தனது மைத்துனனுகிய துரியோதனனிடத்தில் தாம்பூலம் பெற்று அதிதீவ

ரத்தோடும் இரதகெஜதுரகபதாதிகள் சூழும்படியாய் இரதமேறி தனது நகரத்தைச சேருகையில் அஸ்தமானபடியால் அங்குள்ள யாவரும் இரவுபோஜன முடித்துக்கொண்டு அவாளவாள் நித்திரை செய்ய அக்காலே துற்சடை யென்பவள் தானும் அமுதருந்தித் தனது பள்ளியறையை நாடிவருகிற விதங்காண்க.

இதவுமது விருத்தம்

கதிரொளிவதனரூபிக் காந்தாரியீன்றசெல்வி
மதிமுகத்தழகுகொஞ்ச மலரணிப்பணிகள்மின்ன
வதிவிதசிலம்பொலிக்க வலர்மஞ்சந்தன்னைநாடி
துதிபெறுமயில்விசித்ர துற்சடைவருகின்றாளே.

துர்ச்சடை பஞ்சணைக்கு வருகிற தரு

பல்லவி

சுந்தரவதனமும் சந்திரகுலத்துதித்த
துற்சடைமாதுவந்தாள் விசித்ரமுக துற்

அநுபல்லவி

கந்தமலராணியுங் கார்குழலுமிலங்க
சிந்தூரத்திலர்தமு மிந்துமுகமுந்துலங்க சுந்

சரணங்கள்

குயிலுரைமொழிபெருங் கயல்விழிமைதீட்டி
மயிலன்னநிகர்சாய வொயிலாய்நடைநடந்து சுந்

இந்துவதனுளிரு பந்துஸ்தனங்கள்விம்ம
சந்தோஷம்பெருகியே விந்தைதபஞ்சணைநாடி சுந்

உருகுப்பொன்னிறத்தோடு மோதுமாந்தளிர்மேனி
சரிகைச்சேலிலங்கப் பரிவாய்ப்பாங்கியர்சூழ சுந்

துற்சடை பாங்கியர்களுக்குச் சொல் விருத்தம்

அலர்முகப்பருவமான வழகுதாதிகளேகேளீர்
கலையுறங்கதிரோன்சென்று கடிகையேழரையுமாச்சு
ஜொலிபெறுவிழியும்மெய்யுஞ் சோபமாயிருப்பதாலே
மலரணைமீதுயானு மகிழ்ந்துநித்திரைசெய்வேனே.

வசனம்

அடியம்மா சகிமார்களே! இப்போதானல் அஸ்தமாகி ஏழரை நாழியாகுவதோடும் எனக்கேதோ இன்றையதினம் கண்கள் உறக்கமும் மெய்சோர்வுமாக யிருப்பதால் யானிந்த புட்பசயனத்தில் நித்திரை செய்கின்றேன் சகிமார்களே.

## துர்சடை நித்திரை செய்யுந் தரு

### பல்லவி

நித்திரையாகினனே துற்சடைமாது
நித்திரை யாகினனே நித்

### அநுபல்லவி

நித்திரையாகினள் மெத்தையின்மலர்மீது
சித்ரவதனமாதர் பற்றிக்கவரிவீச நித்

### சரணங்கள்

கன்னல்மொழிமாதர்கள் பன்னீர்களபம்வீச
வுன்னிதபஞ்சணையின் றன்னிலதிகமாக நித்

மணிவைத்திழைந்ததீப மணியணியாயொளிர
குணமுள்ளசகிமாரைக் கூடியதிபொயிலாய் நித்

கற்புக்கரசியாருங் கண்ணிமித்திரைதன்னில்
சொற்பனங்கண்டேயவள் துடித்துத்திடுக்கிட்டேங்கி நித்

### பொது வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் துற்சடையானவள் தனது பாங்கிமார்கள் செய்யுஞ் சயித்தோபசாரத்தால் மலரணை நித்திரை செய்யும்போது ஓர் கனவுகண்டு பயந்து திடுக்கிட்டெழுந்து நாவு குளறிப்போக மெய் நடுக்கமுற்றுத் தான் கண்ட கனவை பாங்கிகளுக்கு சொல்லுகின்ற விதங்காண்க.

### துற்சடை பாங்கிகளுக்குச் சொல் விருத்தம்

தற்பராபரனேவையோ சகிகளாகேண்மின்செய்த
முற்பழியிதுவோகாதன் மோசபங்கங்களாகச்
சொற்பனங்கண்டசெய்தி சொல்லவேநடுக்குதம்மா
கற்புசேர்மாதர்கண்ட கனவது பொய்த்திடாதே.

### வசனம்

அடியம்மா சகிமார்களே! என் தலைவிதியை நானென்ன சொல்லுவேன் ஐயோ எனது பிராணவல்லபர் மோசமார்க்கத்தால் உலகிற்படாதபங்கம் படும்படியாய் ஆகாத சொற்பனங் கண்டேன் அதைச் சொல்லுகிறேன் சற்றே மனம்வைத்துக் கேளுங்கள் சகிமார்களே.

## துற்சடை சொல்லுந் தரு

### பல்லவி

கண்டகனவைக்கேளுங்கள் சகிமார்களே
கண்டகனவைக் கேளுங்கள் கண்

### அநுபல்லவி

அண்டமெண்டிசையினு மரிவையான்கண்டதுபோல்
துண்டத்தனமாயெவர் கண்டிருப்பாரம்மா கண்

### சரணங்கள்

எந்தன்கணவனெழுந்தே தேதோதிறம்பேசி
அந்ததுரோபதையையான் தந்திடுவேனென்று
சந்தோஷமாகவே தாம்பூலம்பெற்றவர்
தனித்துரோபதையவள் மனத்திலன்புகள்பூட்டி
நினைத்தொருசூதுகள் வனத்தைவிட்டகலவோ கண்

மந்திரவாளதை மறந்தாரண்ணனென்று
மகிழ்ந்தேயதைஎடுத்து வகங்களிப்பாகவே
யிந்தாருமண்ணுவென் றெடுத்துப்பின்னோடிவர
யேறிபொருபடியிற் றுருமென்றேந்திட
மீறியவர்தேரை வீரியத்துடன்விட கண்
பூசைமுகந்தவரும் இடம்வந்தேமிகநொந்து

வீசியவிசையுடன் வீமசேனனுங்கண்டு
விருதுடன்ரதகெஜ துரகமுமழிந்திட
வுருகிவுருகிமெத்த திகைத்தவணிற்கயில்
கருகியவரைப்பீமன் கட்டியடித்திடவுங் கண்

வாதைப்பறசிரத்தை வழித்துதீபங்களேற்றி
மாலைபெருக்கமலர் கோலமுடனேபோட்டு
மாற்றிக்கழுதையின்மே லேற்றிச்சாபங்களிட்டு
ஏதமுளவிவனை எவர்தொட்டபோதிலும்
எல்லோரையும்பிடித்துக் கொள்ளவிதித்திருந்த கண்

### பொது விருத்தம்

இப்படிகண்டேனென்றவ் விரவெலாம்தவிக்கமாது
செப்பியமொழியைக்காண சிவந்தசூரியனுதிக்க
அப்படி துயில்கணீங்கி யரசன்செய்கடன்கழித்து
துப்பொளிர்ரதமீதேறித் துரைசயிந்தவன்வந்தானே.

வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் துற்சடையானவள் மிகவுஞ் சிந்தாக்ராந்தியாய் தான் கண்ட கனவைப் பாங்கிகளுக்கு உரைத்தும் நினைந்து அன்றிரவுபோதெல்லாம் வருத்தப்பட்டிருக்கையில் உடனே கிழ்த்திசையில் சிவந்த நிறத்தோடுங்கூடிய சூரியன் உதயமாக அதைக்கண்ட வேந்தனெழுந்து காலைக்கடனை முடித்துப் பவழ நிறத்தோடுங்கூடிய ரதமேறி வருகிற விதங்காண்க.

## ஜெயித்தரசன் வருகிற தரு

வீரப்படைகள் தன்னைக்கூட்டி-அதி
வீரியமாய்ப்பயணபேரிகைமீட்டி

சாரிப்புரவிகளைப்பூட்டி-கொலுந்
தளசேகரமுடன் ரதமதையோட்டி

வில்வேல்வாளுமெடுத்தார்-மெய்யினில்
விசித்ரநவமணியின்கவசந்தொடுத்தார்

சல்லரிமுரசுபிடித்தார்-கையில்
சக்கரங்கேடயம்வளைதடிபிடித்தார்

ஆரமணிமாலையணிந்தார்-மெய்யினில்
அழகின்மேழைகான பணிபுனைந்தார்

வீரன் மனுநீதியுணர்ந்தார்-அப்போது
மெல்லிதுரோபதையைப்பிடிக்கத்துணிந்தார்

அண்டர்புகழ்ரதமேறி-சிந்து
அரசனுங்கானகமேகிடசாரி

தெண்டமெனவீரர்கூற-வோதுஞ்
செயித்தரசன்றானும்பாஞ்சாலியைத்தேடி

பொது வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் செயித்தரசனென்னுஞ் சயிந்தவன் அநேகவித கோலாகல வைபவத்துடனே இரதமேறி சேனைசைனியங்கள் சூழும்படியாய் பாஞ்சாலியைத் தேடிக்கொண்டு வருகையில் அச்செய்தியறிந்த அவன் தேவியாகிய துற்சடை யென்பவள் தனது புருஷனை வந்து பணிந்து கூறுகின்ற விதங்காண்க.

துற்சடை சொல் கொச்சகம்

வீராதிவீரர்பணி வேந்தேமதிகுலத்து
மராவுமதுதிவ்யமல ரடிக்கேயான்சரணம்

காராரும்பூங்குழலார் கன்னியர்க்குஜின்னரசே
வாரீரெனக்குரிய மன்னவரேநீர்வாழி.

வசனம்

சரணம் சரணம் எனது பிராணநாயகா! தாங்கள் நால்வகைச் சேனையுடனே பிரயாணப்பட்டு போகின்ற காரணம் இன்னதென்று தெரியப்படுத்த வேண்டும் நாதனே.

## செயித்தரசனுக்கும் துற்சடைக்கும் தர்க்கம்

தரு - கண்ணிகள்

பெண்ணேஉந்தன் தமயன்மொழி பிசகாவண்ணம்வனமேகி
கண்ணேரகுபதியாள்தன்னைக் கடுகிக்கொண்டுவரவேயந்த
காரியமாகவேவீரியருடனிதோசாரிபோரனடிகாரிழையாளே பெண்

துற்சடை சொல் கண்ணி

மன்னுயிதுவென்னசாமிமதியோ வுந்தன்விதியோ
சொர்னரகுபதியாடன்னைத் தொடுவாய்வெந்துவிடுவாய்
சொல்லியவசமும் வல்லமையோயிது
புல்லறிவாளனே யல்லதாகிடும் மன்

ஜெயித்தரசன் சொல் கண்ணி

மதியோவெகுதுதியோடுயான் வலுமைகூறிவந்தேன்
அதுவோரகுபதியையுந்தனது வண்ணன்தனக்களிக்க
ஆசையுடனேபாலராஜருடனேயிதோ வாசமுடையவனம்நேசனும்
[போரே

துற்சடை சொல் தரு

உல்லாசனேநல்லதல்ல வுலகோருணேநகைக்க
வல்லவீமனுலேபங்கமாய் வந்துமுடியும்
மற்புயவீரனே சொற்பனங்கண்டது
செப்பிடுவேனிதை ஒப்பியேகேளும் உல்

ஜெயித்தரசன் சொல் விருத்தம்

பாவையேகனவுகண்ட பணமதுபகுதிக்காமோ
போவதைதடுக்கவந்த பெண்புத்திகேட்பதுண்டோ
பூவையேதுரியராஜன் புகழ்ந்தமேயென்னைமெச்ச
ஆவலுமானேனுந்த னரண்மனைக்கேகுவாயே.

வசனம்

கேளும் பெண்ணே பிராணநாயகி! நீ கூறும் விதம் எப்படியாக யிருக்கிறதென்றால் கனவிற்கண்ட பணமானது உலகை யாளவல்ல

காவலர்களது பருதிக்காகுமோ ஆகமாட்டாதே; அதுபோல் யான் உனது தமையனாகிய துரியோதன ராஜன் முன்னம் பாஞ்சாலியைக் கொண்டு வருகிறேனென்று பிரதிக்கினைசெய்து வந்தேன். அதை நிறைவேற்றி வருகின்றேன்; நீ அந்தப்புரம்போய் சுகித்திருப்பாய் பெண்ணே.

## துற்சடைக்கும் ஜெயித்தரசனுக்கும் தர்க்கம்

### தரு. வினவிடைக் கண்ணிகள்

போவதென் றுமனதாய் புண்ணியாநீர்சொல்லும்வார்த்தை
ஆவியும்பதருதையோ வையையோநானென்னசெய்வேன் போ

ஜெயித்தரசன் சொல் கண்ணி

என்னசெய்வேனென் றுசொல்லி ஏதடிநீவாதுசெய்ய
உன்னதமானநீபோடி யுச்சிதமென்னடிநீதான் என்

துற்சடை சொல் கண்ணி

உச்சிதமாதையெடுக்கு முந்தனைக்கர்த்தபத்தேற்றி
அச்சப்பட்டுநீயெடுக்க வறிந்தேனையோசொற்பனம் உச்

ஜெயித்தரசன் சொல் கண்ணி

ஐயமேதுமெர்தனுக்கும் வாசையுள்ளமைத்துனர்க்கு
தையலைக்கொண்டுதருவேன் ஸ்தானத்திற்குயேகுவாயே ஐய

துற்சடை சொல் கண்ணி

ஏகியேநீர் தங்கைதன்னை எப்படிமனந்துணிந்து
கோகனகமாங்கிளியைக் கொண்டுவருவீருரைப்பீர் ஏகி

ஜெயித்தரசன் சொல் கண்ணி

கொண்டுவருந்தந்திரங்கள் கோடியுண்டுபோடிபெண்ணே
கண்டபடிபேசவந்தாய் காரியமல்லவுனக்கு கொ

துற்சடை சொல் கண்ணி

ஆளருமைவரிருக்கவனு கினற்பாவம்வாராதோ
மாளவும்விதிவுமக்கு வந்துதோயிதென்னகாலம் ஆ

ஜெயித்தரசன் சொல் கண்ணி

காலம்வந்ததென் றுசொல்லிக் கையைநீட்டிப்பேசவந்தாய்
நீலியேயுன்வார்த்தையை நிறுத்திநீயுன்னிடம்போடி கால

103024

துற்சடை சொல் கந்தார்த்தம்

சொன்னதுபழுதென்றெண்ணவேண்டாஞ் சூரனேமாரனேநீ
கன்னியைரதமதிலேற்றியேவர்திடக் கண்டிடவீமனேபலவான்
சென்னியிற்றீபம்வைத்துமே கழுதைமேற்றீரனேயுந்தனேபோற்றி
வுன்னைப்பிடித்தவன் தன்னைப்பிடித்திட
உரைத்திடச்சாபம்பத்தினியாலே பெற்றிடச்சாபம்
கருத்துமகிழ்ந்திடக் கனவுகள் கண்டயான்
பொறுத்துப்பாரும்நீரே புண்ணியலோலனே உரைத்திட

ஜெயித்தரசன் சொல் கந்தார்த்தம்

கழுதைமேலேற்றிடக்கனவிலறிந்திடக் கண்டதுபெண்டானல்
பழுதமுரைத்திடத்துணிவுகளேதடி பல்லையுதிர்த்திடுவேன்
அழுதிடுப்பெண்டுகள்தூற்றிடும்பெண்டுகளென்றென்பார்கள்
முழுதுமுணர்ந்திது பழகியநீயோ
மூட்டுவேன் துன்மார்க்கியுந்தனே வாட்டுவேன் துன்மார்க்கி
மூட்டியுந்தனேவாட்டுவேனிதைக்
கேட்டபேர்பழிச்சாட்டுவார்களே மூட்டு

துற்சடை சொல் கந்தார்த்தம்

இப்படிகோபமதாகிய மன்னனேஎன்னிடகனவுகளும்
தப்புவதில்லையையோ தள்ளுவாருலகிலில்லை
எப்படியோயிதை யொப்பியெனக்கொரு மின்பமுரைத்திடுவாய்
சொற்படிகேளுநீ தள்ளிநடந்திடில்
தோஷத்தில்விழுவாய்எரிஷிளக்குப் பூச்சிபோல்மடிவாய்
தோஷம்வந்தெய்துமே மன்னவர்மன்னனே
பாசமதாகவே பதியிலிருந்திடும் தோஷத்தில்

ஜெயித்தரசன் சொல் கந்தார்த்தம்

தத்திபிதற்றிடுங்கன்னியேவுன்றனைத் தாக்குவேனெந்தன்கைவாளி
யித்தனைசொல்வது மற்றொருவீரர்களொவ்வாதனையும் [னுலே
குத்தியிருத்துவேன்சிற்றடைமாதரைக் கொல்லுவதுநல்லதுவோ
மெத்தப்பொறுத்தேனுனுத்தமியாளே
வீரமாமோ எதிர்பேசுமாதர் தாரமாமோ
வீரியமாகவே பாரியாதமதில்
ஏறியேவனத்திற்குப் போகிறேன்மீறி வீர

துற்சடை சொல் விருத்தம்

வீரியபிராணநாதா மிகுதிரவிரண்யகஸ்பாள்
யாரனும்சூரபத்மன் மயிலனுமுயலன்வாலி

சீருலாராவணேசன் நிறமுறுஞ்சதகண்டேசன்
பாரினிற்கெர்வங்கொண்டு பட்டபாடறிந்திடாயோ.

வசனம்

கேளும் பிராணநாயகா! முன்னாலே இரண்யகசிபானென்னுஞ் சூரர்களும், பத்மாசூரன் முதலிய தக்ஷகன், முயலகன், வாலி, இராவணேசுரன், மயில்ராவணன், சதகண்டன், மன்மதன் இன்னம் அநேக பலசாலிகள் பெரியவர்களாற் சொல்லும் நீதிமார்க்கத்தைக் கேளாமல் கெர்வித்து அநேகவித துன்பங்களுக்கு ஆளாகி நரகப் பிராப்தி யடைந்தார்களென்றே அப்படியிருக்க, நீர் மகாபதிவிரதா சிரோண்மணியாகிய பாஞ்சாலியைத் தங்கையென்று மதிப்பில்லாமல் கொண்டுவருவேனென்று மனத்துணிவுகொண்டு போகின்றது சரியல்லவே. ஆதலால் தேவரீர் என் வார்த்தையைத் தள்ளிப்போவீராகில் இனியில்லாத பங்கமடைவீர் போகவேண்டாம் நாயகா.

## ஜெயித்தரசனுக்கும் துற்சடைக்கும் தர்க்கம்

### தரு. வினாவிடைக் கண்ணிகள்

மங்கையேவாடி — நங்கையேபோடி
வார்த்தைகளிங்கே — பலுக்காதேயென்பாரி
வையகமறிய — வத்தையலோனெடுத்தே
வாரேனுனிதோ — போரேனடிபெண்ணே

### துற்சடை சொல் கண்ணி

போதுமென்ன — சூரமோமன்னா
போகாமல்நீர்நில்லு — மென்மன்னரேயந்த
பொறுமையில்மிகுந்த — தருமரைப்பகைக்கிற்
பிழைகள்வந்திடும் — மன்னா

### ஜெயித்தரசன் சொல் கண்ணி

வந்திடுமென்றேநீ — நொந்திடவேண்டாம்
வானவர்களுமெனக் — கேடோபெண்ணரசே
வஞ்சியைப்பிடித்தே — பஞ்சவர்கள்துடிக்க
மகிழ்ந்துமைத்துனர்க் — களிப்பேன்பெண்ணேகண்ணே

### துற்சடை சொல் கண்ணி

அளித்திடவெண்ணிக் — களிப்பதும்பெரிதோ
அவர்களுக்கெதிரே — தென்மன்னா

அரிகிருஷ்ணதேவ ரவர்கள்பங்கிலிருக்க
அரும்வனம்போகாதீர் வாரும்பிராணநாதா

## பொது விருத்தம்

போகாதீரென்றுசொல்லும் பூவையேயுனக்கடங்கிச்
சேவ தீரனுஞ் க்ஷணப்பொழுதிக்கேனென்று
நாகரீகத்துமன்னன் நடந்தனன்படையைக்கூட்டி
பாகுசேர்மொழியாள்கண்டு பதறுவாள்கதறுவாளே.

## வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் துற்சடையென்னுந் தேவியானவள் கூறிய நீதிமார்க்கத்தைக்கேளாத ஜெயித்தரசனானவன் தனது நால்வகைச்சேனைகளேயும் கூட்டிக்கொண்டு துராக்ரதமாய் வனத்தைநோக்கிப் போவதைக்கண்ட அம்மாது மிகவுஞ் சித்தாக்ராந்தியாய் புலம்புகின்றவிதங் காண்க.

## துற்சடை புலம்பும் தரு

### இராகம்-நீலாம்புரி

### கண்ணிகள்

ஐயையோபாவி தெய்வமேயென்னேயிந்த
அவதிப்படவிட்டாயோ தெய்வமே

வையகத்தரசர்களேயோ மிகாகைக்க
வாய்த்ததேயென்னசெய்வேன் தெய்வமே

சொற்பனங்கண்டேனையா யிப்பிடிமன்னன்போக
துடிக்குதென்மனம்வாடித் தெய்வமே

அற்பமோரகுபதியவள் சாபம்பலிக்குமே
அதற்கென்னயான்செய்வே னேயோதெய்வமே

தலைவிதிப்பிசகாமல் தள்ளிநடந்தார்சொல்லேச்
சங்கராவென்னசெய்வேன் தெய்வமே

குலபாவிதுரியனல் குறைவர்துவாடலாச்சே
கோவிந்தாவென்னசெய்வேன் தெய்வமே

நினைக்கநினைக்கவிதை மணக்கவலைகளாகி
நீராயுருகலாச்சே தெய்வமே

தனக்குத்தானேயோசித்துத் தங்கையென்றும்பாராமல்
தாண்டிநடந்தாரையோ தெய்வமே

பொது வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் ஜெயித்தரசனானவன் தனது தேவியாகிய துற்சலை சொல்லிய வார்த்தையைக் கேளாமல் அதிவுக்ரத்தோடும் தனது சைனியங்களுடனே பாண்டவர்கள் வாசஞ் செய்துக்கொண்டிருக்கும் காமியவனத்தை நாடி வருகையில் அவ்வனத்தில் தனக்குண்டாகிய துற்சகுனங்களைக் கண்டு ஐயரவு கொண்டு தனது படை துணைவரோடு கூறுகிற விதங்காண்க.

## ஜெயித்தரசன் படைவீரருக்குச் சொல்லும் தரு

கண்ணிகள்

வீரரோரதமேறி நான்வந்ததும்
வேந்தர்சபையினில் மொழிந்ததும்
சூரியனைப்போல்துலங்குந் துரோபதைதன்னை
தாரேனென்றுரைத்திட்ட சபதந்தன்னைகெலிக்க வீர

மந்திரிமுயல் குறுக்காகதாண்டுதே
மனதுவருத்தம் மிகப்பூண்டுதே
விந்தைத்துரியன்வசம் வீணான்மதிமோசம்
வந்தாலும்பின்னிட்டு வருவதேதுயினிமேல் வீர

என்னமோமனம் வாடுதேமந்திரி
இனியென்ன செய்குவேன்தந்திரி
வன்னிதுரோபதைகோபம் வந்துவருமோசாபம்
சின்னம்வந்தாலும்வீரஞ் செலுத்தாமல்விடுவேனோ வீர

இதுவுமது விருத்தம்

சகுனந்தானென்னசெய்யுஞ் சமர்த்துளவரசருக்கு
மகிதலத்தரசர்மெச்சும் மைத்துனர்மனங்களிக்க
வெகுவிததந்திரஞ்செய்து மேவியதுரோபதையைப்பற்றி
அகிலமுர்துதிக்கவாரே னட வியிலிருந்திடீரே.

வசனம்

கேளுங்கள் மந்திரிமார்களே! சாமர்த்தியமுள்ளவர்களுக்குச் சகுனத்தாலாவதென்ன? ஆதலால் அரவக்கொடியோனாகிய திரியோதனன் மனங்களிக்கும்படியாய் வெகுவித தந்திர உபாயங்களினாலே துரோபதையைப் பிடித்து வருகின்றேன் நீங்கள் இவ்விடத்தில் அதிஜாக்கிரதையாக இருங்கள் வீரர்களே.

பொது வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் ஜெயித்தரசனென்னும் வேந்தன் தனது சைனியங்களுக்கு திடஞ்சொல்லி அடவியில்

நிறுத்திவிட்டுத் தான் தனியாக இரதத்தைச் செலுத்திக்கொண்டு சென்றபோது அவ்வனத்திற் பாண்டவர்கள் நித்திரை நீங்கிக் காலைக் கடனை முடித்துக்கொண்டு கொலுவுக்கு வருகிற விதங்காண்க.

இதுவுமது விருத்தம்

மேருவைச்சிலைவளைத்த விமலனார்பாதம்போற்றி
வீரியகெதையும்வாளும் வெகுவிதப்படையுமேந்திச்
சூரியவுதயம்போலத் துலங்கியபணிகளாட
பாருளோர்ந்துதிக்கவோங்கும் பஞ்சவர்வருகின்றாரே.

## பஞ்சபாண்டவர் காமியவனத்தில் கொலுவிருக்கும் தரு

பல்லவி

சந்திரகுலத்தில்வந்த இந்துவதனமுள்ள
தர்மபூபதிகள்வந்தாரே அதிகுணநிதி துதிபெறும் தர்ம சந்

அநுபல்லவி

கந்தமலரணியுங் கழுத்திலாரங்கள்மின்ன
கண்டவீரர்களின் மனமதுவாடிட
அண்டியந்தணர்கள் வேதங்கள்பாட சந்

சரணங்கள்

மதகரிபுஜபல வதனத்தழகுமிக்க
மகுடம்பளப ளென்னவே
துதிபெற்றமன்னர் மெச்சச்சுருதிமிகவுணர்ந்து
சோதிமாமணி மாலையாடவே
கோதிலாக்குயில் கிளிகள்பாடவே சந்

மாதவமுனிவர்கள் பாதகமலமதில்
வணங்கிவனத்தில் வாழவே
சீதப்பரிமள வாடைகள்மிகுத்திட
தீரசேவகர்களுங் கண்டுமுடிதாழ
வீராகிய தம்பியர்கள்சூழ சந்

மேருகிரியையொற்ற வீரகெதைவாளுடன்
வில்லுங்கரத்தி லேந்தியே
பாருமதிசயிக்கப் பஞ்சாட்சரங்களோதிப்
பத்தியாகவே தீர்த்தமுமாடியே
பரம்பரனைமனதில் தியானஞ்செய்திட சந்

தருமபூபன் சகாதேவனுக்குச் சொல் விருத்தம்

சரசமாயென்பின்வந்த சகாதேவமணியேகேளாய்
பரிதியுமுதித்தகாலைப் பரிமளதீர்த்தமாடி
அரனதுபூசைசெய்ய வாரண்யந்தன்னிலேகித்
திறமுளவதனமுற்ற தேவியையழைத்துவாராய்.

வசனம்

கேளாய் எனது பின்வந்த மணிபோன்ற சகாதேவனே கீழ் திசையிற் சூரியன் உதயமாகியிருப்பதால் நாமனைவரும் மஞ்சன மாடிச் செபதபங்களை முடிக்கவேண்டியிருப்பதால் நமது தேவியாகிய துரோபதையை அழைத்து வாருமப்பா சகாதேவனே.

பொது வசனம்

அகோ தெப்படியென்றால் இந்தப்பிரகாரம் தருமபூபதியானவர் உரைத்த மொழியைச் சிரமேற்கொண்ட சகாதேவராஜனனவன் பன்னகசாலைக்குச் சென்று பாஞ்சாலியைக்கண்டு முறையிட, அது போல அந்த அம்மன் வருகிற விதங்காண்க.

இதுவுமது விருத்தம்

அவனியுளோங்குமாத ரருசேர்ரதியோவென்று
எவர்களும்பணிந்துபோற்ற வெழிற்பதச்சதங்கைகொஞ்சக்
குவலயந்துதிக்குமன்னன் கூறியமொழியைக்கேட்க
நவமணிப்பணிதுலங்க நங்கையும்வருகின்றாளே.

பாஞ்சாலி தருமபூபதியினிடம் வருகின்ற தரு

பல்லவி

வந்தாளேமாதுதுரோபதை மன்னனைநாடி
வந்தாளேமாதுதுரோபதை — வந்

அநுபல்லவி

சந்தனம்புனுகுடனுஞ் சாந்துசவ்வாதணிந்து
விந்தைசேர்விஸ்வமாநகர் மெல்லியுமன்னனைக்காண — வந்

சரணங்கள்

கையினிற்கங்கணமின்னக் கன்னல்மதன்ரதியென்ன
வையகமளித்தவாதி மாதிதோமன்னனைக்காண — வந்

செய்யுமாமுகவதனி சேல்விழிக்குமையெழுதி
பொய்யுரையாவைவர்தேவி பூரணிமன்னனைக்காண. — வந்

ரத்தினப்பணிகளாட நாகரீகச்சேலேமின்ன
சத்திதுரோபதையாள்வீர சத்தியுமன்னனைக்காண வங்

முத்துமுல்லைப்பல்லழகு முடியாக்கார்நிறக்கூந்தலும்
சித்திரவொட்டியாணமின்ன தேவியுமன்னனைக்காண வங்

அருக்கனைமிகப்பணிந்து லட்சயபாத்திரம்பெற்ற
முருக்கம்பூவிதழாளான வுத்தமிமன்னனைக்காண வங்

பெருக்கமாகியதருமர் பிரியமுடனேயழைக்க
உருக்கும்பசும்பொன் மேனியாளோதருமன்னனைக்காண வங்

துரோபதை சொல் விருத்தம்

பெருமையுமன்புங்கீர்த்திப் பெருகியமதிகுலத்து
தருமபூபதியேயுங்கள் தாளிணைபோற்றிபோற்றி.

தருமர் சொல் விருத்தம்

அருமையாயனலில்வந்த வருங்கிளியேநீவாழி
வருகிறேன்பூசைசெய்து மகிழ்வுடனிருப்பாய்மாதே.

வசனம்

கேளும் பெண்ணே துரோபதா! இப்போது உன்னை யழைப்பித்த காரணம் யாதெனில், வனங்களிற் சென்று புண்ணிய தீர்த்தமாடி நித்திய கருமங்களை முடித்து வருகிறோம் அதுவரையில் பத்திரமாகப் பன்னகசாலையில் இரும் பெண்ணே.

துரோபதை சொல் தரு

கண்ணிகள்

புதுவனத்தில்என்னைவிட்டுப் போவதிதுஞாயமல்ல
போஜாகுணவாசா வெகுநேசா தனிபேசாமலே
நீசாவெனப்பூசைசெய்யப் புது

தருமபூபதி சொல் கண்ணிகள்

மதிகுலத்துமாதரசே வஞ்சமுண்டோசஞ்சலமேன்
மதியேகுணநிதியே மிகுதுதியாகியமயிலேஇதோ
வாரேனான்பதறுமலே சிதறுதிருகுயிலே மதி

துரோபதை சொல் கண்ணி

கரடிபுலிசிங்கமுள்ள கானகத்திலென்னைவிட்டுக்
கண்ணாளனேநண்ணுகவே எந்நாளுமேவெண்ணுய்க்கூடி
குண்ணம்பெற வாழ்வோமித்த கரடி.

### தருமபூபதி சொல் கண்ணிகள்

தர்மம்வந்துநம்மைக் காக்கத்தாழ்வுமுண்டோவாழ்வாசி
சாலிகுணசாலிதிரு மாலியிருநீயே
பாலிதிரிசூலியிட பாகன்பூசைசெய்ய தர்

### துரோபதை சொல் கொச்சகம்

சந்திரகுலசேகாரே சாமியிதன்முன்னுண்டு
வந்தோமேயிவ்வனத்து வகையறியாநானடியாள்
எந்தனையும்நீர்கூட்டி யேகியிந்தவனமுழுதும்
சந்தேகநீங்கிடவே சாட்டியெங்குங்காட்டுவீரே.

### வசனம்

கேளும் பிராணநாயகா! இதற்குமுன் இந்த வனத்துக்கு வந்திருந்தும் இதையான் கண்டறிந்ததில்லை ஆகலால் என் மனக்களிப்படையும்படியாய் இவ்வனமுழுதுங் காண்பிக்கவேண்டும் பிராணநாயகா.

### தருமர் சொல் வசனம்

ஆஹா நல்லது அப்படியே உன் மனோபீஷ்டப்படி பூசை முடிந்தவுடனே அழைத்துக்கொண்டுபோய் காண்பிக்கிறோம் அதுவரையிற் பன்னகசாலையிற்போய் பத்திரமாகயிரும் பெண்ணே துரோபதா.

### பஞ்சபாண்டவர்கள் வனத்திற்புகுந்து பூஜாவிதி முடிக்கும் கொண்டிச்சிந்து

நடந்தாரேபஞ்சவர்கள்-திவ்விய
நதியிலிறங்கியேஸ்நானஞ்செய்தார்
திடஞ்சேர்பூங்காவனத்தி-லுற்ற
திவ்யபுட்பங்களெடுத்தாரே
பரனேபராபரனே-யென்று
பஞ்சாக்ரமுமணிந்தார்கள்
மேருவைச்சிலையாகச்-செய்த
வித்தகனேசொலுஞ்சத்தவனே
ஆனையுரிபோர்த்தே-யொளிர்
ஆரணனேபரிபூரணனே
மானுமழுவேந்தும்-சா
மங்கைக்கிடந்தந்தசங்கரனே
திங்கண்முடி தரித்தே-யொளிர்
தெக்ஷணாமூர்த்தியேபட்சம்வைத்து
எங்கள்குறைதீரும்-ஐயா

யேகனே சந்திரசேகரனே
ஆழிதரித்தகையா-எங்க
ளாதிமூலப்பொருளேயருள்வாய்
ஏழையர்க்கட்கிரங்கிப்-பூசை
யீடேற்றிக்காத்திடுமெங்கோவே.

பொது வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் பஞ்சபாண்டவர்கள் வனத்துட்சென்று தீர்த்தமாடியபின் பூங்காவனத்துட் பிரவேசித்து கோங்கு மந்தாரம் புன்னை பாரிஜாதம் சண்பகமுதலிய நறுமலர்களைக்கொய்து அரிபூசை சிவபூசை முதலியவைகளை முடித்துகொண்டிருக்கையில் தரும பூபதியினுடைய ஆஞ்ஞையினால் புன்னகசாலையைச்சேர்ந்த பாஞ்சாலியம்மனவள் அவள் பூஜாவிதியி லிருக்கும் விதங்காண்க.

இதுவுமது விருத்தம்

சுருதியின்முறையைப்போல துரோபதைதானெழுந்து
பரிவுடன்பூசைசெய்யப் பன்னுநன்னதிரோடி
நறுமலர்க்காவுக்கேகி ரஞ்சிதமலருங்கொண்டு
பிரியமாய்மந்திரமோதிப் பூசைகள்செய்யலுற்றாள்.

## துரோபதையம்மன் பூசைசெய்யுந் தரு

இராகம்-உசேனி, தாளம்-ரூபகம்

கண்ணிகள்

சந்திரஜடாதரசங்கரனேபரனே
சத்துச்சித்தானந்தமாகியதற்பரனே — ஓமகாதேவா

திங்களுங்கங்கைசடையிற்றரித்தவனே
செங்கையில்மான்மழுச்சூலமுமேற்றவனே — ஓமகாதேவா

ஆலகாலமுண்டமாரையாண்டவனே
அம்பலத்தினின்றுவாடியதாண்டவனே — ஓமகாதேவா

கூற்றைக்கடிந்தே குழந்தையைகாத்தவனே
கோதில்தவளநிறப்பொடிபூத்தவனே — ஓமகாதேவா

முப்புரந்நீறுயெரிசெய்தவற்புதனே
முயலகன்றன்னையழுத்தியபொற்பதனே — ஓமகாதேவா

அரவாபரணமணிந்திலகுஞ்சீலனே
அடியாரகமலருறையும்லோலனே — ஓமகாதேவா

பாற்கடலிற்பள்ளிகொண்டருளுமாயவா ஓமகாதேவா
பட்சம்வைத்தேயென்னை ரட்சித்திடுந் தூயவா

காப்பவருன்னையல்லாலெவர்சொல்லையனே ஓமகாதேவா
கர்மம்வினை தவிர்த்தாண்டிடுவாய்மெய்யனே.

### இதுவுமது போற்றி விருத்தம்

காமனையெரித்தகண்ணுபோற்றி
ஏமனையுதைத்தவிறைவாபோற்றி
சோமனைத்தரித்தசுடரேபோற்றி
பூமிசையெனக்கருள்புரிவாய்போற்றி.

### பொது வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் அதிவீரபராக்கிரம சாலியாகிய பாண்டுமக்களின் தேவியென்னும் பாஞ்சாலியம்மனவள் பஞ்சசுத்தியோடு ஸ்ரீகைலாசபதியாகிய பரம்பரனையும்பாற்கடற்றுயின்றோனாகிய கண்ணபிரானையும் பணிந்து பன்னகசாலையிலிருக்கும்போது செயித்தரசனென்னுஞ் சயிந்தவராஜன் அவ்வனத்திற் பாஞ்சாலியைத் தேடி வருகிற விதங்காண்க.

## ஜெயித்தரசன் வருகிற தரு

### இராகம் கடுக்கா

### கண்ணிகள்

வீரன்பலவனந்தேடியே-அதி
சூரன்பாஞ்சாலியைநாடியே

வெள்ளியங்கிரியானைப்போற்றியே-அவ
னுள்ளமுருகிமனந்தேற்றியே

தட்டிஜல்லடங்கட்டியிருக்கியே-யவ
னெட்டுப்பார்வைமீசைமுருக்கியே

தாளிற்பூண்டிலங்குஞ்கெச்சையும்-அவன்
தத்திப்பாயவொலிக்குங்கெச்சையும்

மந்திரவாள்தன்னைக்காட்டியே-மிரு
தந்தரயோசனைகளைக்கூட்டியே

சத்திதுரோபதையென்றுயெங்குமே-அவன்
புத்தியோடியொளித்துத்தங்குமே

சந்திராரமுமின்னிஜொலித்தாட-அவ
னெங்குமேபாய்ந்துகெக்கலித்திட

கண்டசிங்கம்புலிக்கரடியை-வெட்டித்
துண்டந்துண்டமாகவீசியே

பன்றியைக்கால்பிடித்தாட்டியும்-அவ
ஞெண்டியிருப்பவரையோட்டியும்

வேடிக்கையாய்வேட்டையாடியே-யங்கு
நாடியேவேடரைத்தேடியே

திக்குத்திசைதெரியாதோட்டி-மிகு
அக்ரமங்களவனுட்டியே

அரியதுரோபதையைக்கண்டவன்-உற்ற
ஐவரில்லையெனக்கொண்டவன்

சுத்தவீரமுள்ளதீரனும்-அவன்
பத்தியுடனேசேர்ந்தான்வீரனும்.

பொது வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப் பிரகாரம் ஜெயித்ரசனென்னும் வேந்தன் செப்புதற்கரிய காமியவனத்திற் சிங்கம்போற் பிரவேசித்துத் தனது புஜபல பராக்கிரமத்தால் அவ்வனத்துள் யானை, புலி, கரடிகள் முதலிய மிருகக்கூட்டங்களை யெல்லாம் கண்டதுண்டப் படுத்தியும், அக்கானகத்தில் வாழும் வேடுவர்களை கண்ணுக்குத் தெரியவொட்டாமலோட்டி அட்டகாசஞ்செய்து ஐவர்களது தேவியாகிய பாஞ்சாலியிருக்கும் பன்னகசாலையைக் கண்டு பாண்டவர்களில்லையென்று மனேதிடங்கொண்டு பயபக்தி வினயத்தோடும் அச்சாலையுட் பிரவேசிக்கையில் அவனைக்கண்ட துரோபதையம்மனவள் கூறுகின்ற விதங்காண்க.

துரோபதையம்மன் சொல் போற்றிக்கவி

அண்ணலேசரண மதிபனேசரணம்
மண்ணுளோரேத்து மகிபனேசரணம்
தண்ணருமுனது தாண்மலர்சரணம்
நண்ணியவகையி னவிலுவீர்சரணம்.

இதுவுமது தரு

பல்லவி

நான்செய்தபாக்கியமேபாக்கியம் உந்தனைக்காண
நான்செய்தபாக்கியமேபாக்கியம்

அநுபல்லவி

தேன்மொழித்தமயனே தேர்படையில்லாமல்
ஏனிங்கேவொண்டியா யிந்தவனத்தில்வந்தாய் ந

சிரணங்கள்

வேட்டையாடவந்தாயோ வீரர்களெதிர்த்தாரோ
கூட்டியபடைகளைக் டுகொன்றுவிட்டாரோசொல்லும் நா

முகங்கள்வாடுவதென்ன முனிவர்சாபந்தந்தாரோ
அகமதுகளித்திட வறியவுரையுமண்ணு நா

உனக்குவந்தகுறைக ளெனக்கதுவில்லையோதான்
உடன்பிறந்தாளோதங்கை தடங்களில்லாமற்சொல்லும் நா

வசனம்

கேளும் எனது ஆருயிர்த்தோழமையாகிய அண்ணுவே! தாங்கள் இந்த ஆரண்யத்தில் தனித்து முகம்வேறுபட்டு ஒண்டியாகவந்த காரணம் யாது? உமது மனவருத்தந்தை யொன்றுமொளியாமல் சொல்லும் அண்ணு.

## ஜெயித்தரசன் பாஞ்சாலிக்குச் சொல்லும் தரு

கண்ணிகள்

கூடிப்படைகளுடன் காட்டையடைந்துகாண
வேட்டையாடிடவும் நான்வந்தேனே
கோடிமிருகங்களை யோடிடாமலேபற்றிக்
கொன்றேனே வெற்றிகண்டேனே
தீட்டியபாணத்தைப் பூட்டிவில்லினிடத்திற்
சிங்கம்யாளிகளைக் கொன்றேனே
சிறுத்தைக்கரடியுடன் பருத்தபுலிகளையுஞ்
சிதறச்சிதறக் கருவறுத்தேனே
உன்னைக்காணவேண்டி வேணநாளாகவே
யுள்ளத்திலன்புவைத்து நொந்தேனே
பொன்னைப்பழிக்குமுந்தன் றிருவதனத்தைக்கண்டே
பூரித்தேவுடலமும் வந்தேனே
எந்தன்முகமுமெய்யும் வாடியதென்னவென்று
இரக்கங்கொண்டனை தங்கையேநீயே
வுந்தன்சிருங்குலைத்தே யிவ்வனத்திற்றிரிய
வூன்றினனேபிரம னென்பேயே
துகிலுங்கூந்தலு மழுக்கடைந்தேமேனியும்வாட
துரோகித்துரியன் செய்தானேகூறு

அகிலமாதாவென்றே யறியாமலவன்தொட்டான்
அப்போதேயவன் பட்டானினியேது

### இதுவுமது விருத்தம்

பாவியத்துரியனம்மா பரிதாபம்பார்த்திடாமல்
ஆவியுந்தளர்ந்துவாட வண்ணனைக்காட்டில்விட்டான்
மாவிளங்குயிலேயெந்தன் மைத்துனரைவரெங்கே
ஆவலாய்வந்தேன்காண வறியவேயுரைசெய்வாயே.

### வசனம்

கேளுமம்மா எனதிரு கண்மணிபோன்ற தங்கையே! பாபியாகிய அந்தகன்பெற்ற அரவக்கொடியோனென்னுந் துரியோதனன் கிஞ்சித்தேனு மிதக்கமில்லாமல் நாடு நகரங்களைப் பறித்துக்கொண்டதன்றியும், தர்மசிந்தையையுடைய தருமபூபதியைத் தமயனென்றுங் கருதாமல் காட்டில் தவிக்கும்படியாகச் செய்தவை சரியோ? ஐயோ அம்மணி! உன்னைக்கண்ட என் மனம் பத்தியெரிகின்றதே; என் செய்வேன், நான் இப்போது ஆவலாய்க்காண வந்தபடியால் என் மைத்துனன்மார்களெங்கே? அவர்களை யான் பார்க்கவேண்டு மாதலால் சொல்லுமம்மா தங்கையே.

## பாஞ்சாலியம்மனுக்கும் ஜெயித்தரசனுக்கும் தரு

### வினாவிடைக் கண்ணிகள்

அதிபலதீரா-மதிமுகவீரா
அண்ணுவேபஞ்சவர்களென் தமயா
அரன்பூசனைசெய்யபிரியமதாகவே
அடவியிலேகினரென் தமயா

### ஜெயித்தரசன் சொல் கண்ணி

அன்னமேதேனேயென்னருங்கிளியேரதியே
அடவியில்நீவரலாகாதே
உன்னிடமதியென்னவுருகத்தலைவிதியோ
வுனக்குநலமோயிந்தவனத்தில்வர

### பாஞ்சாலி சொல் கண்ணி

சிந்துவருட்சுதனு-செங்கதிரின்வதனு
திசைமுகன்விதியதுபிசகாதே
என்குறைதீரவுமெழில்நகர்சேரவு
மெக்காலஞ்செல்லுமோவென் தமயா

### ஜெயித்தரசன் சொல் கண்ணி

மாவிளங்குயிலேயீவனத்தில்நின்றுதவிக்க
வந்தவிதிகளென்னவென்றுயே
காவிலுறைகிளியேகதிரொளியாமணியே
கானகத்திருப்பதென்னவென்றுயே.

வசனம்

கேளும் எனதாருயிர்த் துணைபோன்ற அண்ணுவே! தாங்கள் என்னை இந்த வனத்திலிருக்க வொண்ணுதென்று சொன்னீரே, வந்த விதியை எப்படி துலைப்பது சொல்லும் அண்ணு.

### செயித்தரசன் பாஞ்சாலிக்குச் சொல் விருத்தம்

வடிவுள்ள தங்காநீயிவ் வனந்தனிலிருந்தாயானுற்
குடிபழுதாவதோடுங் குறைவுகள்வந்துநேரும்
முடிமன்னர்வனத்தைவிட்டு வொண்ணகராடையுமட்டும்
துடியிடைமாதேயென்பின் சுகித்திடவருவாயம்மா.

வசனம்

கேளுமம்மா ரதிக்கொப்பாகிய அழகைப் படைத்த என் தங்கையே! நீ இந்த வனத்தில் பாண்டவர்களுடனே சஞ்சரித்தால் ஒரு வேளை தனித்திருக்கும்போது தேவகாந்தர்வ ராக்கத ராஜக்கள் அநேகம்பேர் வனத்துக்கு வருவார்கள் அவர்கள் உன்னைத் தனியே காண்பார்களாயின், உன் மனதுக்கு வருத்தம் வரும்படியாய்ப் பிடித்துக் கொண்டு போய்விடுவார்களாதலால் பாண்டவர்கள் முன்போல் இராச்சியத்திற்கு வந்து சேருமளவும் உனது நாத்தியுடனே கூடிக் கலந்து விளையாடிக் காலங்கழித்திருப்பாய்; அரண்மனைக்கு என்பின் வாருமம்மா தங்கையே.

## பாஞ்சாலியம்மனுக்கும் செயித்தரசனுக்கும் தர்க்கம்

### வினவிடைக் கண்ணிகள்

மன்னவர்தமைவிட்டுன் மனைநாடிவருவதென்
மார்க்கமோவெனக்கேற்குமோ.

### செயித்தரசன் சொல் கண்ணி

வந்தாலதற்கென்ன வெந்தனரண்மனைக்கு
வஞ்சமோயென்ன பஞ்சமோ

### பாஞ்சாலி சொல் கண்ணி.

பஞ்சவர்தமைவிட்டு மிஞ்சிவந்திடலாமோ
பத்தியோயிதுவென்முத்தியோ

செயித்ரசன் சொல் கண்ணி

உன்னிதபஞ்சவரா லென்னபலனைக்கண்டாய்
உத்தமிவந்தால் குற்றமோ

பாஞ்சாலி சொல் கண்ணி

குற்றமில்லாசத்யதீரா பர்த்தரைவரில்லாமற்
கூடுமோவர நாடுமோ

செயித்ரசன் சொல் கண்ணி

சங்கைபென்ன திங்கள்குல மங்கையேதாய்வீடுவர
சேதமோவிதில் பேதமோ

பாஞ்சாலி சொல் கண்ணி

சற்குணநற்குணமுள்ள தர்மபூபதிகள்மொழி
தப்பியேவந்தாலெப்படி

செயித்ரசன் சொல் கண்ணி

எப்படியென்றிப்படிக்குச் செப்பவேண்டாம்நீவருவாய்
என்மனை யம்மாவுன்மனை

பாஞ்சாலியம்மன் சொல் விருத்தம்

வருந்தியேயெனையழைக்கு மகிதலம்புகழுமண்ணு
இருந்திடுந்தருமபூப ரிட்சணம்வருவார்கண்டு
பரிந்துநீஎனையனுப்ப பட்சமாய்விடைகளேற்று
அறந்தருஞ்சிந்துதேச மடைவுடனேகுவோமோ.

வசனம்

கேளும் அண்ணுவே! தாங்கள் தங்களுடன் வரும்படியாய் என்னை அழைக்கின்றபடியால் இன்னஞ் சற்றுநேரத்தில் பஞ்சவர்கள் வந்து சேருவார்கள். அவர்களுடன் இச்சேதியைத் தெரிவித்து என்னை யனுப்பும்படியாய் விடைபெற்றுக்கொண்டு தங்களிஷ்டம் போல் போகலாம் யிரும் அண்ணுவே.

பொது விருத்தம்

இந்தவேளையும்போகட்டு மினியொருவேளாவேளை
வந்துநானழைத்துக்கொண்டு மகிழ்வுடன்போரேனென்று
மந்திரவாளமன்னன் மறந்தவன்போலேவைத்துத்
தந்திரமாகவந்து தான்ரதமேறினனே.

வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் துரோபதையம்மன் கூறிய உண்மை வாக்கியத்தைக் கேட்ட செயித்தரசன் நம்முடைய தந்திரங்களியாதுஞ் சொல்லவில்லையே யென்று மனதிற்றோன்றியும் மறுபடியுமோர் தந்திரஞ் செய்ய உத்தேசித்து, ஓ அம்மணி! நான் வந்து நெடுநேரமானபடியால் ஏது காரணமோவென்று எனது சேனைகள் கலக்கப்படுவாராதலால், இந்த வேளைபோக இன்னொரு வேளையில் வந்து உனது நாதாக்களிடத்தில் உத்திரவு பெற்றுக் கொண்டு நமது நகரத்துக்கு அழைத்துக்கொண்டு போகின்றேன். எனக்குச் சிலவு கொடுந் தாயேயென்று கேட்க, அதற்குப் பாஞ்சாலி அப்படியே போய்வாரும் அண்ணாவென்று கூற; அப்போது வேந்தன் தனது மந்திரவாளை அப்பன்னகசாலையில் மறந்து வைத்தவன்போல் வைத்துவிட்டு அவணின்று நீங்கித் தனது சேனை சைனியங்களைக் கண்டு ரதமேறிப் படைகளை யெச்சரித்து தேசத்தை நோக்கி வருகிற விதங்காண்க.

## செயித்தரசன் ரதமேறி நடக்குந் தரு

பல்லவி

நடந்தானே ரதமேறி செயித்தரசன்
நடந்தானே ரதமேறி

அநுபல்லவி

நடந்தானே ரதமேறி ராணுவம்நெருங்கிட
அடர்ந்தவனமுங்குண்ணு மதிர்ந்திடவேகமாய் நட

சரணங்கள்

அலைகடல்போலொலிக்க மலையுங்கிடுகிடென்ன
அருயமுரசொலிய லண்டமுநடுங்கிட நட

இரதகஜதுரக படைவீரர்கணடக்க
மதகிரியைநிகர்த்த மன்னனெனுந்திண்டோளன் நட

யாளிகரடிபுலி யானைகளும்வீரிட
தூளிப்படலமெங்குஞ் சூழ்ந்தேவானத்தைமூட நட

பொது வசனம்

அகோதெப்படி யென்றால் இந்தப்பிரகாரம் செயித்தரசன் தனது சேனைசைனியத்தைக் கலந்து சிந்துதேசம் நோக்கிப் போகும் போது பாஞ்சாலியம்மனவள் பன்னகசாலையிலிருக்கும் மந்திர வாளைக் கண்டு கூறுவாள்,

### துரோபதையம்மன் சொல் விருத்தம்

சந்திரசேகரனேசிந்து தனைபனென்றமயனூர்தன்
மந்திரவாளைவைத்து மறந்தவர்சென்றதாலே
தந்திடாவிட்டாலென்னைத் தங்கையென்றெண்ணுவாரோ
இந்தநீள்வனத்திற்கண்டு எப்படியளிப்பேனையா.

வசனம்

அரஹரா! ஸ்ரீ கைலாசபதியாகிய சந்திரஜடாதாரமூர்த்தியே! சிந்து தேசாதிபதி யளித்த என் தமயனாகிய ஜெயித்ரதசனென்பவர் தனது மந்திரவாளை எடுத்துக்கொண்டு போகக் கவனமில்லாதவ ராய்ச் சென்றபடியால் கண்ணுற்ற யான் இதனைக் கொண்டுபோய் அவர் கையிற் சேர்க்காவிடில் தங்கை யென்னும் பட்சத்தை மறந்து என்மீது சலனப்படுவரே என்செய்வேன்; இந்த நெடுவனத்தில் அவரை யான் எங்கே தேடிக் கொடுக்கப் போகின்றேனையோ தெய்வமே.

### பாஞ்சாலியம்மன் சொல் தரு

பல்லவி

மந்திரவாளெடுத்தேன் தொழுதுபோற்றி
எந்தன்கரத்திற் றெடுத்தேன்

அநுபல்லவி

இந்தவனந்தனிலே யெங்கோரானோடுவே
னெனக்கெதிரிலேவெகு புதருகள்தோணுதே மந்

சரணங்கள்

போகும்வழிதனிலே புலிகளுங்கரடியும்
ஏகமாய்வருகுதே யிணையிற்சிங்கமுமாக மந்

காடும்புற்பூடுமென்னை மறைக்குதே
வோடுமிருகமையோ வுறுமியேபார்க்குதே மந்

தூரப்போகுதேரதமென் செய்வேனவர்
வாரவேளையாச்சுதே வையையோவைத்த மந்

வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் துரோபதை யம்ம னவள் ஜெயித்ரசனால் மறந்து வைக்கப்பட்ட மந்திரவாளை யெடுத் துக்கொண்டு தமயனென்னும் பரிவினாற் சேர்ப்பிக்க வேண்டுமென் றெண்ணமுற்றவளாய் அவ்வனத்தில் வாழுஞ் சிங்கம், கரடி, புலி முத லிய கணக்கூட்டங்களைக் கண்டு அச்சமுற்று யாதுந் தோற்றாமல்

தேடிக்கொண்டு வருகையில், அவ்வேந்தனது ரதத்தைக்கண்டு மிகு ஆவலோடும் இரதத்தை நிறுத்தும்படியாய்க் கூறுவாள்.

## துரோபதை சொல் தரு

உசேனி-ரூபகம்

கண்ணிகள்

சிந்துபூபதிவித்தைவாளனே ஓ — அண்ணா அண்ணா
தீரனேவுந்தன்தேரைநிறுத்துவாய்

மந்திரவாளைத்தவைத்து மறந்தீரே ஓ — அண்ணா அண்ணா
மகிழ்ந்துதிரும்பிப்பாருந்தீரனே

கூவுகின்றசத்தம்கேட்கவில்லையோ ஓ — அண்ணா அண்ணா
குருகிவந்திடறில்லும்நில்லுமே

தேவலோகமுங்கேட்கும்சத்தம் ஓ — அண்ணா அண்ணா
திருச்செவிதனில்கேட்கவில்லையோ

பொது வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் பாஞ்சாலியம்மனானவள் வாளாயுதத்தை யெடுத்துக்கொண்டு அண்ணா அண்ணாவென்று கூவிக்கொண்டுவரும் வோசையைக்கேட்ட வஞ்சகனாகிய செயித்தரசன் மனத்திற் கபடுகொண்டு நடக்கின்றவிதங் காண்க.

## செயித்தரசனுக்கும் பாஞ்சாலியம்மனுக்கும் தர்க்கம்

வினா விடைக் கண்ணிகள்

வன்னிதுரோபதைவருங்காரியமுன்னியே
மன்னன்மகிழ்ந்துதேரையோட்டினான்
வுன்னிதமாயின்பம்பூட்டினான்

பாஞ்சாலி சொல் கண்ணி

ஓடிவந்திடுங்கால்கள்நோகுதே ஓ — அண்ணா அண்ணா
வுந்தன்ரதநிறுத்தச்சொல்லுவாய்

காடாதலால்முட்கள்தைக்குதே ஓ — அண்ணா உந்தன்
காதேயடைந்ததோசொல்பாதகா

செயித்தரசன் சொல் கண்ணி

காரிழைதுரோபதைவருகிறவிதங்காண்டே
கடுகுத்தேரைநடத்திவந்தானே
முடுகிவழியைப்பற்றித்தொடர்ந்தானே

### பாஞ்சாலி சொல் கண்ணி

வண்டியினேசையும்சேனேகளினேசையும் ஒ அண்ணு அண்ணு
வளர்ந்தன துசெவியிற்கேட்கவில்லேயோ ஒ அண்ணு அண்ணு
ஒண்டியாகவேயாேடிவருகின்றேன் ஒ அண்ணு அண்ணு
உந்தன்செவியிற்கேட்கவில்லேயோ

### ஜெயித்தரசன் சொல் கண்ணி

அதிவிதசூராணும்ரதமதைநிறுத்தியே
அம்மனேக்கண்டுமிகக்களித்தானே
செம்மையுடனேசிந்தைமகிழ்ந்தானே

### பாஞ்சாலி சொல் கவி

தேடிவந்துந்தன்வாளேத்திரும்புகால்மறந்தாயென்றே
நாடிவந்துன்னேக்கூவினான் மிகநொந்தேனண்ணு

### செயித்தரசன் சொல் கவி

ஓடியேவந்தபாத மூளக்குமேயென்னசெய்வேன்
நீடியமந்திரவாளே நீட்டியேதருகுவாயே

### பாஞ்சாலி சொல் வசனம்

சேளும் எனதாருயிர்த் துணேபோன்ற அண்ணுவே! தாங்கள் தங்களுடைய வாளேப் பன்னகசாலேயில் வைத்து மறுபடியும் எடுக்க ஞாபகமில்லாமல் மறந்து வந்துவிட்டபடியால் அதைக்கண்ட யான் எடுத்துக்கொண்டு தங்களுக்குச் சேர்ப்பிக்கும்படியாய் இக் கானகத்தில் உங்களே நாடித் தேடிவந்த கால்கள் நோவுகின்றதே என் செய்வேன் அண்ணு.

### செயித்தரசன் சொல் வசனம்

ஆ ஆ எனது தங்கையே! ஐயோ இந்த வாளிருந்தாற்ருனென்ன வீணே இதற்காக நீ கூவிக்கொண்டு ஓடிவரலாகுமோ, மேலும் நீ கூவியசத்தம் கேளாமலிருந்த காரணம் யாதெனில், வண்டிகளினது கிரிச்சலினுலும், யானேசேனே பரிவாரங்கள் நடக்கும் வோசையினுலும் கேளாமற் போய்விட்டதேயன்றி வேறல்ல. என்ன பாவம் என்னமாய் ஓடிவந்தாயோ வாளேநீட்டித் தருவாய் அம்மணி.

### பாஞ்சாலி சொல் தரு

மந்திரவாளெடுத்தே நொந்தோடிவந்தேனே அண்ணுவே வுந்தன்
மலர்க்கரந்தனேநீட்டி வாளேவாங்குவதாயெந்தன் அண்ணுவே

## செயித்தரசன் சொல் தரு

### கண்ணிகள்

சந்திரபிம்பவதனியுந்தன் பாதம்வருந்த
தரைமீதோடிவந்தாயே அம்மாவே
இந்தவாள்தனக்காக வேணுவீணாகவந்தாய்
எட்டிக்கொடுப்பாயதை அம்மாவே.

### பாஞ்சாலி சொல் கண்ணி

எட்டியான்கொடுத்திட எந்தன்கரம்நோகுதே அண்ணாவேநீ
ரெட்டிவாங்கிவுமக் கெட்டலையோஎன்செய்வே னண்ணாவே

### செயித்தரசன் சொல் கண்ணி

எட்டுதிசைபுகழு மிளங்கொடியேயுனக்கு
எட்டவில்லையென்பதா லம்மாவே
திட்டமாந்தேர்மீதோர் படியேறியவ்வாளை
எட்டிக்கொடுப்பாயெந்த னம்மாவே.

### பொது விருத்தம்

மன்னனிந்தப்படியுரைக்கவதனைக்கேட்ட
வஞ்சகமிலாப்பாஞ்சாலியுண்மையென்றே
துன்னுமந்தத்தேர்மீதோர்படியிலேறித்
துணைவாளைநீட்டுகயிற்றுகளொன்றில்லாக்
கன்னியிவள்சிக்கினளென்றேரதத்திற்
கட்டியதோர்புரவிகளைவிரைவாய்த்தூண்ட
மின்னலதுபோனடக்கமாதுகண்டே
விழுகின்றாள்கையைமுறித்தழுகின்றாளே.

### வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் செயித்தரசன் கூறிய மொழியைக்கேட்ட குற்றமற்ற பாஞ்சாலியம்மனானவள் உண்மையென்றே நம்பி அவன் உரைத்தவைபோல் அத்தேரினது படியின்மீ தேறிச் சந்திராயுதத்தை இந்தாரும் அண்ணாவென்று கையைநீட்டும் போது கண்ட வேந்தன் இவள் சிக்கிக்கொண்டாள் நமது வேந்தனது குறை யீடேறிவிட்டதென்று சந்தோஷங்கொண்டவனாய் தனது சாரதியை நோக்கிக் குதிரைகளை அதிவேகமாய்த் தூண்டி ரதத்தை நடத்தும்படியாகச் சைகை செய்ய அதுபோலவனுங் குதிரைகளைச் சவுக்கினாலடித்து மனோ வேகத்தினுமிஞ்சிய வேகமாய் இரதத்தைக் கொண்டுபோக அதைக்கண்ட துரோபதையானவள் ஐயோ பாபி யாகியவன் நம்மை வஞ்சிக்கவந்து வார்த்தைகளாடி வாளை மறந்த

வன் வைத்துவிட்டுவந்து மோசஞ் செய்தானே என் செய்வோமென்று இரதத்தின்மீது சாய்ந்து கையை முறித்துக்கொண்டு புலம்புகின்ற விதங்காண்க.

## துரோபதை புலம்பல் தரு

இராகம்-நீலாம்புரி, அடதாளம்

கண்ணிகள்

ஐயோநானென்னசெய்வேன் தெய்வமே-யிந்த
அவதிக்காளாகினேனே-தெய்வமே
வையம்பழித்திடுமே-தெய்வமே-அறியா
வகைமோசமாகினேனே-தெய்வமே
தமையனைப்போலவந்து-தெய்வமே-என்னை
சதிமோசம்பண்ணினானே-தெய்வமே
மறந்தவன்போலேவாளை-தெய்வமே-வைத்து
வஞ்சம்செய்தானேபாவி-தெய்வமே
பஞ்சவர் தங்களுக்கு-தெய்வமே-யானும்
பழிகாரியாகினேனே-தெய்வமே
அஞ்சாமலேயிப்பாவி-தெய்வமே-இந்த
அபகீர்த்திக்காளாக்கினான்-தெய்வமே
பாவிதுரியன்சொல்லை-தெய்வமே-கேட்டு
பழிகாரியாக்கினானே-தெய்வமே
ஆவிபதறுதையோ-தெய்வமே-இதனை
யார்பாலெடுத்துரைப்பேன்-தெய்வமே
ஐவர்தமக்கிச்சேதி தெய்வமே-சென்று
யாரெடுத்துரைப்பார்கள்-தெய்வமே
பசப்பவார்த்தைகள்பேசி-தெய்வமே-என்னைப்
பாழிற்றள்ளிவிட்டானே-தெய்வமே
காட்டில்வாழுங்கணங்கள்-தெய்வமே-இதையென்
காவலர்க்குரையீரோ-தெய்வமே
நாட்டில்கொண்டேகுவானேல்-தெய்வமே-எந்தன்
நாதரெப்படியறிவர்-தெய்வமே
பிரமன்செய்கற்பனையோ-தெய்வமே-பேதை
பின்னேதுமறிகிலேனே-தெய்வமே
தமயனென்றேயோடியான்வந்தேனே-என்னைச்
சண்டாளன்வஞ்சித்தானே-தெய்வமே
பீமராஜனில்லையே-தெய்வமே-இவனை
பெலிகொள்ளவேந்தன்முன்னே-தெய்வமே

சோமசேகரனே ஓதெய்வமே-என்னை
துன்பஞ்செய்யத்தகுமோ-தெய்வமே

பொது விருத்தம்

பஞ்சவர்கடேவியிர்தப்படியிரங்கப்
பாராளுந்துரியனுரை கேட்டுவந்த
வஞ்சகமார்செயித்ரசன் வனிதையாளின்
வதனமதைநோக்கிமிகத் துன்புற்றோன்போல்
இன்சொலுடைதங்கையரே நீயென்மீது
இழுக்குரைத்தல்தருமமல்ல புரவிதானு
மிஞ்சிதுலைதூரம் வந்துவிட்டதாலே
விசனமதைமாற்றெனவே விளம்புவானே.

வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப் பிரகாரம் பாண்டுமக்களின் தேவியாகிய பாஞ்சாலிபடுந் துன்பத்தைப் பாராளுந் துரியனது மொழியைக் கேட்டுவந்த பாதகனாகிய ஜெயித்ரசன் அம்மனது முகாரவிந்தத்தை நோக்கி மிகவும் பரிதாபங்கொள்பவனைப்போல், ஓ தங்கையே யானென்ன செய்வேன், இன்சொலுடைய நீ என்னை வைவது தருமமல்லவே இரதத்திற் பூட்டிய புரவிகளினது குற்றமேயன்றி என்னால் வந்ததல்லவே உனது கவலையை நீக்குவாயென்று கூறுவான்.

செயித்ரசன் சொல் விருத்தம்

அழவேண்டாமெனதுதங்கா ஐயையோஎன்னசெய்வேன்
பழகாதகுதிரைதன்னைப் பாரியரதத்திற்பூட்டி
முழுமோசமாகிவிட்டேன் முடுகியேதடைபடாமல்
இழுபடாரதமுஞ்செல்ல இதன்பலமறிகுவாயே.

வசனம்

கேளுமம்மா எனது தங்கையே! நீ ஏதுக்கழுகிறாய் ஐயோ என்னாலே என்ன குற்றமிருக்கிறது. பழகாத குதிரையை ரதத்திற் கட்டினபடியால் கைக்குப் பிடிபடாமல் அதிவேகமாய் மிரட்சிகொண்டு வந்துவிட்டது ஆகிலும் நீயார் நானார் வேற்றுமையல்லவே அம்மணி பட்டணம்போய்ச் சேர்ந்தபிறகு பழகிய புரவிகளைப் பூட்டி மறுபடியும் உன்னைக் கொண்டுவந்து இவ்விடத்திற் சேர்க்கிறேன் நீ ஏதுக்கும் அஞ்சவேண்டாம் தங்கையே.

துரோபதாதேவி சொல் தரு

கண்ணிகள்

ஏதடாவுன்னிடசூதுகளைத்துமே
கண்டேனேபாவி கண்டேனே

எதிரிகள்வருமுன்னே எந்தனைவிடடாநீ
மூண்டனே பாவிமூண்டனே

செயித்ரசன் சொல் கண்ணி

தங்கையேவுன்னிட மனதுவெறுத்தன்றோ
பேசுராய்என்னையேசுராய்
தாயேஎந்தனையும்நீ நாய்போலவெண்ணியே
பேசுராய்வீணே ஏசுராய்

துரோபதாதேவி சொல் கண்ணி

பிரியமானஎந்தன் தமையனென்றுந்தனை
எண்ணினேனிப்போ தெண்ணினேன்
போர்வைக்குளேகத்தி வைத்தபுலையனென்று
குண்ணினேன்பாவி குண்ணினேன்

ஜெயித்ரசன் சொல் கண்ணி

ஐயையோயிதுவென்ன பாவமென்றேன்செவி
மூடினேனம்மா மூடினேன்
அலையாமல்வனந்தன்னி லொருவகையால்வழி
தேடினேன்அம்மா தேடினேன்

துரோபதாதேவி சொல் கண்ணி

அறிந்தேனுந்தனை யிப்போநேரமுமாகுது
வரும்பாவியுன்ரதம் வேகமாய்ப்போகுது
எரிவிளக்கினிற்பூச்சிப் போலேமடியாதே
என்னைவிட்டுன்னுயிர் பிழைபடாநீதப்பி

செயித்ரசன் சொல் கண்ணி

மைவிழியாளேயா னுன்னைப்பணிகுவேன்
மலரடிதன்னிலே விழுகுவேன்
பொய்யாகவென்மீது பிழைகளைநினைப்பது
புண்ணியமல்லவே குண்ணுதலாகுமே

துரோபதாதேவி சொல் விருத்தம்

திருடருக்கோவுயிர் காக்கதிரம்வேண்டும்
திரவியங்களுடையவர்க்கு வணக்கம்வேண்டும்
தருமகுணமுடையவர்க்குச் சத்தியம்வேண்டும்
தாசிகட்குப்பணம்பறிக்க பசப்புவேண்டும்
சிறுகுழந்தைவிளையாட மண்ணுவேண்டும்
தேசங்கள்திரிபவர்க்குப் பதனம்வேண்டும்

அரிவையெர்தன்பகைமுடிக்க வீமன்வேண்டும்
ஆவிமிகப்பதறுதைையோ நானென்னசெய்வேன்.

வசனம்

அடாபாதகனே! உலகின்கண் வாசஞ்செய்யுந் திருடர்கள் தங்களது உயிரைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்கு தயிரியமிருக்க வேண்டும். அப்படியல்லாமல், அதைரியப்பட்டுக் களவு செய்யப் பிரவேசிப்பார்களாயின் உயிரிழந்துவிடுவார்கள். ஐஸ்வரிய முடைய வர்களுக்குப் பொறுமையும் வணக்கமு மிருக்கவேண்டும். தரும சிந்தை யுடையவர்களுக்கு சத்தியம்வேண்டும். விலைமாதர்களுக்குப் பசப்புவார்த்தை யிருக்கவேண்டும். சிறிய குழந்தைகள் விளையாடுதற்கு மண்ணிருக்கவேண்டும், தேச சஞ்சாரஞ் செய்பவர்களுக்கு ஜாக்கிரதை யிருக்கவேண்டும் அரிவையாகிய எனக்கு நேரிடுந் துன்பங்களை நீக்குவதற்கு அதிவீர பராக்கிரமசாலியாகிய பீமசேன மகாராஜ னிருக்கவேண்டும். அப்படியில்லாமையால் என் ஆவி பதறுகின்றதே என் செய்வேன் சண்டாளா.

இதுவுமது தரு. இராகம்-துக்கடா, ஆதி

பல்லவி

ஆவிபதறுதையோ எந்தன்
ஆவிபதறுதையோ
ஆவிபதறாதம் போகுதுபோகுது
தேவியைத்தேடியே தீரர்வரக்காணேன் ஆவி

பொது வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் துரோபதையம்மனவள் பூனைவாயிலகப்பட்ட கிள்ளையைப்போல செயித்ரசன் தேரிலகப்பட்டுச் சிந்தைகலங்கிப் பரதவித்துக்கொண்டே போகையில் கானகத்திற் சென்று தீர்த்தமாடிச் சிவபூசை முடித்து வரச்சென்ற பாண்டவர்கள் பாஞ்சாலியிருக்கும் பன்னகசாலையை நாடி வருகிற விதங்காண்க.

பாண்டவர்கள் வருகிற தரு

பல்லவி

ஆசைமிகுத்துச்சிவ பூசைமுடிந்தே
ஐவரும்வந்தாரே பன்னகசாலை ஐவ

அநுபல்லவி

மாசில்லாமதியைப்போல் வதனமிகத்துலங்க
மன்னுமேருவையொத்த திண்புயங்களிலங்க ஆ

சரணங்கள்

உலகில்நிகரில்லாத சிலையைக்கரத்திலேந்தி
வொலிகடற்சூழுலகில் நிலைதவராதமன்னர் ஆ

தண்டர்கண்டுகுறக் கண்டாமணியொலிக்க
வண்டணிபூங்குழலாள் மருவுமிடத்தைநாடி. ஆ

தெய்வமணங்கமழுந் தேமலர்களைக்கொண்டு
தேவிவசித்திருக்குந் திவ்யசாலையைக்கண்டு ஆ

தருமபூபதி சொல் விருத்தம்

அருமையென் தம்பிமாரே யாசிரமந் தனிலிருந்த
துருபதேயன் அளித்த துரோபதைதன்னைக்காணும்
கரடிகள்சிங்கம்யாளி கண்டபேரண்டம்யானை
திரமுளமிருகங்களியாது செய்ததோவறிகிலேனே.

வசனம்

ஆ ஆ கேளும் தம்பிமார்களே! நாம் வனத்திற்குப் போய்ச் சிவ பூசை முடித்து வருமளவும் பன்னகசாலையில் பத்திரமாயிருக்கும்படியாய் திட்டஞ் செய்துவிட்டுப்போன நமது தேவியைக் காண்கிலேனே என் செய்வோம் இவ்வனத்தில் வாழும் கெண்டபேரண்டம், சிங்கம், யாளி முதலிய மிருகக்கூட்டங்கள் பட்சித்துவிட்டதோ யாது மறிகிலேனே என்செய்வோம் தம்பிமார்களே.

## இதுவுமது புலம்பல் தரு

இராகம்-முகாரி, கண்ணிகள்

ஐயோநானென்னசெய்வேன் மைவிழியாளைக்காணேன்
அரனேயெப்படியுய்வேன்-தெய்வமே
வையகந்தன்னைவிட்டே வனத்திற்சஞ்சரித்திட
வந்ததோவிந்தவிதி-தெய்வமே
கன்னல்மொழியுடைய மின்னேரிடையிஞளைக்
கண்ணிற்காண்பதெப்போதே-தெய்வமே
சொர்ணக்கிளிபோலுற்ற வுன்னைப்பிரிந்துநாங்கள்
தணிந்துலகையாள்வோமே-தெய்வமே
காட்டானைசிங்கம்புலி கரடிமற்றுள்ளவைகள்
கவளங்கொண்டேசென்றதோ-தெய்வமே
நாட்டிலுந்தனைப்போலே நங்கையருமுளரோ
நானென்னசெய்குவேனையோ-தெய்வமே
எந்தவரக்கனுனை யெடுத்துக்கொண்டேகினனோ
யினியுயிர்வைப்பதுண்டோ-தெய்வமே

0-,892NKP3, N63

செந்தணற்கருவிகள் தீண்டிமறைந்தனளோ
சேதியறிகிலோமே-தெய்வமே

இதுவுமது விருத்தம்

சதுர்வேதம்போ லுதித்த சற்குணத்தம்பிமாரே
விதிப்பயனிதுவோவைவயே மெல்லியாள்தனையிழந்து
இதுநேரமிருக்கொணுது ஏகிபேதிசைகடோறும்
துதிபெறுமில்லாள்செய்தி சுருக்கதாயறிகுவீரே.

வசனம்

ஆ ஆ நான்கு வேதம்போலு மவதரித்த எனது தம்பிமாரே! கேளுங்கள். நாம் நமது தேவியைக் காணுமல் இதுபரியந்தமும் ஆலசியமா யிருப்பது சரியல்ல; நீங்கள் நால்வரும் நான்கு திக்குவரினும் ஆரண்யங்களிற் சென்று தேடிப்பார்த்து பதில் வந்து சொல்லுங்கள் அப்படி ஒருவேளை தேவியகப்படவில்லையென்று வந்தால் இந்த வாளினுல் என்னுயிரை மடித்துக் கொள்ளுவேன் தம்பிமார்களே.

பொது விருத்தம்

தருமபூபதியின்சொல்லைத் தலைமிசைக்கொண்டேயன்னேர்
இருவினைப்பகுதியாலே யெவ்வணமாமோவென்று
பெருமைசேர்தம்பிமார்கள் பேசுநாற்றிசையுஞ்செல்ல
திருவுபரிளையோனுங் கீழ்திசையினிலியம்புவானே.

வசனம்

அகோதெப்படியென்றுல் இந்தப்பிரகாரம் தருமபூபதி உரைத்த சொல்லைச் சிரமேற்கொண்ட தம்பிமார் நால்வரும் துன்பமடைந்து நான்கு திக்கிலும் நான்கு பேராகச் சென்றவருள் யாவருக்கு மிளையவனுகிய சகாதேவராஜன் கீழ்திசையை நாடித் தேடி மிக்க துன்புற்றவனுய் கூறுகின்ற விதங்காண்க.

சகாதேவராஜன் புலம்பல் தரு

கண்ணிகள்

ஐயோயிவ்விதிக்குநாங்களைவராகவந்துதித்தோம்
நாதனே-கைலை-நாதனே
மைவிழிமாதுநல்லாளை வனமதிலெங்கென்றுகாண்பேன்
நாதனே-கைலை-நாதனே
சீதையைராவணன்செய்த செய்திபோல்முடிந்ததையோ
நாதனே-கைலை-நாதனே

பாதகத்துரியன்செய்த பாபமோவறிகிலேனே
நாதனே-கைலை-நாதனே
கானகத்தில்வாழும்வெய்ய கரடிபுலிகள்தின்றதோ
நாதனே-கைலை-நாதனே
வானுலவுந்தேவர்களால் வந்ததேயிப்பெருஞ்சூது
நாதனே-கைலை-நாதனே
அவுணர்களேதேனுஞ் சூதுவரிவையாரைச்செய்ததுண்டோ
நாதனே-கைலை-நாதனே
இந்தவபகீர்த்தி யெங்கட்கெப்படியமைக்கலாகும்
நாதனே-கைலை-நாதனே
செம்பொன் மணிமேடைசெய்து செழிப்புடன்களித்திருந்தோம்
நாதனே-கைலை-நாதனே
ஐம்புலன்கலங்கியந்தோ யறிவழிந்தேவாடுகின்றோம்
நாதனே-கைலை-நாதனே
உச்சிததேவியார்தன்னை உளவுகள்செய்தவரியாரோ
நாதனே-கைலை-நாதனே
இச்சைவைத்தேயெங்கள்மீது இந்தவேளைரட்சிப்பாயே
நாதனே-கைலை-நாதனே.

### இதுவுமது விருத்தம்

பச்சைமால்வண்ணாவுந்தன் பதமலரருளினாலே
அச்சமதகன்றுவிந்த வருவனந்தனிலிருந்தோம்
உச்சிததேவிதன்னை உளவுசெய்தவர்களாரோ
இச்சைவைத்தெங்கள்மீது இவ்வேளைரட்சிப்பாயே.

### வசனம்

ஹரி ஹரி ஸ்ரீமந் நாராயணமூர்த்தி! பரந்தாமா! அச்சுதா! கமலக்கண்ணா! சரோருகம்போன்ற உனது பொன்னடிகளைத் தஞ்சமென்று இதுவரையில் இவ்வனத்தில் அச்சமற்றிருந்தோம். இன்றைய தினம் தேவியைக் களவுசெய்துக் கொண்டு சென்றவர் யாரோ தெரிகிலோம்; ஏழைபங்காளனாகிய நீர் சித்தம்வைத்து இவ்வேளை வந்து எங்கள் துயரத்தைப் போக்கி ரட்சித்தருளவேண்டும் சுவாமி.

### பொது வசனம்

அஹோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் கீழ்த் திசையிற் சென்ற சகாதேவராஜன் வனமெங்குந் தேடித் தேவியைக் காணாமல் பாண்டவ சகாயனாகிய நெடுமாலை நினைந்து துன்பப்பட்டுக் கொண்

டிருக்கையில், உத்திரதிசையை நாடிச்சென்ற நகுலராஜன் எங்குந் தேடிக் காணுதவனுய்க் கூறுகின்ற விதங்காண்க.

## நகுலராஜன் புலம்பல் தரு

### கண்ணிகள்

பன்னகசாலையில் விட்டுப்பிரிந்திட
பாவியானுமே-இந்தப்

பாரவனமெங்குந் தேடியுங்காணுமல்
பதறுகின்றேன் தெய்வமே

உன்னிதஞ்சேர்பூங் கிளியனையாளையிங்
கொருவர்தொடப்போமே-நான்

ஓடித்தேடியந்த வொண்டொடியின்பா
லுழலுகின்றேன் தெய்வமே

முத்துநகைமொழி சித்ரவல்லியாளை
மோசஞ்செய்தாரெவரோ-வாழு

முனிசிரேஷ்டரே மனமிரங்கியே
மொழிகுவீரெந்தனுக்கே

சத்தித்துரோபதையென்றே உலகமுழுதலுஞ்
சாற்றுதல்வீண்போமோ-ஓ

தாவரநலங்களே நீவீரேதேனுந்
தகைந்ததுண்டோ சொல்லும்

மன்னுமயில்காள் குயிலினங்காள்மற்றும்
வாழ்கின்றபுள்ளினங்காள்-தேவி

வந்ததுண்டோயிங்கே யெந்தன்குறைதீர
வழுத்திடுவீர் நீங்கள்

தேன்மொழியாளையென் கண்ணிற்காணுமல்
திகைத்தயர்கின்றேனே-எங்கள்

தேவியவள்சென்ற மாயமெவ்வாருே
சித்தம்வைத்துச் சொல்லிடுவீர்

திரியோதனன்செய்த சூதோயிதுவென்றன்
சிந்தைவாடுகின்றேன்-யாதுந்

தெரியாமலெவ்வகை தருமர்பாற்சென்றிதை
செப்புவது சிறியேன்

தேடிக்கிடைக்கவில்லை யெனசசொல்லிலோ
நிந்திப்பாரேயண்ணன்-ஒங்கும்
நெடியாமலேயிந்தப் படியினில்வந்துநீர்
நிந்தைதீர்த் தாட்கொள்வீர்.

இதுவுமது விருத்தம்

கதிநீரென்றேதுதித்த கஜேந்திரன்வேதைதிர
முதலையைச்சங்கரித்த மூலகாரணனேபோற்றி
மதிவதனத்தாளுக்கு மாளாமற்றுகிலளித்த
விதையம்வேறுபட்ட தெவ்விதமறிகிலேனே.

வசனம்

ஹரி ஹரி ஸ்ரீ வைகுண்டவாசா! ஆதிமத்யாந்தரகிதா! ஆபத்பாந்து! அனுதரட்சகா! சர்வலோகசரண்யா! ஓ ஜகதீசா! முன்னம் ஆதிமூலமேயென்று முறையிட்ட கஜேந்திரனுக்கிரங்கி முதலையைச் சங்கரித்து கஜேந்திரனைக் காப்பாற்றியதுபோல் எங்கள் காதலியாகிய பாஞ்சாலியினது முறைக்கிரங்கி அளவுபடாத துகிலளித்த அனந்த சயனனாகிய உனது இதயம் வேறுபட்டு அடியார்கள் படுந் துன்பத்தைக் கண்டும் பாராமுகமாயிருப்பது எவ்வாறோ தெரிகிலேன் சுவாமி.

பொது வசனம்

அகோ தெப்படியென்றால் இந்தப்பிரகாரம்வடமுகமாய்ச்சென்று தேடியநகுலராஜன் வனமெங்குந்தேடிக்காணாமல் கண்ணபிரானை நினைந்து துன்பப்பட்டுக்கொண்டிருக்கையில், மேற்றிசையிற்சென்றுதேடி வரும் அர்ச்சுனராஜன் தேவியைக் காணாது சிந்திக்கிறவிதங்காண்க.

அர்ச்சுனராஜன் சொல் தரு

இராகம்-காம்போதி

பல்லவி

கிருபைசெய்தருளுமையா கேசவராமா
கிருபைசெய்தருளுமையா

அநுபல்லவி

கிருபைசெய்யுங்குரு குலத்தவர்கள்கிளைக்க
தருமரகங்களிக்க உருகுந்துரோபதையையென்
இருவிழியினுந் தோன்ற கிரு

சரணங்கள்

தேவியானைத்தேடிக் காமியவனமெல்லாந்
தேவியானைத் தேடியே

ஆவிபதறியே          வலைந்துமிகநொந்தேன்
காவிலொளிரும்பூங்          கிள்ளையனையாளையென்
கண்ணின்முன்னேகாட்டி          நன்மைத்தந்தருளுவாய் கிரு

உன்னைவிடவேறே          கதியுநானறிகிலேன்
உரகசயன          கரிவரதா
மின்னற்கொடியிடை          யன்னநடைமெல்லி
வன்னிமகள்          சென்ற
தென்னவித          மையா கிரு

முருக்கம்பூவிதழாளு          மெங்கையோவென்செய்வேன்
மூவுலகுமளந்தமாயா          வவளைவிட்டுப்
பொறுக்கேமோர்          கணமேனும்புண்ணியனேயுலகில்
உருக்கமானவர்கட்கு          உனைவிடக்கதியேது
ஓடிவருஞ்சாமி          வேடிக்கைப்பாராதே கிரு

யாளிகரடிசென்னு          யானைபுலிபேரண்டம்
கோளரியினம்வாழுங்          குகையனைத்துமேதேடி
தளாமனதுடனே          தவிக்குறேனீருமிந்த
வேளைவந்          துதவிசெய்யா
விடிலோதரி          யோமையா கிரு

வினைதீர்த்தருளுமையா          காருண்யநாதனே
வேண்டுமடியாருளத்          தொளிரும்ப்ரக்யாதனே
தனையர்களுக்குதவி          தந்தையினும்வேறுண்டோ
சத்தியலோக          நாயகனே
பத்தர்கட்கோர்          தாயகனே கிரு

## பொது வசனம்

அகோதெப்படியென்றால், இந்தப் பிரகாரம் மேற்றிசையிற் சென்று தேடிய அர்ச்சுனராஜன் தேவியைக்காணாமல் திகைத்து பரந்தாமனை நினைந்து பரதவித்துக்கொண்டிருக்கையில் தெட்சண பாசத்திற் றேடச்சென்ற பீமராஜன் வனமெங்குந் தேடிக் காணாம லிரங்குகின்ற விதங்காண்க.

## பீமராஜன் புலம்பல் தரு

### கண்ணிகள்

எங்கெங்குந்தேடினேன்
நங்கையைக்காணேனே-தெய்வமே

பொங்குங்கடலுலகில்எங்களுக்கிந்தவிதி
பொருந்தச்செய்தவராரோ-தெய்வமே

திங்கட்குலத்தவர்க்குத்
தீங்குநேரிடப்போமோ-தெய்வமே

பங்காளியான துரியன்படுமோசமென்னமோ
பார்மீதெப்படியுய்வோம்-தெய்வமே

இங்கிதஞ்சேர்மொழியாள்
எங்கேதுன்புறுவாளோ-தெய்வமே

நங்கைச்சொல்லாகுமேஞாலமுள்ளளவும்
நாங்களென்னசெய்வோம்-தெய்வமே

அஞ்சாமற்கன்னியிட
அணுகிச்செய்தவராரோ-தெய்வமே

வஞ்சகரவர்தம்மைக்கண்டால்யான்விடுவேனோ
மண்ணுக்கிரையாய்ச்செய்வேன்-தெய்வமே

கானகத்தில்வாழும்
கரடிபுலிசிங்கங்கள்-தெய்வமே

மானனையகண்ணாளைவஞ்சித்தவர்களாரோ
வழுத்தவடாதோநீங்கள்-தெய்வமே

தருமர்தனக்கெவ்வாறு
தணிவுசொல்வேனையோ-தெய்வமே

அருமைப்பெண்ணரசியையபலையவிட்டேவனத்தில்
ஆதரிப்பதேது-தெய்வமே

ஐவர்சகாயனென்றே
அம்புவியினோர்சொல்லுந்-தெய்வமே

பொய்யாச்சுதோயிந்தபூதலத்தினில்நாதா
புதுமையாச்சுதேசாமி-தெய்வமே

மெல்லிநல்லாளையெந்தன்
விழிமுன்னங்காட்டாமல்-தெய்வமே

பையவிருந்தாலிந்தப்பாரோர்நகைசெய்பாரோ
பரந்தாமனேயருள்வாய்-தெய்வமே

பொது விருத்தம்

வாடியேபீமராஜன் வனத்துளகுகைகளெல்லாம்
நாடியேதேடித்தேடி நங்கையைக்காணுவண்ணம்
நீடியதுயரத்தாலே நிலந்தனைநோக்கத்தேரொன்
றோடியஜாடைக்கண்டே யுளங்களித்தோதுவானே,

வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப் பிரகாரம் வாயு குமாரனாகிய பீமராஜன் மிகவுஞ் சிந்தாக்கிராந்தனாய் அவ்வனத்தின் கண்ணுள்ள அரிமந்திரங்களையும் அடர்ந்த புதருகளையும் காவுகளையும் ஆராய்ந்து பாஞ்சாலியைக் காணாமற் றிகைத்துப் பாரை நோக்கிப் பார்க்கையில் அத் தரைமேல் ஓர் தேருருளைவந்து திரும்பியதுபோற் றோன்றிய ஜாடையைக்கண்டு மனதில் மகிழ்வுகொண்டு கூறுகின்ற விதங் காண்க.

## பீமராஜன் சொல் தரு

இராகம்-எதுகுலகாம்போதி

கண்ணிகள்

ரதஞ்செல்லும்வேகமது-நான்செல்லாவிடுவனேல்
நானென்னவாயுபுத்திரனாவேனோ

மிதஞ்சேர்தேன்மொழிபாலை மீட்டாமற்போவேனோ
யிக்கணத்தினிற்சென்றே பிடிப்பேனே

உதயகிரியில்நின்றே-வஸ்தகிரியதனை
ஓர் தாண்டிற்செல்வேனென் றுற்றானே

உக்ரவீரங்கொண்டே யெண்டிசையுங்நடுங்க
ஒடிப்பாய்ந்தான் மதகரிவீமன்

பருத்தகெதையுங்கையிற் சிலைவாளுந்தோமரமும்
பலவாயுதமுங்கொண்டு நடந்தானே

விரித்தபுகழுடைய வானுலகோர்நடுநடுங்க
மின்போல்வழியை நாடித்தொடர்ந்தானே

சூராதிசூரர்களை வாரிவாரியடிக்கும்
சூரன்கெக்கலி கொட்டிப்பாய்ந்தானே

மேருவனையதிண்டோளுற்ற வாயுகுமாரன்
வியன்கொள் தடத்தைக் கண்டேசாய்ந்தானே

தண்டங்கரத்திலேந்திக்-கண்டாமணியொலிக்கத்
தாணியெலாமதிரக் காட்டினான்

அண்டருங்கண்கலங்க ஆரவாரித்தெழுந்தே
அஸ்தத்திலுள்ள வில்லைப்பூட்டினான்

சிங்கம்போல்கர்ச்சித்தே-சங்குநாதமுழக்கித்
தேர்செல்லும் வழியதைத்தாவினான்

துங்கமுறுந்துரோபதை செங்கண்மாலைநினைந்தே
துக்கித்தெழும் ஓசையை மேவினான்

### பொது வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப் பிரகாரம் வாயுகுமாரனாகிய பீமசேனமகாராஜன் அவ்வனத்தில் தனக்குத் தோன்றிய தேரின் வுருளையினது ஜாடையைப்பற்றிக்கொண்டு அண்டர் முதலிய யாவரும் வெருண்டோடும்படியாய்க் கெதையை கரகரவென்று சுழற்றிக் கர்ச்சித்து மகாவீராவேசத்தோடும் நெருங்கிவருகையில், அத்தேரின் மீது நின்று பாம்பின்வாய்த் தேரைபோற் பாதவித்திருக்கும் பாஞ்சாலியானவள் ஆபத்பாந்தவாகிய ஸ்ரீ பரந்தாமனையும் பஞ்சவரையும் நினைத்து அபயமிடுகின்ற விதங்காண்க.

## துரோபதை புலம்பும் தரு

### கண்ணிகள்

| | |
|---|---|
| அபயமபயமையாசுவாமி | யனந்தசயனாவுமக்கபயம் |
| உபயபதங்கதியே சுவாமி | வுரகசயனாவுனக்கபயம் |
| மாளாத்துகிலளித்த சுவாமி | மகாதேவதேவேவுமக்கபயம் |
| வாளால்மயங்கினேனே சுவாமி | மங்கைபங்களாவுமக்கபயம் |
| சாஸ்திரக்கொடிபடைத்தேயோங்குஞ் | சகாதேவமூர்த்தியுமக்கபயம் |
| வாயுவருள்குமாராயெந்தன் | மதவீமனேயுமக்கபயம் |
| அருமைநகுலராஜமன்னா | அர்ச்சுனராஜகோவேயுமக்கபயம் |
| தர்மசொரூபமாகுங்கோவே | தர்மநந்தனாவுமக்கபயம் |

### பொது விருத்தம்

அபயமிடுஞ்சத்தமதை காதிற்கேட்ட
வாக்ரமித்துயிருவிழிகள் தணலாய்ச்சிந்த
தபமுனிவரிருதயமுங் கலங்கிவாடித்
தத்தளிக்கவந்தார் கடங்கியஞ்சக்
குபிலெனவேமனமதனிற் கனலெழும்பக்
குறைகடல்கள்சுவரவதி கோபங்கொண்டு
விபரீதமென்னவிளைந் திடுமோவென்று
வீமனவன்கெதையெடுத்து மேவினானே.

### வசனம்

அகோதெப்படி யென்றால் இந்தப்பிரகாரம் பாஞ்சாலியம்மனானவள் பாதகனாகிய செயித்தரசன் தேர்மீதிருந்து ஸ்ரீ அரிவாசுதேவனையும், தனது அன்புக்கினியர்களாகிய ஐவரையும் நினைத்து அபயமிடும் வோசையைக் கேட்ட வீமராஜன் ஆலகால ருத்திர மூர்த்தியைப் போல கோபித்தெழுகையில் அதைக்கண்ட முனிவர்கள் கலங்கவும், தேவர்கள் அஞ்சி விலகவும், வடவைக்கனலைப்பயந்த குரைகடல் சுவரிப்போகவும், கண்களினின்றுங் குபீலெனக் கனல் சிந்தவும்,

என்ன விபரீதமாகுமோ வென்று மண்முழுதுமேங்க மேருவை நிகர்த்த தண்டத்தைக் கரத்திலேந்திக் கூறுகின்றவிதங் காண்க.

## பீமசேனன் வருகிற தரு

### நொண்டிச்சிந்து கண்ணிகள்

வந்தானே பீமனிதோ பாரீர் கையில்
வாளாயுதங்கெதையுஞ்சூலமுமேந்தி
இந்ராதிதேவர்களும்வாட வானத்தி
விலங்குமிருடியர்நடுக்கங்கொண்டோட
சமுதாடுடன் கச்சையிருக்கி ஓங்குர்
தண்டமுவில்லம்புங்கேடயம்பிடித்தே
எமனவனென்றுபலர்வாட ஒது
மிளஞ்சிங்கம்போலவே கர்ச்சனைகள்செய்து
கண்டானேசெல்லும்ரதத்தை வெய்ய
கரியதன்மேற்பாயுமரியதுபோல்
பெண்டாளநினைந்தவுயிர் - தப்பிப்
பிழைத்திடுமோமண்மீது முடிக்குறேன்பார்
நில்லுநில்லுமுடுக்காதே தேரதனை
நெறித்துப்பொடி பொடியாய்ப் பறக்கச்செய்வேன்
நல்லதுன்னைக் கொல்லுவேனிதோ வென்றுசொல்லி
நாடினானேநெருங்கிக் கூடினானே

### பொது விருத்தம்

நடந்தவன்தேரைக்கிட்டி நாயகிதனையிறக்கிக்
கடுஞ்சினமடைந்துவீமன் கெதையினால்தேரைத்தாக்க
முடியதுநெறியத்தேரு முறிபடத்திடுக்கிட்டேங்கி
படிதனிற்றுண்டிவீரம் பாரெனவெதிரிட்டாரே.

### வசனம்

அகோதேப்படியென்றால் இந்தப்பிரகாரம் வாயுவினு மதிவேகமாய் நடந்துவந்த வீரகேசரியைப்போன்ற வீமராஜன் செயித்ரதனது தேரைக்கிட்டி நெருங்கி மடக்கிக்கொண்டு அதன்மீது பரதவித்துக்கொண்டிருந்த பாஞ்சாலியைத் தூக்கித் தரையிலிறக்கிவிட்டு அதிகோபத்தோடும் கெதையைக் கரகரவென்று சுழற்றித் தேரின்மீது தாக்குகையில் ரதமானது பீமன்கெதையினால அச்சுவேறு ஆணிவேறு குத்துக்கால்வேறு கொடுங்கைவேறாய்ச் சாயும்போது சயிந்தவனது சிரத்திலணிந்திருந்த மணிமுடியும் பொடிபொடியாய்ப் பறக்க, அப்போது அவ்வேந்தன் திடுக்கிட்டுக் கலங்கி லகுவாய்ப் பூமியிற் குதித்து ஒருவாறு திடங்கொண்டு வில்லேவளைத்து ஒருவர்க்கொருவர் திறம் பார்ப்போமென்று எதிர்க்கும் விதங்காண்க.

## பீமசேனனுக்கும் செயித்ரசனுக்கும் தர்க்கம்

### வினவிடைக் கண்ணிகள்

சிந்துதேசபதிசயிந்தவனென்று கண்டேனே
சிதறவேசிரமதுசெதையை இதோகையிற்கொண்டேனே
வந்துயெதிர்ப்பதுதீரமோ முறையில்லாத்துண்டனே
வையகம்நடைத்திடவந்ததோ காலமும்முண்டனே
வஞ்சமனமுடைய கொஞ்சுப்பயலேயுன்னை
மிஞ்சுமிக்கெதையாலே பஞ்சாய்ப்பறக்கடிப்பேன்
வாட்டுவேன் வில்லைப்பூட்டுவேன்தணல்
மூட்டுவேன் வீரங்காட்டுவேன்
மிகும்பலசேனைகள் கலங்கியோடவும்
மிகுபதியொடுதேவர் மகிழ்ந்துபாடவும் சிந்து

### செயித்ரசன் சொல் கண்ணி

வீமசேனனுனென்று மதிபலசூரனே
வில்லைவளைத்துவந்து யெதிர்த்தான்தீரனே
பூமியிலென்னைப்போலு முளரோவகோரனே
போடாவுந்தனை மடித்திடுவேனுங்காரனே
பொங்கிச்சினமீறுது யிங்கேவந்திடுமுன்னே
செங்கைச்சிலையாலுன்னைப் பங்கப்படமடிப்பேன்
சீறிவந்தாய் மனங்தேறிவந்தாய்சின
மீறிவந்தாய் வீரங்கூறிவந்தாயிந்த
செகத்திலென்னைப்போல வீரருமுண்டோ
பகைத்துவந்தவர்கள் தேறுவதுண்டோ வீம

### வீமசேனன் சொல் கண்ணி

தங்கைக்கிச்சைப்பட்டு வந்ததுமேதடா
தரணியோர்நகைத்திட பாவிநீவந்ததென்சூதடா
நங்கையைத்தொடவந்த துனக்கென்ன நீதடா
நாரணன் தங்கையு மாருமுனக்கிவள் தாயடா
நத்திவந்திடுமுன்னே சித்தங்கலங்கிடவே
பற்றிவேலினுலே குத்தியிருக்கிடுவேன்
பட்டவனேமுறை கெட்டவனேவெட்கம்
விட்டவனேயுனைத் தட்டுறேன்பாரிதே
பரமனுடன்பலபேரு மகிழ்ந்துகூறத்
திரமுளரகுபதி சித்தங்களித்தேற

### செயித்தரசன் சொல் கண்ணி

கற்றவித்தைகளைப்பேசிடு மூந்தனைவாட்டுவேன்
கரிபரிசேனைகள்ரதமதை யுன்மீதமூட்டிடுவேன்
மெத்தசவுரியபுஜபலமென்று வில்லைப்பூட்டினேன்
மேகம்பொழிவதுபோலே சரங்களைக்கூட்டினேன்
மிண்டாயெனதுவீரங் கண்டாயித்தனைகொலங்
கொண்டாயுந்தனை யிருதுண்டாய்ப்போடுவேனிதோ
மேவாதேவந்து சாகாதேகையி
லாகாதேதூரப் போகாதேயில்லு
வெடித்துவண்டங்கள் கிடுகிடென்ன
முடுக்கிச்சரங்களை விடுகிறேனடா கற்

### பீமசேனன் சொல் விருத்தம்

சிந்துமன்னவனுனென்று சென்னியில்மகுடம்பூண்டு
வந்தாயுன்றங்கையின்மேல் மையலாய்ச்சிந்திக்காமல்
உந்தனைப்போலதுரோக ரொருவரையுலகிற்காணேன்
சிந்துசிந்தாக்கியுன்னைச் சேர்ப்பிப்பேனெமன்பதிக்கே.

### வசனம்

கேளடா அடா பாதகனே! நீ சிந்து தேசாதிபதியென்று சிரத்திற் கிரீடம் பூண்டு செங்கோல் முதலிய வில் வேல் வாள் என்றும் ஆயுதப்படையணிந்து நால்வகைச் சேனைகளோடும் இரதமேறி வீரத்தோடும் வெட்கமில்லாமல் தங்கையைத் திருடவந்தனையே சண்டாளா உன்னைப்போன்ற பாதகர்களை இவ்வுலகின்கண் ஒருவரையுங் காணேன் ஆஹா சிந்துக்கிறைவனுகிய உன்னை எனது கெதாயுதத்தால் சிந்து சிந்தாகச் சிதற வடித்து தென்னுட்டரசனுகிய எமனிடத்திற் சேர்ப்பிப்பேனடா சண்டாளா.

### செயித்தரசன் சொல் தரு

#### கண்ணிகள்

என்னிடவீரம்என்னையெதிர்த்த உன்னிடதீரம்
எடுத்தவில்லைவளைத்துத் தொடுத்துவிட்டேன்பாணம்
ஏரிகளெங்கும் பாரக்கண்கள்சிவந்திட
வருகுதுவக்கினிபாணமழித்திட
எடுத்தேன்பாராய் வெஞ்சிலைகளைத்
தொடுத்தேன்பாராய்
இரதகெஜமுனது ரதப்படைகளை
யேவவந்தனைத் தாவவருகுது என்

பீமசேனன் சொல் கண்ணி

அஞ்சாதபாவி தங்கையென்னும் வஞ்சியைத்தாவி
அழிவுகாலமுனக்கு அடர்ந்ததோபழிகாரா
ஆசைமிகுத்துநீ வந்தடாபாவியே
நேசமிகுத்திடவே யெங்கள்தேவியை
அடிப்பேன்பாராய் வில்லைத்துண்டா
பொடிப்பேன்பாராய்
அண்டரண்டமுநடுநடுங்கிட
கண்டவீரர்களெவருமொடுங்கிட

செயித்தரசன் சொல் கண்ணி

எதுக்காதேவாடா யெதிரில்நின்றுகுதிக்காதேபோடா
யெதிர்பாணம்வருகுதுமதவீமாயிதோ
யெங்குமறிந்திடவங்கமெரிந்திட
இலகுமுடலஞ்சல்லடைபோற்றுளைபட
எட்டினேன்பாரா யுந்தனைவெல்லக்
கூட்டினேன்பாராய்
இடிகள்போலொளிர்கொடியபாணங்க
ளெடுத்துத்தொடுத்திதோமடிக்குறேன்பாராய் எதுக்

பீமசேனன் சொல் கண்ணி

விதிப்பயனேடா கொஞ்சமேனுமதிப்பில்லாமூடா
விடுத்தகணையாலுன்னை அடித்தேனேநிர்மூடா
வெட்டியுந்தனை நானெறிந்திட
வட்டியேதடா கண்டறிந்திடு
வீரருமுண்டோ வென்னையெதிர்க்கச்
சூரருமுண்டோ
விண்ணுமண்ணும்நிறைந்திடவேகணை
யொண்ணுபத்துநூறுயிரமாயிதோ விதி

செயித்தரசன் சொல் விருத்தம்

மிகுபலத்துடனேவந்த வீமனேசொல்லக்கேளாய்
ஜெகதலமன்னர்காணத் தேவியைத்துகிலுரிந்தோம்
தகைவிலாவுந்தன் தீரசவுரியமறிந்தேனிப்போ
புகழ்பெறுகந்தமூலம் பொசித்தால்பலத்திட்டாயோ.

வசனம்

கேளடா பீமசேனா! முன்னாலே இராஜராஜாக்கள் நெருங்கிய மகாராஜன் சபையில் துரோபதையைத் துகிலுரிந்தபோதும் இப்போதும் யான் உனது பராக்கிரமத்தைக் கண்டேன்; இராச்சி

யத்தைவிட்டுக் கானகத்திற்சேர்ந்து காய் கனி கிழங்குகளைப் புசித்துச் சுனைநீரருந்தி வேடுவரைப்போல் திரியுமுனக்கு அதிக பலமுண்டாச்சுதோ நல்லது இதோ உன்னை ஒரு பாணத்தினற் கண்டிக்கிறேன் பாரடா பீமா.

பீமசேனன் சொல் கந்தார்த்தம்

பங்கமில்லாமல்வந்த பழிகாராவுனையடித்தால்
தங்கையாள்விதவையாகித் தவிப்பளென்றஞ்சலானேன்
தங்கையையினிவெறுத்து தனுவினைக்கையிலேந்தி
துங்கமாமொளிசேர்பாணம்
தூக்கினேன்பாராய் படைகள்சிந்தத்தாக்கினேன்நோராய்
சூரமுள்ளவீரர்படை பாரதனிற்றுவிதா
தேருகளுங்கூறுபட்டே யாறதாயுதிரமோடத் தூக்கி

செயித்ரசன் சொல் கந்தார்த்தம்

என்னடாவரிபோன்றன்னை எதிர்ப்பவருலகிலுண்டோ
சொன்னதைமுடித்துவோங்குஞ் சூரனென்றறிந்திடாமல்
மின்மிகர்கணைகடுகி வீரங்கள்பேசவந்தாய்
என்னிடசிலைவளைத்து
எடுத்தேன்பாணம் பதிற்குப்பதில் தொடுத்தேன்பாணம்
ஏதடாவுனக்குமெத்த சூதுகளும்வாதுகளும்
பாதமுதலுன்னுடலங் கோதுபடக்கிதுசெய்வேன் எடு

பீமசேனன் சொல் கந்தார்த்தம்

தான்கெடிலொருவருக்குந் தவறுசெய்பலாகாதென்றே
தேன்மொழியாளுரைத்துந் தெரிந்திடாநீச்சநீயே
வீண்பழிசுமக்கவந்தாய் வெட்கங்கெட்டவனேபோடா
ஏனிந்தவிதிக்குவந்தாய்
எடுப்பேன்பாராய் அஸ்திரமுன்மேல்-விடுப்பேன்பாராய்
எட்டியிதோமட்டியுன்னை நெட்டறவேவெட்டிடவும்
திட்டமுடன்கிட்டியிதோ மொட்டைமுடிதட்டிடவும் எடு

செயித்ரசன் சொல் கந்தார்த்தம்

வீரியம்பேசுகின்ற வேந்தர்களுன்னைப்போலே
பாரினிற்கண்டதில்லை பலமுளநீதானெய்த
கூரியசிலைகளெல்லாங் கூறுசெய்திடவெனக்கு
தீரங்களுண்டுவெல்ல
சிலையெடுத்தேனே உன்னற்கரிய பலங்கொடுத்தேனே
தேடியுனைநாடிவருங் கோடியாங்கணைகளிதோ
வோடிமிகவாடிடவுந் தேடுதுபாரிந்தக்கணை சிலை

### பொது விருத்தம்

வெற்றியான்கொள்வேனென்று வீமனு மனதிலுன்னிச்
சித்தமுங்கொதித்தகண்கள் சிவந்துதீப்பறக்கநோக்கிப்
பற்றியேரதத்திஞேடும் படைகளையதமதாக்கி
மைத்துனுவென்றுகூவி மாட்டியேவாட்டுவானே.

### வசனம்

அகோ தெப்படியென்றல் இந்தப் பிரகாரம் வாயுகுமாரனுகிய பீமசேனன் ரவுத்ராகாரனுய்க் கோபித்து வெற்றிகொள்வேன் பாரடா வென்று சீறிக் கண்களினின்றுந் தீப்பொறிகள் குபீல்குபீலென்று பறக்கும்படியாய் நோக்கி, சிந்துதேசாதிபதியாகிய செயித்ரசனது இரத கெஜ துரக பதாதிகளென்னும் நால்வகைச் சேனைகளும் மடியும்படியாகச் சாடி, ஆ மைத்துனு! மைத்துனுவென்று கூவி அட்டகாசஞ் செய்யும் விதங்காண்க.

### இதுவுமது தரு

### கண்ணிகள்

அண்டாதகோபத்தாற் றுண்டாக்கவெண்ணியடித்தானே பீமன்
பெண்டாளநினைவுண்டோ சண்டாளாவென்றுபிடித்தானே பீமன்

மைத்துனனென்னமதிக்கே னுனையென்றுகுத்தினுனே பீமன்
பத்தினியைத்தொடச்சித்தமுண்டோவென்று மொத்தினுனே பீமன்

கட்டிப்பிடித்தவனைமட்டிப்பயலேயென்று காய்ந்தானே பீமன்
கன்னபாசைமீசையின்னமுனக்கேனென்று கடிந்தானே பீமன்

காட்டுக்கொடியைக்கொண்டுமேவாடியிடையிலே கட்டினுனே பீமன்
நீட்டியேதன்காலில்மாட்டித்தளையாகப் பூட்டினுனே பீமன்.

### பீமசேனன் சொல் விருத்தம்

சிலைநிகர்மனையாயுற்ற தேவியேயிவனைப்பாராய்
உலகில்துஷ்டருக்குசிட்டை யொக்குமென்றுலகநீதி
தலைவனுர்பக்கலேகச் சந்தோஷமாகவன்னோர்
மலிபெறச்சொல்லவேண்டும் வஞ்சியேவருகுவாயே.

### வசனம்

கேளாய் பொற்சிலையைப்போ லொளிருந் தேவியாகிய ரகுபதா! இந்த சண்டாளனிருக்குங் கோலத்தைப் பார்த்தாயா உலகத்தில் துஷ்டரைச் சிட்டைசெய்ய வேண்டுமென்னும் நீதிவாக்கியம்போல் இவனைச் செயிக்கவேண்டியது மெத்தவுமிருக்கின்றது. ஆதலால் நமது தலைவராகிய தருமபூபதியுந் தம்பிமாருங் கண்டு மகிழவேண்டியிருப்பதால் வருவாய் ரகுபதா.

பொது வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப் பிரகாரம் பீமசேனனை எதிர்த்த சிந்துதேசாதிபதியாகிய செயித்தாசனை அவனைச் சேனைகளோடும் நாசப்படுத்தக் கைப்பிடியாகப் பிடித்துக் காட்டுக்கொடிகளால் மடலோடு மடல்நெருங்க யிருக்கிப்பிணைத்து அக்கொடியைத் தனது காலிற் கட்டிக்கொண்டு அக்கோலத்தைத் தனது தேவிக்குக் காட்டி மகிழ்வடையச்செய்து தருமாாதனிடங்கொண்டு வரும்போது துரோபதையைப் பார்த்து இவன்வந்த செய்தி யென்னவென்று கேட்கப் பாஞ்சாலி கூறுகின்றவிதங் காண்க.

பாஞ்சாலி பீமசேனனுக்குச் சொல் தரு

இராகம்—அபுருபம்

வினவிடைக் கண்ணிகள்

எந்தன் குறைதீரவந்திடும்புண்ணியா பிராணநாதா
சந்தோஷமாகவேவந்தெனைக்கண்டானே பிராணநாதா

பீமசேனன் வினா

வந்தவிவனென்னநிந்தையுரைத்தனன் பெண்மயிலே
உந்தன் மனமாரவுண்மையாகச்சொல்வாய் பெண்மயிலே

பாஞ்சாலி விடை

தங்கையென்றென்னிடம் பொங்கமாகிவந்தே பிராணநாதா
தனித்திருக்கநீங்கள் தறியேனென்றோதினன் பிராணநாதா

பீமசேனன் வினா

அன்னக்கிளியேமானே கன்னல்ரசமொழியாய் பெண்மயிலே
என்னவிதமாகத்தேரின் மீதேற்றினான் பெண்மயிலே

பாஞ்சாலி விடை

காட்டிலிருக்காதே வீட்டுக்குவாவென்றான் பிராணநாதா
நாட்டில்பஞ்சவரைக் கூட்டிப்போவேனென்றான் பிராணநாதா

பீமசேனன் வினா

நன்மையாகச்சொன்ன வுண்மைவிபரமும் பெண்மயிலே
தன்மையாகவந்தசேதி தன்னைச்சொல்வாய் பெண்மயிலே

பாஞ்சாலி விடை

மந்திரவாளை மறந்தவன்போலேகப் பிராணநாதா
தந்திடத்தேர்படித் தானேறிவாவென்றான் பிராணநாதா

பீமசேனன் வினா

அரவக்கொடியோ னனுப்பினதாகுமோ பெண்மயிலே
உறவாடிவந்திவனுளவு செய்தான்கண்டாய் பெண்மயிலே

### வசனம்

சேனும் பிராணவல்லபா! நீங்கள் பூசைக்குப்போனபிறகு இவன் பாதசாரியாய் நானிருக்கும் பன்னகசாலையை நாடிவந்து என்னைக் கண்டு, ஓ எனது ஆருயிர்த்துணையாகிய தங்காய்! நீ இந்தவனத்தில் தனித்திருக்கத் தருமமோவென்று கூறியதைக்கேட்ட நான் தமய னென்னும் பட்சத்தால் உட்காரும் அண்ணாவென்று கூறினேன். அதன்மீது அம்மணி நீயென்னுடன் பிரயாணப்பட்டுவந்து உனது நாத்தியோடுகூடி நமது அரண்மனையில் சுகித்திருந்தால் பஞ்சவர்கள் நாட்டுக்கு வந்தபின் அவர்களுடன் உனது பதிக்கு ஏகுவாயென்று சொல்ல அதன்பேரில் அண்ணா! எனது நாதாக்கள் பூசைசெய்யப் போயிருப்பதால் அவர்கள் வந்தபிறகு உத்திரவு பெற்றுக்கொண்டு உன் மனோபீஷ்டப்படி அழைத்துக்கொண்டு போவாயென்று நான் கூறியதின்பேரில், ஓ அம்மணி! நான் தனித்துவந்து நெடுநேரமான படியால் இன்னொரு சமயம் வந்து அழைத்துக்கொண்டு போகிறே னென்று கூறினவனுய்த் தனது வுடைவாளை மறந்தவன்போலே வைத்து விட்டுப்போக அச்சூதையறியாத நான் ஐயோ வாளை மறந் தனனே யென்று அதனை யெடுத்துக்கொண்டு காட்டில் நெடுந்தூரந் தன்பத்தோடுஞ்சென்று தேரைக்கண்டு நெருங்கி வாளை நீட்டுங்கால் அவனிருந்து பெற்றுக்கொள்வதற்கு ஏலாதவனைப்போல் அம் மணி! இதற்காகத் தலைதூரம் வருந்தி வந்தனையே தேரின்படியின் மீதேறித் தருவாயென்று கூறுவதுபோல் நானேறிக்கொடுக்கையில் ரதத்தை அதிவேகமாய்த் தூண்டிச்சென்றான். இதைச் சத்தியமாய் நினைப்பீர் பிராணநாயகா.

### பொது வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் பாஞ்சாலி கூறி னவைகளைக்கேட்ட பீமசேனன் அதிக கோபங்கொண்டவனுய் நல்லது நீ விரைவாக நடந்து வருவாயென்றுகூறி அக்காட்டில் முட் செடிகளின்மீதும் புதறுகளின்மீதும் வேகமாய் நடக்கையில் கட்டுப் பட்டிருக்கும் செயித்தரசனது தேகமானது முட்களால் கிழிப் புண்டு சகிக்கமாட்டாதவனுய்க் கூறுகின்றவிதங் காண்க.

## செயித்தரசன் புலம்பும் தரு

இராகம்-காம்போதி, அடதாளம்

கண்ணிகள்

அடிக்கவேண்டாமென்னை யடிபட்டராஜனல்ல<br>
வனியாயஞ்செய்பலாமோ பீமசேனா

நடக்கும்விசையினாலே நலியுதேயென்திரேகம்<br>
நான்செய்தகுற்றமென்ன பீமசேனா

வேட்டையாடவந்தே காட்டிற்கண்டே தங்கையே
வீண்பழிக்காளானேன் பீமசேனா

வாட்டமாய்வரும்போது மறந்துமந்திரவாளை
வைத்துவந்தேனையா பீமசேனா

மந்திரவாள் தனைத் தந்திடத்தேரிலேறி
வந்தாளேபத்தினியும் பீமசேனா

முந்தும்பரிகள்மீறி யெந்தனுக்கடங்காமல்
முடுகிநடந்ததையா பீமசேனா

கள்ளன்களவனல்ல கட்டியடிக்கலாமோ
கருத்தையறியாமலே பீமசேனா

துள்ளித்துள்ளிவிழத் தூக்கியடிவைக்கிறாய்
தோதகமென்னசெய்தேன் பீமசேனா

வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் பீமசேனன் செயித்தாசன் துன்பத்தால் புலம்பிக்கொண்டு வருவதைக் கேட்டுங்கொஞ்சமேனும் இரக்கமில்லாதவனாய் தருமபூபதியிருக்கு மிடத்திற்கொண்டு வந்து விடுத்து தமயனைப்பணிந்து கூறுகின்றவிதங் காண்க

பீமசேனன் சொல் போற்றிக் கவி

மதுரமொழிவதனவொளி பெருகுங்கீர்த்தி
வர்த்திக்குங்குருகுலத்தில் வந்துதித்தே
சதுர்பெருகு முரசுகொடியுடைய யெந்தன்
தமயனே நின்மலர்த்தாள் போற்றிபோற்றி.

பாஞ்சாலி சொல் போற்றிக் கவி

பெருகுமது நீதியுட னெறியுமன்பும்
பேசரிய தருமகுண வேந்தர் வேந்தே
யிதமுடனே மன்னர்பணிந் தேத்துகின்ற
வினைக்கழலுக் கடியாளும் போற்றிபோற்றி.

தருமபூபதி சொல் வாழி விருத்தம்

அந்நாளரக்குமாளிகையி லாவிமிழக்கு மெனைக்காத்து
மிந்நாளுற்ற துயர்தீர்த்த வெந்தன்தம்பி வாழியவே.

இதுவுமது

வன்னியி லவதரித்த வளரிளங்கொடியேவாழி
கன்னியாமுனக்கு நேர்ந்த கவலையை யறிவிப்பாயே.

பொது வசனம்

அகோதெப்படி யென்றால், இந்தப்பிரகாரம் தருமபூபதியான வர் வினவியதைக் கேட்ட பாஞ்சாலி கூறுகின்ற விதங்காண்க.

## பாஞ்சாலி சொல் தரு

நொண்டிச்சிந்து

மாருமுடியுடையோய் எனக்கு
வந்தவிதிகளைச் சொல்லுகிறேன்

சிராகளீங்களுமே விட்டுச்
சிவபூசை செய்திடப்போனபின்பு

சிந்துபதியளித்த விச்
செயித்தரசமன்ன ரிங்குவந்தார்

வந்தார் தமயனென்றே சொல்லி
மகிட்சியுடனே பணிந்துநின்றேன்

வனத்திற் தவித்திடவும் விதி
வந்ததோவென்றே மிகநொந்தார்

இனத்தை யிணங்காற்கு மென்று
எந்தன்பின்னாலே வாருமென்றார்

உங்கள்மொழிக்கழிவாய் வர
யோக்கியமல்ல யானென்றேனே

தங்கையேநான் போரேனென்று சொல்லித்
தந்திரமெண்ணி கடந்தாரே.

இதுவுமது விருத்தம்

தந்திரமெண்ணிவந்தே தயவதாய்வசனஞ்சொல்லி
மந்திரவாளை வைத்து மறந்தவன்போலவேகச்
சந்தோஷமாகக்கொண்டு தரும்போதுபடியேறென்றான்
அந்தளவாகவேற வவன்ரதமுடுக்கினானே.

வசனம்

கேளும் பிராணநாதா! இந்த செயித்தரசனானவன் தந்திர மெண்ணிவந்து என்னைக் கண்டவன் ஏதோ சில இனிய வார்த்தை களைப் பேசிப் போகும்போது மந்திரவாளை வைத்து விட்டுப் போக மறந்து விட்டார் தமயனென்று நானதை எடுத்துக்கொண்டு போய்த் தேரைக்கிட்டி வாளை நீட்டுகையில் எட்டாதவை கண்டு படிமீதேறித் தருவாயென்று சொல்ல அவ்வாறே யான் செய்ய அக்காலையில் தேரைப் பாதகனானவன் முடுக்குவதுகண்டு யான் பரதவித்துச் செல்லும்போது உமது இளவலாகிய பீமசேன மகாராஜன் வந்து

அவனுடன் போர்புரிந்து ஜெயித்து கொடியினுற் கட்டிக்கொண்டு வந்திருக்கின்றுர் நாதனே. ஆஹா! நல்லது அவனே கட்டவிழ்த்துக் கொண்டுவந்து நிறுத்துவாய் தம்பி பீமசேனு இதோ அப்படியே நிறுத்தினேன் அண்ணுவே.

## தருமபூபதி சொல் தரு

பல்லவி

மைத்துனு யிந்தபுத்தி யுனக்கேதடா வந்த
வகையைச் சொல்லடா மைத்துனு மை

அநுபல்லவி

உற்றசேதிகளெல்லாஞ் சித்தத்திலடக்காமல்
பக்தியுடனேயாவும் பகர்ந்திடுவாயிப்போது மை

சரணங்கள்

யார்சொன்னபோதனே யறிவையைத்திருடவும்
வேறல்லநீயெனக்கு விதியோவிதுமதியோ மை

தங்கையைச்சதிசெய்யப் பங்கமுனக்கில்லேயோ
திங்கள்குலத்துக்கிந்தச் சேதிகளடுக்குமோ மை

கெட்டபுத்தியால்வந்தே பட்டபங்கம்போதாதோ
விட்டுவிடுவேனுன்னே விடுத்தவனேச் சொல்லடா மை

இதுவுமது விருத்தம்

அரவக்கொடிவேந்தனுக்கு வுன்மீ
தாசையுண்டுவுறவுண்டு வயலார்நாங்கள்
காமதிற்செங்கோலேந்தும் வேந்தனீயே
கட்டுண்டேயபகீர்த்தி தேடிக்கொண்டாய்
பரிவுடனேயிவ்வனத்தில் வந்ததென்ன
பத்தினியைரதமேற்றிச் சென்றதென்ன
திறமையுடன்வாய்திறந்து எந்தனேடே
செப்புவாய்தப்புரைக ளுரைத்திடாயே.

வசனம்

கேளாய் மைத்துனு! அரவகேதனனுகிய துரியோதன மகாராஜனுக்கு நீ மைத்துனனுனதால் உன்மீது அவனுக்கு மெத்தவும் பிரியமுண்டாயிருக்குமல்லவா யாங்களோ அயலார்கள் மேலும் காத்திற் செங்கோலேந்தி அரசாட்சி செய்யும் வேந்தனுகிய நீ கட்டுண்டு அபகீர்த்திக் காளாகினேயே ஐயோ பரிவோடு இவ்வனத்தில் வாசஞ்செய்பவளேத் தங்கையென்றுவந்த நீ அவளேக் களவாய்த் தேரின்மீதேறச்

செய்துகொண்டு போனதென்ன உனக்கு இப்படி செய்யும்படியாய் போதனை செய்தனுப்பியவன் யாவன் யாதும் ஒளியாமல் உண்மையைத் தெரிவிப்பாய் மைத்துனா.

## செயித்தரசன் சொல் தரு

### நொண்டிச்சிந்து

தேசங்களாண்டமன்னு வந்த
சேதியைச்செப்புவேன் கேளுமண்ணு

ஆசையுடன்பதியை விட்டே
யடவியில்நான் வெகுபடையுடனே

வேட்டைகளாடி வந்தேன் வந்து
மெல்லியைக்கண்டே க்ஷேமமறிந்து

வாட்டங்களானதினால் வைத்த
மந்திரவாளை மறந்தேகித்

தேரைநடத்துமென்றே யந்தத்
தேரினிலேறியே நானடந்தேன்

காரார் குழற்றங்கை வாளைக்
கையிலெடுத்தோடி வந்து

அதைக்கண்டோடி வீமன் வந்து
வயற்வுறக்கட்டி யடித்தானே

ஒன்றுநானறியே னென்றே இந்த
உண்மையைநான் சொல்லிவந்தேனே

## தருமபூபதி சொல் விருத்தம்

என்னிடதம்பிபீமா இதைநன்றுயோசியாமல்
அன்யாயமாகவேநீ யடித்திவனைபிடித்துவந்தாய்
உன்னிதத்தங்கையோடே யுரைத்திடிற்கோபிப்பாளே
உன்னிடமுரட்டுப்புத்தி யொருக்காலும்நீங்காதென்னே.

## இதுவுமது தரு

### பல்லவி

ஒருக்காலும்போவதில்லையே துன்மார்க்கபுத்தி
ஒருக்காலும்போவதில்லையே ஒரு

### அநுபல்லவி

பொருக்காகோபம் வந்தாலும்பூமியின்பாய்ந்தே
யிருக்கப்படுவாருனக் கெள்ளளவேனுமில்லையே ஒரு.

சரணங்கள்

ஓதாதார்க்கில்லை யுணர்வுடனொழுக்கங்களென்பார்
வேதமுணர்ந்துமுனக்கு விசுவாசமில்லையே ஒரு

மைத்துனனிவனென் றிப்படியுஞ்செல்வதுண்டோ
புத்தியிலறிந்தன்றோ பொறுத்துப்பார்க்கவேண்டும் ஒரு

மீறிவருங்கோபத்தை விட்டபேர்களேதெய்வம்
காரியமறியாமல் கடிந்துகொள்வதுபாவம் ஒரு

கைநீளமென்றுதாயைக் கழுத்தறிந்திடுவாரோ
பொய்மெய்மைவெல்லாது பொற்செங்கோற்செல்லாது ஒரு

வையமீதிற்பிறந்து
வருங்கீர்த்தியடையாது ஒரு

வசனம்

கேளாய் தம்பி மைத்துனு! உலகின்கண் ஜனித்த மானிடர்கள் தமது தங்கையாருக்கு இடர் நினைப்பாரோ அதை யோசியாமல் நினைத்தபேருக்கு உடனே இடர்வருமென் றறிவாய்; அப்படியிருக்க, நமது தங்கையாகிய துற்சடை இச்செய்தி யறிந்தால் வயறெரிந்து சாபிப்பாளன்றோ மேலும் கிரமமாகிய குடிப்பெண் சாபத்தால் கோத்திரத்துக்கெல்லாம் குற்றம் நேரிடுமே, ஆதலால், தீவிரமாய் இப்பகையை மாற்றிச் சந்தோஷமாய் அனுப்பிவையடா தம்பி பீமா.

பீமசேனன் சொல் விருத்தம்

தமையனுங்குருவும்வாழ்கத் தன்றுயரகற்றினோரும்
அமையுருவானதந்தை யாகுமென்றுலகஞ்சொல்லும்
நமதிடம்நாடிவந்த நல்லமைத்துனருக்கன்பாய்
இமையினிற்பரிசுதந்தே வெழில்பெறவனுப்புவேனே.

வசனம்

சரணம் சரணம் அண்ணுவே! உலகின்கண்ணோர்க்குத் தமையனும், வித்யாகுருவும் இடர்தீர்த்துக் காத்தவரும் தந்தைக் கொப்பாவரென நீதிநூல் முறையிடுகின்றமையால், அதுபோல் தேவரீரது வார்த்தையைச் சிரமிசை வைத்துக்கொண்டேன். இப்போது நம்மை நாடிவந்த மைத்துனருக்கு நமது அஸ்தினபுரி முதலிய ஐம்பத்தாறு தேசங்களும் புகழும்படியாய் என்னுற்றோன்றிய வெகுமதி செய்தனுப்புவேன் விடைதரல் வேண்டும் அண்ணு.

தருமபூபதி சொல் விருத்தம்

நீயேசற்குணவிவேகி நீயேசற்குணமாந்தீரன்
நீயேயென்வார்த்தைகேட்டு நீள்பகைதனைவிடுத்தாய்

நீயேயென்வெகுமதிக்கு நேசமியான்மிகவுங்கொண்டேன்
நீயேயுன்மனதுபோல நிறைவேற்றியனுப்புவாயே.

வசனம்

கேளடா தம்பி பீமா! உலகின்கண் நீயே சற்குண விவேகி, நீயே மதியூகி; நான் சொல்லிய நெறியை யுணர்ந்து அதி தீவிரத்தில் பகையை விடுத்து மைத்துனன்மீது அன்பு புரிந்தாயாதலால் உன் மனம்போல் என்ன வெகுமதி செய்தனுப்புவாயோ அதுபோல் நடத்தி அனுப்புவாயடா தம்பி பீமா.

பீமசேனன் சொல் வசனம்

கேளும் அண்ணாவே! நாம் வாசஞ்செய்யும்படியாகிய ஸ்தானத்தில் மைததுனன் திருப்தியடையும்படியாகிய வஸ்து என்னவிருக்கின்றது ஆதலால் காட்டுக் கழைத்துக்கொண்டுபோய் நல்ல ருசிகரமான கனிவகைகளும், நறுமணங் கமழத்தக்க கனிவர்க்கங்களும் கொடுத்துச் சந்தோஷமாய் அனுப்பிவைக்கிறே னண்ணா.

அப்படியே செய்தனுப்புவாய் தம்பி பீமா.

பீமசேனன் சொல் தரு

பல்லவி

வாராய்மைத்துனரே வதனம்போவோம்
வாராய்மைத்துனரே

அநுபல்லவி

மாருததவஞ்செய்யு முனிவரைக்கண்டவர்
வாசிக்கும்வேதத்தை வண்மைபெறக்கேட்போம் வா

சரணங்கள்

பச்சைப்புறவுமயிர் பாராயோசை
பாடுங்கருகுயிற் றெனியதைபாராய் வா

உச்சிதக்காவதிசயங்கள் தனைப்பாராய்
வொளிவில்லாவனமதி லோடுங்கணம்பாராய் வா

அடித்தேனென் றுன்மனம் வாடாதேயென்று
மனியாயமென்பதைத் தேடாதே வா

உல்லாசகெம்பீர ரானசூராயிந்த
உலகோர்புகழும் வெகுமதிபாராய் வா

வில்லாலழகுமன்னா நீயில்லும்நான்செய்யும்
வேடிக்கையைத்தரியனுடன் சொல்லும் வா

இதுவுமது கந்தார்த்தச் சிந்து

அறிவிலாமூடாகேளா யழகுதுரோபதையாளுக்குப்
பரிதாபவார்த்தைபேசிப் பகையைமீமூடிக்கவந்தாய்
பெரிதாகுமெந்தன்கையிற் பிரசண்டமாந்தருவெடுத்தே.

அரிதா மந்திரங்கள் சொல்லி

அக்கினியாஸ்திரமெடுத்தே-ஞானிதோ
ஆட்டிவிட்டேன்வில்லிற் பூட்டிவிட்டேன்
மூக்கோணமாய்ச்சிரமயிரை-வருந்திட
மூறிந்ததோடாமயிர் எரிந்ததோடா
ஓடிவந்துசிகைபிடித்தேன்-கையாற்குத்து
ஓங்கிவிட்டேன்கையை வாங்கிவிட்டேன்
நாடியேகரிபொருக்கி-உனக்குற்ற
நலஞ்சேருடலமெங்கும் பொட்டுமிட்டே
சிவப்புமண்குழைத்துனக்கு-நடுவினிற்
சிந்தூரத்திலர்தம்போற் பொட்டுமிட்டு
என்மனதிலாசைவைத்தே-உனக்கின்று
எங்கும்நிறையப்புள்ளி துலங்கவைத்தேன்
கரும்புள்ளிசெம்புள்ளியும்-கன்னமதிற்
கனமாவெண்ணிறந்தரும் புள்ளியுமிட்டேன்
பெரும்பாம்பைத்தேரைகளும்-சூழ்ந்துமெல்லப்
பிடித்திடுமோபற்றிக் கடித்திடுமோ.

பொது வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் பீமசேனனானவன் மைத்துனனாகிய செயித்தரசனை இங்கிதவார்த்தைகளோடும் ஓர் இருண்டவனத்திற் கூட்டிக்கொண்டு போய் தங்கைக்குச் சதிசெய்ய வந்த சண்டாளா இதோ உனக்கு என்னாலாகிய பரிசுசெய்கின்றேன் பெற்றுக்கொள்ளடா வென்று கடுங்கோபத்தோடும் அவனுடைய சிகையைப் பிடித்துக்கொண்டு முதுகில் ஓங்கி ஓர் குத்துவிட்டுக் கூர்மைபொருந்திய வேலினால் தலைமயிரை மூன்று வகுப்பாய் வழித்து சிரத்தினும் உடலினுங் கரும்புள்ளி செம்புள்ளி முதலிய வர்னபொட்டுகளைப் பாதாதி கேசபரியந்தமிட்டுக் கோலாகலஞ் செய்துக்கொண்டிருக்கையில், பன்னகசாலையிலிருக்குந் தருமபூபதி யானவர் சகாதேவனைப் பார்த்து அப்பா தம்பி சகாதேவ மூர்த்தியே! வினையாளனாகிய மைத்துனனுக்கு வெகுமதி செய்யப்போன பீமசேனன் இன்னம் வரக்காணோம் ஆதலால் நீபோய் வருகின்றானே இல்லையோவென்று பார்த்து வருவாய் தம்பியென்று கூறுவதைக் கேட்ட சகாதேவன் தமையனைப் பணிந்து வருகின்ற விதங் காண்க.

## சகாதேவன் வனத்துக்குச் செல்லுந் தரு

இராகம்-அபுரூபம்

பல்லவி

சந்திரகுலதர்மர்சொன்ன சற்குணவசனங்கேட்டு
மந்திரவாளைக்கையிலேந்தி வனம்புகுந்தான்

சரணங்கள்

பரிமளமிகுந்தசோலைப் பாரவனமெய்யசாலை
கரிநரிகள்சிங்கம்வாழும் கானகமதனிற்றேடி சந்

சித்திரவனமுழுதுந் தேடிபோடிநாடி
சப்தகன்னியர்கள்வாழும் தனிவனமெங்குந்தொடர்ந்தே சந்

வீமசேனன் தன்னைக்கண்டு விரைவுடனேயோடிவந்து
பூமிசைபடிந்தெழுந்து புகலுவேனண்ணாகேளென்று சந்

சகாதேவன் சொல் விருத்தம்

அண்ணாவேநீருமிந்த வன்புள்ளமைத்துனர்க்கு
எண்ணியவிதிபோற்செய்த வெழிலுள்ளவெகுமதிக்கு
மண்ணுளோர்காணக்கீர்த்தி வரும்பயனேதுமில்லை
நண்ணவேயென்னாளீன்ற நல்வெகுமதிசெய்குவேனே.

இதுவுமது தரு-இராகம்-பரஸ், ஆதி

பல்லவி

நானும்வெகுமதிசெய்வேன் மைத்துனர்க்கு
நானும்வெகுமதிசெய்வேன்

சரணங்கள்

நானுமிந்தகானகத்திற் சாணமதெடுத்துவந்தே
சேனையோடெவருமெச்சச் சென்னிமேலுருண்டைவைத்தே நா

பொது வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் வனத்தில் இவ்வாறு இவர்கள் செய்துக்கொண்டிருக்கையில், பன்னகசாலையி லிருக்குந் தருமநந்தனர் நகுலராசனைப் பார்த்துக் கூறுகின்றார்.

தருமநந்தனர் சொல் விருத்தம்

நலமிகும்புரவிவல்ல நகுலனேசெப்பக்கேளாய்
வலுவுளபீமசேனன் வருகாததென்னசென்றப்
புலமதையறியவேண்டிப் போனதோர்திசையைநாடி
சலுதியிலவர்கள்செய்தி தம்பியேயறிந்துவாடா.

வசனம்

கேளாய் தம்பி! புரவிவல்லவனாகிய நகுலனே வனத்தில் மைத்துனனாகிய செயிந்தரசனுக்கு வெகுமதிசெய்யப் போனவர்கள் இன்னம் வரக்காணோமாதலால் நீபோய் அவர்கள் சேதி யின்னதென்று தெரிந்து வருவாய் தம்பி நகுலனே.

பொது வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப் பிரகாரம் தருமபூபதியானவர் வெகுமதி செய்யும்பொருட்டு காட்டுக்குச்சென்ற பீமசேனன் சகாதேவ னிருவரும் வரக் காண்கிலோமாதலால் நீ போய் கண்டறிந்து வருவாயென்று நகுலனுக்குரைக்க அவ்வார்த்தையைக்கேட்ட நகுல ராஜன் பன்னகசாலையைவிட்டு வனத்திற்கு வருகிறவிதங் காண்க.

## நகுலன் பீமசேனனைத் தேடும் தரு

இராகம்-உசேனி ரூபகம்

கண்ணிகள்

இந்தவனந்தனிலெங்கென் றுதேடுவேனியான் ஓ பரந்தாமா
யித்தருணத்திலெனக் கருட்செய்யுமையா

அந்தகாரம்போலடவிபுலப்படுதே ஓ பரந்தாமா
ஆதரிப்பாய்வந்தலைகடற் றுயிலுமெய்யா

தாவாநலமெங்குந்தாவிஜொலிக்கின்றதே ஓ பரந்தாமா
தாசன் றுயரைத்தனித் தருள்வாய்பரனே

மேவாயிடமெங்கும்யேவியுழன்றேனே ஓ பரந்தாமா
வீமனையென் கண்ணிற்காண வருள்புரிவாய்

நாலுதிக்குந்தேடிக் கால்களசந்தேனே ஓ பரந்தாமா
நாதனுக்கெவ்வகையாய்ச் சென் றுரைப்பேனே

காலமுமிப்படியாகுமோயெங்களுக்கு ஓ பரந்தாமா
கருணைசெய்யாவிடிலேது கதியையனே.

பொது வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் வனத்தில் நகுலராசன் பீமசேனனையும் சகாதேவனையும் தேடிக் கிடையாத தன்மையால் துன்பப்பட்டுக்கொண்டிருக்கையில் தருமநந்தனரானவர் அர்ச்சுன ராசனைப் பார்த்து கூறுகின்றவிதங்காண்க.

தருமபூபதி சொல் விருத்தம்

அசைவிலாதீரனை வர்ச்சுனசொல்லக்கேளாய்
விசுவாசமைத்துனர்க்கு வெகுமதிசெய்யப்போன
நிசமானவீமனோடும் நேரிளையோரைக்காணோம்
பிசகதைதீயறிந்தே பிரியமாய்வருகுவாயே.

### வசனம்

கேளாய் தம்பி அர்ச்சுனு! நமது மைத்துனனுகிய செயித்தாச னுக்கு வெகுமதி நடத்தச்சென்ற பீமசேனனைக் காணுமென்று நகுலசகாதேவர்களை யனுப்பினேன் அவர்களையும் இதுபரியந்தம் காண்கிலேனுதலால் நீ சென்று அவர்களுடைய செய்தியை இன்ன தென்று கண்டறிந்து வருவாய் தம்பி அர்ச்சுனு அப்படியே அறிந்து வருகிறேன் அண்ணுவே.

### அர்ச்சுனன் சொல் தரு

#### கண்ணிகள்

சந்திரகுலந்தன்னில் தமயனைக்கண்ணுலே காண்பேனே
தமயனைக்கண்டுநான் சந்தோஷமாஞ் சேதிசொல்வேனே
இந்தவனந்தனிலெழில்சேரும் வீமரைக்காண்பேனே
ஏலாமலென்னுலே விசல்சேரும்துன்பத்தைப் பூண்பேனே
மயிற்குயிற்கிள்ளையாடும் வனமெங்குஞ்சென்றுநான்வாடினேன்
வண்டுகீதம்பாடிவளர்கின்ற வனமெங்குந்தேடினேன்
தேடிவருகையிற்றேகமெலிந்தே யிளப்பேறினேன்
சிந்தைமெலிந்தே ஜலமருந்திக்களையாரினேன்
முனிவர்மதங்கள்வளர்க்கின்ற வனமெங்கும்தேடினேன்
முதியோனெனுந்தமயன்றனைக்கண்டு நாடினேன்.

### இதுவுமது விருத்தம்

வெகுமதிசெய்யவந்த வீரியவண்ணுபோற்றி
மகிபதிமைத்துனர்க்கு மகிட்சியாய்நீங்கள்செய்த
தகையுளவெகுமதிக்குத் தக்கவைபோலநானும்
வகைபெறுமிவ்வனத்தில் வாகனமழைப்பிப்பேனே.

### வசனம்

சேஞும் தமயனுரே! தம்பிமார்களே! நீங்கள் நமது மைத் துனர்க்குச் செய்த வெகுமதியைக்கண்ட யான் மிகவுஞ் சந்தோஷ மடைந்தேன். ஆனுல் இவர் மண்டலாதிபதியாகிய அரவக்கொடி யோனுக்குரிய மைத்துனராதலால் அவர்களும் கவுரமாய்ச் சிந்திக் கும்படியாய் இந்த காமியவனத்தில் இவர் ஆரோகணிக்க ஓர் வாக னம் வருவித்துக் கொடுக்கின்றேன் அண்ணு! மகா சந்தோஷம் அப்படியே உன் மனம்போல் வருவிப்பாய் தம்பி அர்ச்சுனு.

### பொது வசனம்

அகோ தெப்படியென்றுல் இந்தப்பிரகாரம் அர்ச்சுனமகாராஜன் தனது மைத்துனனுகிய செயித்தாசனுக்கு வாகனப்பரிசு செய்ய வேண்டுமென்று எண்ணங்கொண்டவனுய் அக்கானகத்தில் வாழும்

வேடுவர்களை வருவித்து, அடா வேடர்களே இவர் சவாரி செய்யும் பொருட்டு ஓர் கார்த்தபம் வேண்டியிருப்பதால் அதி தீவிரமாய்க் கொண்டு வாருங்களடா வென்று சொல்ல அது போலவர்கள் கொண்டுவருகிற விதங்காண்க.

## கார்த்தபம் வருகிற தரு

### பல்லவி

கார்த்தபம்வருகுதுபார் காவலுடனே
கார்த்தபம்வருகுதுபார் கார்

### அநுபல்லவி

பார்த்திபனுஞ்சிந்து பதிதந்தசுதனுக்கு
நாற்றிசையும்புகழ் நலங்கொள்பரியதாக கார்

### சரணங்கள்

தலையையசைத்துக்கொண்டு தாண்டிதாண்டிகுதித்தே
விலைசொல்லத்தரமில்லா வியன்கொள்வடிவுடனே கார்

கத்துங்குரலோசையைக் கண்டவர்களியாவரும்
தத்தித்தத்திக்குதித்துச் சந்தோஷங்கொண்டுநிற்க கார்

காண்டீபனுரைப்படி கானக்குரவர்கூடி
நீண்டவனத்திற்றேடி நிருபனேறுவதற்கு கார்

### பொது வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப் பிரகாரம் அர்ச்சுனராஜன் உத்திரவின்படி வேடுவர்களாற் கொண்டுவரப்பட்ட கழுதையின்மீது மைத்துனனாகிய செயித்தரசனை அதன் வாற்புறமாய் முகமிருக்கும்படி உட்காரவைத்து அசைய வொட்டாமற் கட்டிச் சிங்காரித்திருக்கையில் பன்னகசாலையிலிருக்குந் தருமநந்தனர் துரோபதையை நோக்கி ஓ பெண்பாவாய் உனது தமையனுக்கு வெகுமதி நடத்தச் சென்ற நால்வரையும் இதுவரையில் காணாமையால் நீயாகிலும் போய்ப் பார்த்து வருவாயென்று கூறுகிற விதங்காண்க.

### தருமநந்தனர் சொல் கொச்சகம்

பொன்னனையமாமயிலே பூங்கிளியேரஞ்சிதமே
அன்னநடைப்பெண்ணரசே யற்புதமேபொற்பணியே
என்னவிதமோவறியே னெனக்கிளைஞர்போனவகை
கன்னியரேநீயேகிக் கண்டுரைப்பாய்கற்பகமே.

### வசனம்

வாரும் பெண்ணே பிராணநாயகி! உமது தமயனுக்கு வெகுமதி செய்து வழிகூட்டச்சென்ற பீமசேனனைக் காணாமல் தம்பிமார் மூவ

ரையும் அனுப்பினேன் அவர்களும் இதுபரியந்தம் வராமல் இருப்ப தால் நீயாகிலும்போய் அதிசீக்கிரயா யழைத்து வருவாய் பெண்ணே.

## துரோபதை சொல் டோரா

### கண்ணிகள்

இந்தவனந்தனிலே முந் தி
வந்தவரைக்காணே ன்
இந்தவிதிக்கென்ன செய்குவேன்யானு ம்
வனமெங்குந்தேடினே னே
ஆடும்பரம்பரனே மன் று ள்
ஆடுஞ்சிதம்பர னே
சோதிப்பெருகியமன்ன ருரைத்திடு ங்
காடதறிந்தில னே
காடுசெடிகளெல்லாஞ்சுற் றி
வோடியேதேடிவாறே ன்
கானகந்தன்னிலேபோனவம்மன்னரை க்
காணுவதெப்படி யோ
தம்பிமாரைப்பிரிந்தேளன்னை த்
தனியாயனுப்பிவைத்தா ர்
நம்பியிருந்தவரெந்தனைக்கோபிப்பா ர்
நானென்னசெய்வேனை யோ

### பொது வசனம்

அகோதெப்படியென்றால், இந்தப் பிரகாரம் தருமநந்தனர் உத்திரவின்படி பீமசேனன் முதலிய நால்வரைத் தேடிப் பிடிப்ப தற்கு வந்த துரோபதை மிகவுந் துன்பமடைந்து பிறகு ஓரிடத் திற் கூட்டமா யிருக்கக்கண்டு சந்தோஷங்கொண்டவராய் கூறு கின்ற விதங்காண்க.

## துரோபதை சொல் அகவல்

வீமாசரணம் விஜயாசரணம்
பூமேவியதோர் பொன்னடிசரணம்
என்னைவஞ்சிக்க வின்புடன்வந்த
மன்னனுக்கின்று மாண்புறவளித்த
வெகுமதிகண்டு மேலவர்மெச்சவும்
தருமீதென்றே தரணியோர்சொல்லவும்
பஞ்சவர்தேவியான் பத்தினியானால்
வஞ்சனைசெய்யவந்த விப்பாவி
ஏறியகார்த்தம் மிருகப்பிடிக்கவும்

மீறிதொட்டவரையும் விடாமற்பிடிக்கவும்
மின்னுமிக்கரானே விரைவுடன்கடந்தே
மன்னவனிருக்கும் மகாசபைநாடி
ஓட்டமாயோடி வுயரத்தினபுரி
நாட்டமார்வீதி நாற்புரஞ்சுற்றவும்
தொட்டபேர்கரமதை யொட்டியிழுக்கவும்
நட்டணைசொல்லியர் நகரோர்சிரிக்கவும்
தவறிலாப்புண்ணிய சற்குணவரசர்
அவமெனத்தொடுவரே லக்கணம்விடவும்
சாபமளித்தேனே தயவதாய்நீங்கள்
பாவிவாழ்பதிக்குப் பறக்கடிப்பீரே.

வசனம்

இந்தப்பிரகாரம் துரோபதையம்மன் கொடுத்த சாப வார்த்தையைக் கேட்டவுடனே பீமசேனன் முதலிய யாவருங் கழுதையை விட்டுத் துரத்தும்போது, அக்கழுதையானது அஸ்தினபுரியை நோக்கி வருகிறவிதங் காண்க.

## கார்த்தபம் ஓடுகின்ற தரு

இராகம்-நாதநாமக்கிரியை

பல்லவி

வேகத்தைப்பாரீர் கார்த்தபமோடும்
வேகத்தைப்பாரீர்

அநுபல்லவி

நாகத்துவசனுக்கு நலஞ்சேர்மைத்துனனுரும்
வாகொத்தபுயன்றன்னை வாரிக்கொண்டுநடக்கும்

சரணம்

மன்னுங்காமியவன வளப்பமெல்லாங்கடந்து வே

பன்னற்கரியவிருண்வனமும் படர்வனமும்
பாலையைவிடுத்தே பலபலவாஞ்
சோலையையடுத்தே தாவாநலப்
படர்களடர்ந்தகுன்றும் இடர்தருமதில்நின்றும்
பருத்தபுதரிற்றாக்கி வருத்தமுறவேதாக்கி
பாய்ந்திடவையோபாவியவன்
மாய்ந்திடப்பொய்யோ பல்லைக்கடித்துப்
படர்ந்தவாயினூர்ஜாடி அடர்ந்தபதியைக்கூடி
மடந்தையர்கள்நகைக்க இடர்தத்தொங்குநடக்கும் வே

### பொது விருத்தம்

கார்த்தபம்போகும்வேகம் கண்டந்தவைவர்கூடி
மெத்தவும்கையைக்கொட்டி வியனுருஞ்சாலேசேர்ந்தார்
வெத்திசேர்சபையிலுள்ள வேந்தர்கள்கண்டுரைக்க
சித்தநொந்தயர்ந்துவாடித் துரியனும்செப்புவானே.

### வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் கார்த்தபமானது செல்லும்படியாகிய வேகத்தைக்கண்டு துரோபதை முதலிய ஐவரும் கைகளைக் கொட்டிச் சிரித்து தாங்களிருக்கும்படியாகிய பன்னக சாலையிற் போய்ச் சேர, பின்பு வனத்தைக்கடந்த கழுதையானது அஸ்தினுபுரிப்பட்டணத்திற் பிரவேசித்து நான்கு வீதிகளுஞ் சுற்றி இராஜ சபைக்கெதிரிற் போகையில், அக்கோலத்தைக்கண்ட வேந்த ராதியோர்கள் அச்சமும் நாணமுங்கொண்டு வேந்தர்வேந்தனுகிய துரியோதன மகாராஜனுக்குச் சொல்வதைக் கண்ணுற்ற துரியன் சித்தங் கலங்கி யாதுந் தோற்றுதவனாய் அச்சபையிலுள்ள அரசர்க ளுடன் கூறுகின்ற விதங்காண்க.

## துரியோதனன் சொல் தரு

### பல்லவி

வந்தபுங்கந்தன்னைப் பாருங்கள்-பாண்டவராலே
வந்தபங்கந்தன்னைப் பாருங்கள்

### அநுபல்லவி

வந்தபங்கந்தன்னைப் பாருமெந்தன்மைத்துனரைக்கண்டு
வடவடவென்மனம் படபடெனத்துடிக்க வந்த

### சரணங்கள்

கார்த்தபந்தன்னிலேறிப் பங்கமடையவவன்
வெற்றியனைத்துமாற்றி
மைத்துனனுயெருக்க மாலையுமணிந்தாரே
மடியப்படைகளைத் திடமுடன்கூட்டியே
கடுகியவர்களின் முடிகளைப்பொறிக்கிறேன் வந்த

தலையில்விளக்கையேற்றி யவர்செய்ததுமெந்தன்
வலுவையறியவெண்ணியே
நிலையொன்றில்லாவனத்தில் நேசித்திருப்பவருக்கு
நிஜமதாய்புஜபலவுசிதமோ வெனவெல்ல
திசைதெரியாமலோடச் செய்கிறேனிமையினுள் வந்த

கெருவமிகப்படைத்தே பாண்டவர்வனத்தில்
வெறுவத்தளத்தைமுடித்தே
அறிவேனவர்களது வாண்மையுஞ்சவுரியமும்
அதிரப்பிதறிடக் கதறிச்சிதறிட
பதறிவுயிர்விடும்படிக்குச்செய்குறேன். வந்த

இதுவுமது விருத்தம்

திடமுடையசபையிலுள்ள சகுனிகர்ண
திறலோங்குந்தம்பி துற்சாதனனேகேளீர்
வடிவுடையமைத்துனற்குச் செய்தபங்கம்
வந்ததன்றோசபையோருக் கெல்லாமிப்போ
கடுகியொருகணப்போதிற் சேனைதன்னைக்
காலாந்தருத்திரனைப் போலேகூட்டி
பொடிபடவேபாண்டவரை வதைக்கவேண்டும்
பிடியுங்கள்கார்த்தபத்தை யோடித்தானே.

வசனம்

ஆஹா! கேளுங்கள் இச்சபையிலுள்ள சகுனி கர்னன் முதலிய தம்பி துற்சாதனு! நமது மைத்துனரைப் பாண்டவர்கள் செய்யாத மானபங்கஞ்செய்து கழுதையின்மேலேற்றி அனுப்பியபடியால் நாம் இக்கணமே நமது நால்வகைச் சேனைகளோடுஞ் சென்று வளைத்துச் சூராவளிக்காற்றிற் சிக்கிய இலவம்பஞ்சியைப்போற் பறக்கச் செய்ய வேண்டியபடியால் நீங்கள் தெருத்தெருவாய்ச் சுற்றிவரும்படியாகிய கார்த்தபத்தைப் போய்ப்பிடியுங்களப்பா.

துரியோதனுதியோர் கார்த்தபத்தைப் பிடிக்குந் தரு

இராகம் ஜாவளி கண்ணிகள்

கட்டழகியாளளித்தவெஞ்சாபக்
கழுதையுமோடத்தெருத்தெருவாய்
தொட்டவரியாருமே வொட்டிக்கொண்டேகுந்
துயரிதென்னென் றுபின்போய்பிடிப்பார் ஆ
பட்டவர்த்தனர்மகுடவர்த்தனர்
பரிதரிக்காலாள்துரியனுடன்
வொட்டியிழுக்கமிகவயர்வுற்றே
அரவக்கொடியோனுமோதுவனே ஆ

துரியோதனனிரங்கல் விருத்தம்

தொட்டிவேண்டுமென்ற துரோபதையாசையின்று
விட்டுவிட்டேனுனையோ விதித்ததோபிரமதேவன்

சட்டமோவவர்தேவி சாபமோதொட்டபேரை
வொட்டிக்கொண்டோடுதையோ வொருவகையறிகிலேனே.

வசனம்

ஐயையோ தெய்வமே! நான் துரோபதையின்மீது வைத்திருந்த ஆசையை இன்றோடே விட்டுவிட்டேன் ஆ இதென்ன பாண்டவர்கள் செய்த திட்டமோ துரோபதையிட்ட சாபமோ அல்லது பிரமன் விதித்த விதியோ தொட்ட பேர்களையெல்லாம் பற்றி யிழுக்குதே இதை விடுவித்துக் கொள்ளும்படியான வகையை யானறிகிலேனே தெய்வமே.

## துரியோதனன் புலம்புந் தரு

இராகம்-நீலாம்புரி

கண்ணிகள்

ஐயோயென்செய்குவேன் றரையி
லடிபட்டுழல்கின்றேனே ஓ-தெய்வமே
வையமெங்கும்நகைக்கப் பாண்டவர்செய்தசூதே
வஞ்சியிட்டசாபமோ ஓ-தெய்வமே
கற்புடையோர்சினந்தாற்கடலுஞ்சுவறுமென்பார்
கண்டறிந்தேனின்றோடே ஓ-தெய்வமே
சொற்றவறுமைத்துனன் துயர்கண்டேசகியாமல்
தொட்டோரொட்டிக்கொண்டாரே ஓ-தெய்வமே
ஆனைசேனையாவையுமடியோடேயிழுக்குதே
யார்பாலெடுத்துரைப்பேன் ஓ-தெய்வமே
தேனையொற்றமொழியாள் தர்மத்தைக்கனவிலுஞ்
சிந்திக்கமாட்டேனையோ ஓ-தெய்வமே
வணங்காமுடிபடைத்தமன்னனென்றேபுகழும்
மாட்சிமையழிந்ததே ஓ-தெய்வமே
ரணமாகியுடலெங்குமாவித்தடுமாறுதே
ரட்சிப்போரைக்காண்கிலேன் ஓ-தெய்வமே

பொது விருத்தம்

கடுகியேநீஓடிவந்து கைநீட்டுகருணைவென்றே
முடிபெறுவேந்தன்சொன்ன மொழியதைச்சிரமேற்கொண்டு
பிடிபடிற்படுவோமென்று பின்தொடர்ந்தேயப்போது
தடைபடாவேசத்தோடுந் தாண்டியேபிடித்திட்டானே.

## கர்னன் கார்த்தபத்தை பிடிக்குந் தரு

பல்லவி

தாண்டியேபிடித்தான் துரியன்கையை
வேண்டியேபிடித்தான்

அநுபல்லவி

தாண்டிப்பிடிக்கக்கை மீண்டான் துரியன்றனும்
வேண்டிக்கொள்ளவேமன்னர் விசையாகவேயோடித் தா

சரணங்கள்

விற்பொருதுமன்னவர்கையை விடுமென் றுதொடும்போது
பருமைந்தனுரையாற் படைமன்னர்விடுபடத் தா

பின்னுஞ்சைனியத்தை மன்னன்தொடத்தொடவே
அன்னவரெவர்களு மடியோடேவிடுபடத் தா

செயித்தரசனைத்தொட்டுச் செங்கையாலிழுக்கையிற்
பயித்தியக்காரனைப்போற் பலர்மெச்சவிடுபட்டான் தா

பொது வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் பருதி மைந்தனாகிய கர்னமகாராஜன் மிகப் பரிவோடும் ஓடிவந்து அரவக்கொடியோன் முதலிய யாவரையுந் தொடத்தொட விடுபட்டு அவரவர்கள் மனையைச் சேர்ந்து நாணமுற்றிருக்கையில் துரியோதனன் தனது மைத்துனனை அரண்மனைக்கு அழைத்துக்கொண்டு போய் ஸ்நானஞ்செய்து வைத்துத் தன்னுடன் போஜனஞ்செய்து வைத்தபிறகு அவனைப் பார்த்துக் கூறுகின்ற விதங்காண்க.

துரியோதனன் சொல் விருத்தம்

மகாவலுப்பேசிச்சென்ற மைத்துனமணியேகேளாய்
விகாதமதானவைவர் மெல்லியையழைத்தபோது
தகாதென்றேயவள்தடுக்கத் தற்கமேதேனுமுண்டோ
அகாதமாய்நேர்ந்ததென்ன வறியகாலேதுவாயே.

வசனம்

கேளும் மைத்துனா! நீ எவ்வளவோ தீர வார்த்தைகளைப் பேசிச்சென்ற உனக்கு இப்படி நேரிடும்படியாய் வந்த காரணத்திற்குப் பாண்டவர்களை யெதிர்த்துப் போர்புரிந்து வெல்லத் திறமில்லாமற் சிக்கிக்கொண்டு இப்படியானாயோ அல்லது பாஞ்சாலியை யழைக்க அவள் சம்மதப்படாமல் வாதமிட்டு அவர்கள் கையிலகப்பட்டுக்

கொண்டாயோ மற்ற யாது காரணத்தால் சம்பவித்ததோ அதை ஒளியாமல் வெளியிடுவாய் மைத்துன.

செயித்தரசன் சொல் சிந்து

வையகத்தையாளும்மன்ன-எனக்கு
வந்தவிதிகளைச் சொல்லுகிறேன்

மைவிழிதுரோபதையைக்-கண்டே
வாடிப்பரிதாப வார்த்தையதாய்க்

காட்டிலிருக்காமல்-எந்தன்
கடிநகர்வாவென்றே யானழைத்தேன்

கேட்டந்தவஞ்சியவள் எந்தன்
கேள்வரைக்கேட்டு வாரேனென்றாள்

ஆகட்டும்வருவேனென் று-சொல்லி
யவசரமாய்வாள் மறந்தவன்போல்

வைத்தேயவனின்றும்-நீங்கி
வந்தோரதமேறி வருளகயிலே

கண்டந்தமெல்லியரும்-வாளைக்
கையிலெடுத்துக்கொண் டோடிவர

அண்டாதகாடதனில்-தேரை
யதிவேகமாகவே விட்டுவந்தேன்

செந்தாமரைமுகத்தாள்-வந்தே
செங்கரநீட்டித் தரும்போது

தந்திரமாகப்படி-ஏறித்
தாருமென்றேன்படி யேறிவர

தேரைமுடுக்கிவிட்டேன்-அப்பா
தேம்பியழுதங்கே கூச்சலிட்டாள்

வீராதிவீரனெனும்-கெடி
வீமனும்வந்தே மடக்கிக்கொண்டு

அடித்தேபிடித்தென்னை-யவ
னண்ணன்முன்கொண்டே யென்னைவிடுத்தான்

துடித்தவர்தம்பிதன்னை-வைது
துற்சடைகோபிப்பாள் விடுவியென்றார்

வெகுமதிசெய்தனுப்ப-வென்றே
விடைபெற்றேவீமனுந் தம்பியரும்-

நங்கையவளுங்கூடிக்-கோலம்
நடத்தவருந்தினேன் மைத்துனரே.

### துரியோதனன் சொல் விருத்தம்

வீமனுக்கோவகங்காரகெர்வமாச்சு
விளையாட்டாயிதைவிட்டுவிடப்போகாது
நாமுனக்கோர்யோசனைகள்சொல்லக்கேளு
நன்மைபெறவேண்டுவையேற்பயணமாகக்
காமனையெறித்தவுன்றன் பதத்தைநாடிக்
கருதரியவிமயவரையருகிற்சேர்ந்து
நேமமுடன் தபமிழைத்தேயருளைப்பெற்றால்
நீணிலமே லன்னவரைவெல்லலாமே.

### வசனம்

ஆ ஆ கேளாய் மைத்துனா! அன்னபானாதிகளுக் கயலாய் அடவியிற் சஞ்சரித்துக் கந்தமூல பலாதிகளை பொசித்துக் காலத்தைக் கழித்துவரும் பாண்டவர்களுள் பீமன் மிகவும் கெர்வங் கொண்டிருப்பதால் அவர்களை சும்மாவிடப்படாது அவர்களை வெற்றிபெற வேண்டுமென்னும் விருப்பமுனக்கிருக்குமானால் இக்கணமே இமய வரைச் சாரலைச்சேர்ந்து காமனையெறித்த ஸ்ரீ கைலாசபதியாகிய சந்திரஜடாதரமூர்த்தியைச் சிந்தித்துத் தபஞ்செய்து அவருடைய அருளைப்பெறுவாயாகில் பஞ்சவரையும் பஞ்சைபோற் பறக்க வெல்லுவாய் ஆதலால் எனது வார்த்தையைக் கடவாமல் நடப்பாய் மைத்துனா.

### பொது வசனம்

அகோ தெப்படியென்றால் இந்தப்பிரகாரம் துரியோதன மகாராஜன் கூறியதைக்கேட்ட சிந்துதேசாதிபதியாகிய செயித்ரசன் தபவேடம்பூண்டு வருகிறவிதங்காண்க.

### இதுவுமது விருத்தம்

காவிகாம்பரமுந்தெண்டு கமண்டலங்கையிலேந்தி
தாவடமாலையாடத் தரித்தகுண்டலங்கடுன்ன
நாவிற்பஞ்சாட்சரத்தை நலமுடன்தியானஞ்செய்ய
மேவியேவிமயகாடி வேந்தனும்வருகின்றானே.

### செயித்ரசன் தபஞ்செய்ய நடக்கும் தரு

இராகம்-கல்யாணி, அடதாளம்

பல்லவி.

தபஞ்செய்யநடந்தானே செயித்ரசன்
தபஞ்செல்யநடந்தானே

அநுபல்லவி

அவர்தரவேவிலகுமறுபகையும்விடுத்து
ஆதிபரசிவத்தி னோங்கெழுத்தைத்தொடுத்து

சரணங்கள்

சிந்துபதியனித்தபாலன் புவியாள்
திரியோதன னுக்கனுகூலன்
அந்தமிகுமஸ்தினபுரியதனைக்கடந்து
அரற்றற்கரியவடியார் கடமைத்தொடர்ந்து தவ

மெய்யில்விபூதியெங்குமிலங்க கழுத்தில்
வியன்கொளக்குமணிகள் துலங்க
கையில்யோகதண்டமுங்கமண்டலமுமெடுத்து
கருதவொண்ணுக்குரட்டைக் கழலிணையிற்றொடுத்து தவ

பொன்னவிர்சடையோனைப்போற்றி புவன
போகபாக்கியங்களை மாற்றி
பன்னற்கரியபஞ்சாக்கினியிடைநின்றே
பவத்திலழுந்தச்செய்யும்மலச்சழக்கையும்வென்றே தவ

வசனம்

அகோதெப்படி யென்றால் இந்தப் பிரகாரந் தவவேடந் தரித்து வந்த செயித்தரசன் இமயமலைச்சாரலைச் சேர்ந்து தன்னுடன் தொடர்ந்த சீடர்களை நோக்கி, அப்பா தொண்டர்களே! யான் பரசிவத்தையுன்னித் தவஞ் செய்யப்போகின்றமையால் அதற்கு வேண்டிய பணிகளை நடத்திவரக் கடவீர்களென்று அவர்களுக்கு ஆக்ஞை செய்து தவஞ்செய்யும் விதங்காண்க.

செயித்தரசன் சொல் போற்றிக் கவி

வேதத்தன்முடிவினின்ற விளங்கியபரனேபோற்றி
பாதத்தையுன்னிவந்தேன் பரஞ்சுடரொளியேபோற்றி
நாதத்தைக்கடந்துநின்ற நம்பநின்னிணைத்தாள்போற்றி
பூதலந்தன்னில்வேண்டும் பொருளேஎனக்கருள்வாய்போற்றி.

இதுவுமது தரு

இராகம்-காபி, ரூபகம்

பல்லவி

கருணாகரனே சங்கா
கருணாகரனே

அநுபல்லவி

மருவார்கொன்றைமாமலர் சூடிய
வாசவிஸ்வாசசர்வேசமஹேசனே கரு

சரணங்கள்

ஜனகாதியர்போற்றும்பசுபதி
சகலாண்டமுநின்றேயொளிர்மதி
வனமாலிக்கருளுந்தயாநிதி
வானவர்தானவர் கானவர்கோன்பணி கரு

மதிசூடியவானேயரோஹரா
மழுமான்கரத்துற்றபராபரா
கதிரீயன்றிவேறில்லைதற்பரா
காதலுறும்விலைபூதலமீதருள் கரு

அயன்மாலமரர்பணிபங்கஜ
வமலரவரவர்வொளிகங்கஜ
ஜெயமியான்பெறத்தருவாயுதாரஜ
சேனுலகோர்புகழ்தானுவேதந்தருள் கரு

பொது விருத்தம்

தேவர்கள்முனிகாந்தர்வர் சித்தர்கள்பத்தரோடு
மேவியவயன்மாலிந்திரன் விமலியுமருகிற்சூழச்
சிவகாருண்யவஸ்து சிந்துநாடாள்வோன்காண
ஆவலாய்விடைமீதேறி யானவர்வருகின்றாரே.

பரமசிவன் வருகிற தரு

இராகம்-சௌராஷ்டிரம்

பல்லவி

அரனிதோவந்தாரே விடையிலேறி
அரனிதோவந்தாரே அர

அநுபல்லவி

அரன்வந்தா ரன்பர்கள் குறைதீரும்படியாக
அந்தரதுந்துமிவீணைமுழங்கிட
இந்திரதேவர்கள் வந்துவணங்கிட அர

சரணங்கள்

நாதன்வந்தானிதோ வேதன்சுருதிபாட
ரம்பைஊர்வசிமேனகையாடிட
பம்பைகள்முரசுடன் சங்குமுழங்கிட அர

ஈசன்வந்தானிதோ விமயவர்கரங்கூப்ப
இலகியமான்மழுசூலமுமேந்தியே
சலசலவெனத்தேவர் மலர்கள்சொரிந்திட அர

விமலன்வந்தானிதோ விண்ணவர்பணிந்திட
விஞ்ஞையருரகர் வித்யாதரர்பாடவே
விரைசேர்செயித்ரசன் மிகமகிழ்கூடவே அர

செயித்ரசன் சொல் போற்றிக் கவி

சங்கராபோற்றிபோற்றித் தாணுவேபோற்றிபோற்றி
மங்கைபோர்பாகாபோற்றி மான்மழுக்கரத்தாய்போற்றி
பங்கமில்லாமனுயேன் பார்மிசைவெற்றிபூண
விங்கெனக்கருள்வாய்போற்றி யிறைவனேபோற்றிபோற்றி.

பரமசிவன் சொல் கவி

சயிந்தவாகேண்மோகொன்றைத் தாரதுந்தருகுவோம்யாம்
பயன்படுமந்திரத்தை பண்புடனுச்சரித்து
நயமுடன்பிரயோகிப்பாயேல் நாடியன்னவனைக்கொல்லும்
பயமதையகற்றியுந்தன் பதிதனக்கேகுவாயே.

வசனம்

கேளும் பிள்ளாய் செயித்ரசனே! நீ செய்த தவத்திற்குச் சந்தோஷங்கொண்டு உன்மனோபீஷ்டப்படி வேண்டிய வரங்களையும் பீமனை வெற்றிகொள்ளும்படியாய் கொன்றைமாலையுங் கொடுத்தோமாதலால் உனது அச்சத்தை யகற்றி மகிழ்வோடும் உனது பதிக்குப்போய் சேரக்கடவாய் போய் வாரும் பிள்ளாய் சுபம்.

சயிந்தவ நாடகம் முற்றிற்று.

திருமகள் விலாச அச்சகம், சென்னை 1—1962.

# நாடகப் புஸ்தக விளம்பரம்

| | ரூ.பை. |
|---|---|
| கிருஷ்ண விலாசம் | 1 25 |
| கீசக நாடகம் | 1 25 |
| சுந்தரிமாலையீடு நாடகம் | 1 25 |
| கோவலன் நாடகம் | 1 25 |
| கங்கையம்மன் நர்டகம் | 1 25 |
| அரக்குமாளிகை நாடகம் | 1 25 |
| காத்தவராயன் நாடகம் | 1 25 |
| அபிமன்னன்சண்டைநாடகம் | 1 25 |
| சயிந்தவன்சண்டை நாடகம் | 1 25 |
| இராவணன் சம்மார நாடகம் | 1 25 |
| கர்ணமோக்ஷ நாடகம் | 1 25 |
| மாடுபிடி சண்டை நாடகம் | 1 25 |
| பதினெட்டாம்போர் நாடகம் | 1 25 |
| சனிவார விரத நாடகம் | 1 25 |
| சயிந்தவ நாடகம் (வி. கிருஷ்ண பிள்ளை இயற்றியது) | 1 25 |
| துரோபதை குறவஞ்சிநாடகம் | 1 00 |
| கிருஷ்ணன் தூது நாடகம் | 1 00 |
| சுபத்திரை மாலையீடு நாடகம் | 1 00 |
| அர்ஜுனன் தபசு நாடகம் | 1 00 |
| அல்லி நாடகம் | 1 00 |

| | ரூ.பை. |
|---|---|
| ஏணியேற்ற நாடகம் | 1 00 |
| பவளக்கொடி நாடகம் | 1 00 |
| மயிலிராவணன்சண்டைநாட | 1 00 |
| வெங்கடேசப்பெருமாள்நாட | 1 00 |
| வாலிமோக்ஷ நாடகம் | 1 00 |
| தாடகைசம்மார நாடகம் | 1 00 |
| துரோபதைமாலையீடு நாடகம் | 1 00 |
| முதல்நாள் சண்டை நாடகம் | 1 00 |
| சந்திரகலை கர்வபங்க நாடகம் | 1 00 |
| அரவான் கடபலி நாடகம் | 1 00 |
| இராஜசூய நாடகம் | 1 00 |
| மதுகயிடாசூரசம்மாரநாடகம் | 1 00 |
| பீஷ்மர் சண்டை நாடகம் | 0 62 |
| ஸ்ரீராமர் தரிசன நாடகம் | 0 62 |
| தமிழறியும்பெருமாள்நாடகம் | 0 62 |
| அஞ்சுமதிகலியாண நாடகம் | 0 62 |
| மதிவல்லபன்கலியாண நாடகம் | 0 62 |
| பனிரண்டாநாள்சண்டைநாட | 0 62 |
| அமராவதிமோக்ஷ நாடகம் | 0 62 |
| காளிங்கநிர்த்தன நாடகம் | 0 62 |
| வள்ளியம்மை நாடகம் | 0 62 |

## டிராமா நாடகங்கள் :

| | | |
|---|---|---|
| சம்பூர்ண இராமாயண நாடகம் (எகை. சிவசண்முகம் பிள்ளை இயற்றியது) | | 3 50 |
| கோவலன் சரித்திரம் (ச. சு. சங்கரலிங்கக் கவிராயர் இயற்றியது) | | 0 75 |
| நல்லதங்காள் சரித்திரம் | ,, | 0 75 |
| ஞானசௌந்தரி | ,, | 0 75 |
| ஸ்ரீ பாமா விஜயம் | ,, | 0 75 |
| பாதுகா பட்டாபிஷேகம் | ,, | 0 75 |
| ஸ்ரீராமதாஸ் சரித்திரம் | ,, | 0 75 |
| சத்தியவான் சாவித்திரி | ,, | 0 75 |
| சகுந்தலா | ,, | 0 75 |

மேற்கண்ட நாடகங்களும், இன்னும் இதர தமிழ்ப் புத்தகங்களும் எங்களிடம் விலைக்குக் கிடைக்கும். கேட்லாக் வேண்டுவோருக்கு இலவசமாக அனுப்பப்படும்.

---

கிடைக்குமிடம்:— **B. இரத்தின நாயகர் சன்ஸ்,**

நெ. 57, வெங்கட்ராமய்யர் தெரு, மின்ட் போஸ்ட் சென்னை-1.